Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 14/00

දිනමුරසු වාරමලර් ஏப்ரல் 14-20, 2002

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 455



## ரவூப் ஹக்கீமின் அமைதி!

## இடைக்கால நிர்வாகசபை மாறிவரும் சூழ்நிலை

## வாசக நெஞ்சங்களுக்கு முரசின் இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

# ஆன்மீகம்



## ஆலயத்தின் அவசியம்

மக்களின் நன்மைக்காக ஆலயம் அமைத்து வழிபடுகின்றோம். ஆலயத்தில் மக்கள் அனைவரின் சார்பிலும் பூசைகள் நடைபெறுகின்றன. அவ்வப்போது ஆலய தரிசனம் செய்து இறைவன் நினைவினை உள்ளத்தில் நிலைபெறச் செய்ய ஆலயம் அவசியமாகின்றது.

இறைவனை ஒரு மனதோடு வழிபடுவதற்குரிய அமைதியான தூயஇடம் ஆலயத்தின் மூலம் கிடைக்கின்றது. வீடுகளில் அந்தவிதமான அமைதியான சூழ்நிலை எல்லோருக்கும் கிடைப்பதில்லை.

பசுவின் உடலெங்கும் பால் வியாபித்திருந்தாலும் அதன் மடுவிலிருந்தே நாம் பாலைப் பெறமுடியும். அது போலவே எங்கும் இறைவன் இருந்தாலும் கோவிலிலுள்ள திருவுருவங்களின் மூலம் வழிபடுவதாலேயே அவனை எளிதில் அடைய முடிகிறது. பூமியின் அடியில் எங்கும் தண்ணீர் இருந்தாலும் கிணற்றின் மூலமே நமக்குத் தண்ணீர் கிடைக்கின்றது, அது போல் இறைவன் அருள்பெற வேண்டுமாயின் ஆலயத்திற்குச் செல்லவேண்டியது அவசியமாகின்றது.

சிவஸ்ரீ அ. அரசரெத்தினம், சேனையூர்.

## பிள்ளைகளுக்கு இடறலாக இருக்காதீர்கள்

குழந்தைகளை இயேசு தொடவேண்டுமென்று அவரிடம் அவர்களைக் கொண்டு வந்த போது, சீடர்கள் அவர்களை அதட்டினர். இயேசுவோ அவர்களை அழைத்து "பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள்; அவர்களைத் தடுக்க வேண்டாம்; ஏனெனில் கடவுளின் அரசு இத்தகையோரதே!" என்று கூறினார். இந்த நிகழ்வானது லூக் 18:15-17 வசனங்களில் கூறப்படுகிறது.

ஆனால், இன்று பெரும்பாலான பெற்றோர் பிள்ளைகளின் ஞானகாரியங்களிலும், ஆன்மீக நெறிமுறைகளைப் பின்பற்றுவதற்கும் தடையாக உள்ளனர். இவற்றைவிட மேலதிக வகுப்புக்கள், ஆடம்பரப் பயணங்கள் என்ற குறுகிய வட்டத்துள் பிள்ளைகளைத் திணித்து அவர்கள் தெய்வ பயமற்றவர்களாகவும், துன்மார்க்க நெறிகளிலும் நடக்கக் காரணகர்த்தாக்களாகின்றனர். இத்தகைய பெற்றோர் நிச்சயம் இறைவனின் முன் பதில் கூறவேண்டியவர்களாக உள்ளனர். இதனாலேயே இயேசு, "சிறுவருள் ஒருவனுக்கு இடறலாக இருப்பவன் கழுத்தில் பெரிய இயந்திரக் கல்லைக் கட்டி அவனைக் கடலில் தள்ளுவது நலம்" என்று கூறியுள்ளார்.

எனவே, பெற்றோர், பெரியோரே! உங்கள் பிள்ளைகளை தெய்வபயமுள்ளவர்களாக, இறைவனின் அன்புக்குழந்தைகளாக, ஞானத்துடன் பிறருக்கு முன்மாதிரியாக நடக்க வழிகாட்டுங்கள். ஏனெனில், சிறுபிள்ளைகள் மேல் இறைவன் விசேட அன்புள்ளவராக இருக்கின்றார்.

வி. மரிய சுசிலா, சிலாபம்.

## ஆட்சி அதிகாரம் யாருக்கு?

"ஓ அப்துர் ரஹ்மானே! ஆட்சியை விரும்பாதீர், ஆட்சியைக் கேட்டுப் பெறுவீரேயானால் அதனிடம் நீர் ஒப்படைக்கப்படுவீர். கேட்காமலேயே ஆட்சி புரியும் வாய்ப்புக் கிடைத்துவிடுமாயின் அல்லாஹ் உனக்கு உதவி புரிவான்"

**அறிவிப்பாளர்: அப்துர் ரஹ்மான்,**
**பின்சும்ரா- ஆதாரம்: புஹாரி**

ஆட்சி புரிதல் ஆட்சியதிகாரத்தில் அமர்தல் என்பது மிகவும் ஆபத்தான பொறுப்பாகும். அறிவுள்ள எந்த மனிதனும் அதற்காக ஆசைப்படமாட்டார். உண்மையான ஆட்சியாளர் தன்னுடைய பொறுப்புக்களை நிறைவேற்றும் போது அல்லாஹ்வின் அருள் தனக்கு உதவியாக நிற்பதை அவர் காண்பார். மேலும், அவர் சமூகத்தை நீதியாக நடத்துகின்றாரெனின் அல்லாஹ் அவருக்கு ஈருலகிலும் விசேட அந்தஸ்தை வழங்குகின்றான்.

மாறாக சமூகத்தை வழி நடத்தும் ஆட்சியாளர் அநீதியாக நடப்பாரேயானால் அவர் அநியாயத்திற்கு ஆளாக்கப்பட்டவன். அடக்கப்பட்டவன். உரிமைகள் பறிக்கப்பட்டவன். இவர்களின் பிரார்த்தனைகளுக்குப் பயந்து கொள்ளட்டும்.

அப்துல்லா தப்ரீஸ், மாபோல, வத்தளை.

## கவிதைப் போட்டி இல. 452

பரிசுக்குரிய கவிதை

### இளைப்பாறும்போது

நாடுவிட்டு நாடோடி
நடுக்கடலில் தவிப்பதுபோல்
திக்கொடு திசையறியா நீங்கள்
Book உடன்
புரண்டு படித்திடினும்
தூங்கிவிட்டால்,
பாவம் புகையிரதம்
என்ன செய்யும்.

கே. ஸ்ரீகாந்த்-யாழ்ப்பாணம்.

இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### சொல்லுங்களேன்!

நம்பி வந்த ஏஜண்டோ!
நட்டாற்றில் தள்ளிவிட
கால் வயிற்று கஞ்சிக்காக
கடல் கடந்து வந்த மக்காள்
விதியதனை நொந்து கொண்டு
வீதியோரம் படுத்துறங்கும்
உடன்பிறவா உள்ளங்கள்
எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்?

ஹப்புத்தளையூர்-மனோ கோபாலன்.

### அபாக்கியவான்கள்

இத்தாரி செல்லும்
இலட்சியம் ஈடேறாததால்
இலட்சங்களை இழந்து
அகதி முகாமில் இன்னலுறும்
அபாக்கியவான்கள்.

ஏ.எம். அல்-அக்தர்-ஏறாவூர்-03.



### உத்தேஷம்

வறுமைக் காற்றை
சுவாசிப்பவர்களே
எப்போது எழும்புவதாக
உத்தேஷம்!

ஜுனைட் றிஸாத்-
மூதூர்-05.

### எங்களது உயிருக்கு...!

தந்தை உயிரைப் பறித்தது செல்லடி,
தாய் உயிரைப் பறித்தது அவர்களின்
பொல்லடி
வீட்டை இடித்தது பீப்பாக்குண்டு;
ஒரே ஒரு அண்ணனின்
உயிரைக் கூட பறித்தது அதன்
துணைக் குண்டு.
இனி; நாங்கள் அனாதைகள்
தண்டவாளம் எங்கள் இருப்பிடம்.

செல். உமாபதி-மண்டூர்.

### நிம்மதிப் பெருமூச்சு

வீட்டில் படுத்தாலென்ன
வீதியில் படுத்தாலென்ன
நிம்மதிப் பெருமூச்சை சுதந்திரமாய்...
சுவாசிக்க முடிகின்றதே!
இதுவே நிரந்தரமானால்
இப் பூமியை விட சுவர்க்க பூமி...
வேறேதுமுளதோ!

கே. பத்மநாதன்-கந்தேகெதற.

### யார்...?

வீட்டைத் தொலைத்தோம்-பிறகு
நாட்டைத் தொலைத்தோம்...
நித்திரையின்றி நிம்மதியின்றி
நாட்டாற்றில் தவிக்கிறோம்
இப்போது
எம்மைக் கைகொடுத்துக்
கரையேற்றிட யாருளர்?

தாரபுரக் கலையன்பன்-
எஸ்.ஏ.எம். நிலாம்.

### பறைசாற்றுவீர்

ஊரிழந்தீர்
உரிமையிழந்தீர்
ஊண் தானும் காணாது.
வீதி வந்தீர்;
இவையெல்லாம் கண்டவையே!
உந்தனுக்கு சாலப்பெரிய
புகையிரதமும்
ஓர் அற்பமே.
பறைசாற்றுவீர் பாரினிற்கு.

எம்.எம். யாஸார்-நீர்கொழும்பு.

### சத்தம்

இதுவரை கேட்டதடி
வெடிகுண்டுச் சத்தம்,
இப்போ கேக்குதடி
யாழ்தேவி ரயிலின் சத்தம்!

அப்புத்தளை-ஸ்ரீதரன்.

## கவிதைப் போட்டி இல. 455



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 20.04.2002

கவிதைப் போட்டி இல.455
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### எது!

பாதை திறந்தும்
பயணம் கிடைக்காத மயக்கமோ
பட்டங் கிடைத்தும்
பதவி கிடைக்காத இயக்கமோ?

வி. சுவர்ணா- ஆரையம்பதி-01.

### கனவு மொழி!?

பாயில்லை சாய்வதற்கு;
ஹாயாகத் தூங்குகிறோம்!
நாயாக அலையவிட்டனரே..
பேயாக பணத்தாசைக்காரர்...!?

செல்வி. ராஸியா வாஹிட்-பதுளை.

### நிகழ்காலம்

தாய்மடியில் இருந்து
நிலாச்சோறு உண்டோம்
அது இறந்தகாலம்
தாய்நாடே இல்லாமல்
தண்டவாளத்தில் இருந்து
நிலவை ரசிக்கின்றோம்
இது நிகழ்காலம்.

உ. சாந்தினி-
பசறை.

### மரலட்டும் சமாதானம்

நாட்டை சுற்றிப்பார்க்கவா
வீட்டை பூட்டாமலேயே
விரட்டியடிக்கப்பட்டோம்.
வானமே கூரையாக
வாழுவது எத்தனைநாள்.
சமாதானத்துக்காய்
சாகும் வரை போராடுவோம்.
சிதையில் வேக நேர்ந்தால்
அப்போதும் சிரித்திருப்போம்.

பி. விக்னேஸ்வரன்-ஹட்டன்.

# உங்கள் பக்கம்

## சட்டமா? அரசியலா...?

பயங்கரவாத தடைச்சட்டத்தின் 5ஆவது பிரிவின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கடந்த நாட்களில் சட்டமா அதிபர் திணைக்களம் சார்பாக கூறப்பட்டது. அதாவது புலிகள் குறித்து தகவல் தெரிந்து கொண்டு அந்தத் தகவலை பொலிஸாருக்கு வழங்காத குற்றத்திற்காக கைது செய்யப்பட்டவர்களே விடுவிக்கப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் 5ஆவது பிரிவன் கீழ் கைது செய்யப்பட்ட நூற்றுக் கணக்கான அரசியல் கைதிகள் வருடக் கணக்காக சிறையில் வாடுகிறார்கள். இவர்களில் சிலர் 6முதல் 8 வருடங்கள் வரைகூட சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள். இதே பயங்கரவாத தடைச்சட்டம்தான் அன்றும் இருந்தது. இதே சட்டமா அதிபர் திணைக்களம்தான் அன்றைக்கும் செயற்பட்டது. இடையில் புதிய அரசு எவ்வித சட்டத்திருத்தத்தையும் கொண்டுவரவில்லை. ஆனால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிக்கலாம் என்று சட்டமா அதிபர் இன்று கூறுகிறார். அப்படியாயின் கடந்த பல வருடங்களாக இந்த அப்பாவி தமிழ் இளைஞர்கள் அநியாயமாகவே தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள் என்பதை சட்டமா அதிபர் ஒப்புக் கொள்வதாகவே கருதவேண்டியுள்ளது. அவ்வாறாயின் இந்த இளைஞர்கள் சிறையில் கழித்த காலப்பகுதிக்கும் அதனால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கும் யார் பொறுப்பேற்பது. சட்டமா? அரசியலா...?

இந்த கேள்விக்கான பதிலை பொறுப்புள்ளவர்கள் தெளிவு படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளும் அதேவேளை இவ்வாறான சிறிய குற்றங்களின் பேரில் தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டுவது உடனடியாக நிறுத்தப்படவேண்டும். இன்னும் காலம் கடந்து மற்றொரு சட்டப்பிரிவின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கக் கூடும். அதனை இப்போதே பரிசீலித்தால் பலர் அநியாயமாக சிறையில் வாடுவதை தவிர்க்கலாம்.

**ரமேஷ்காந்த்-களுத்துறை.**

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

# வாசக(ர்) சாலை

மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களுக்கு,

கண்கவர் அழகிய முகப்புடன் தரமான சுவையான அம்சங்களை சுமந்துவரும் இனிய முரசே, உனது படைப்புகள் யாவும் அற்புதமே. 'ஹென்றிபோர்ட்டின் உறுதி ஆக்கம் தந்த அறிவுரைகள் பயன்மிக்கதாக இருந்தது. சந்தோஷம் வேண்டுமா குறிப்புகளும் அருமை. 'தாய்மை', 'ஏக்கம்' சிறுகதைகள் இரண்டும் சிறப்பாக இருந்தது. பாராட்டுக்கள். முரசின் பணி தொடர வாழ்த்துக்கள்.

மங்களா வாமதேவன்-
தங்களா வாமதேவன், மட்டக்களப்பு.

முரசே!

அன்பிற்கினிய முரசே... நீ தினமும் சுமந்து வரும் ஒவ்வொரு விடயங்களும் சூப்பர். உதாரணமாக தலிபான் உருவாக்கம், சிறுவர் மலர், பல சிறு கதைகள், உலக செய்திகள் அனைத்தும் சூப்பர் எனக்கு உன்னை பிடித்திருக்கிறது. என்னையும் உன் வாசகராக ஏற்றுக் கொள்ளவும்.

எஸ். கமலேஸ்வரி, தெல்தோட்ட குரூப், கலஹா.

தினமுரசு வாரமலரில் வரும் அனைத்து அம்சங்களும் என்னைக் கவர்ந்தவை. குறப்பாக காதில பூ கந்தசாமி, இராஜதந்திரியின் அரசியல் அலசல், சிந்தியா பதில்கள் என்பன சிறப்பாக அமைகின்றன. முரசின் பணி தொடர வாழ்த்துக்கள்.

பர்ஸானா, மாத்தளை.

அன்பின் முரசே!

"பார்த்ததும் பரவசத்துடன் பார்க்கவைக்கும் குளுமையான நிறம் அத்துடன் மனதைக் குதூகலப்படுத்த வைப்பதன் இரகசியம் உள்ளே தேடிப்பார்க்காமலே தலைப்பிலேயே புரிகிறது. அதிலும் புதியதாக தரும் சாதாரணன் கடிதம். சிறப்புக்கவிதை, நெட்டிலிருந்து பட்டென்று தட்டிவிட சட்டென்று தரும் தகவல்கள் எவ்வாறு உன்னைப் புகழ்வதென்றே புரியவில்லை. "சூடு-சுவை-சுவாரஸியம் அது தான் தினமுரசு" உண்மைதான் என்பதை நீ ஒவ்வொரு முரசிலும் நிரூபித்து விடுவாய். மேலும் புதிய புதிய தகவலோடு நீ வளர என் இனிய வாழ்த்துக்கள்.

ஜி. கே. றஞ்ஜினி, நெடுந்தீவு.



முக்கனி முரசே!

முரசு 453ல் வந்த சாதாரணன் எழுவது, எக்ஸ்ரே ரிப்போர்ட், கூடங்குளத்தில் அணுக்கசிவு ஏற்பட்டால் இலங்கையின் வடபகுதி அழியுமோ?, அத்துடன் கம்போடியாவில் உள்ள மண்டையோட்டைப் பார்த்துக் கவலையடைந்தேன். இப்படியான ஆதாரம் இருந்தும் பாலஸ்தீனர்கள் இஸ்ரேலியரை வெட்டி, சுட்டு, கட்டியிழுத்துச் செல்லும் காட்சி மனதைக்குடைந்தது. உன் பணி என்றும் தொடரட்டும்.

ச. நிதிபன்-யாழ்ப்பாணம்.

தினமுரசு வாரமலர் கடந்த வாரம் எமக்கு உரிய நேரத்தில் கிடைக்கவில்லை. வழமைபோல வியாழக்கிழமை காலையில் பத்திரிகை வாங்கலாம் என்று காத்திருந்த எனக்கு ஏமாற்றமே கிடைத்தது. 'தினமுரசு இன்னும் வரவில்லை' என்ற பத்திரிகை முகவரின் பதிலால் என்னைப் போலவே ஏமாற்றமடைந்த பலர் முணுமுணுத்தபடி செல்வதை காணமுடிந்தது.

தினமுரசை கிழக்கில் விற்பனை செய்வது தொடர்பில் சில அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருப்பதாக பின்னர்தான் அறியக் கிடைத்தது. வடக்கு-கிழக்கு பிரதேசங்கள் ஒட்டுமொத்தமாக ஜனநாயகத்தை நோக்கி திரும்பிக் கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில், தமிழ் எழுச்சி கரைபுரளும் இன்றைய நாட்களில் முரசு போன்ற மக்கள் அபிமானம் பெற்ற ஒரு பத்திரிகையை விற்பனை செய்யக் கூடாதெனக் கூறுவது எந்தவகை ஜன நாயகத்தைச் சாரும் என்று புரியவில்லை.

ரி. ரகுநாதன்- ஆரையம்பதி.

மட்டக்களப்பு வாசர்களாகிய எமக்கு கடந்த வார தினமுரசு தாமதித்தே கிடைத்தது. நாம் வியாழன் தோறும் முரசை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறோம். சில விரும்பத்தகாத அழுத்தங்கள் காரணமாகவே பத்திரிகை தாமதமாக வந்த சேர்ந்ததாக அறிந்தோம். முரசுக்கு எப்பொழுதும் எமது ஆதரவு உண்டு.

ரம்யா பார்த்தீபன்,
செங்கலடி.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தாலோ, உங்கள் முகவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# வவுனியா அலுவலகத்தில் வந்து குவியும் முறைப்பாடுகள்

## சமூக விரோத செயல்களைத் தடுப்பதில் புலிகள் மும்முரம்

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை அடுத்து அரசாங்கக் கட்டுப்பாட்டிலுள்ள நகரங்களுக்குள் பிரவேசித்திருக்கும் விடுதலைப் புலி உறுப்பினர்கள் அந்தப் பகுதிகளில் நடைபெறும் சமூகவிரோத செயல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகக் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளனர்.

வவுனியாவில் திருட்டு, கப்பம் பெறுதல், கசிப்பு விற்பனை, போதைப் பொருள் வியாபாரம் போன்றவற்றில் ஈடுபடும் நபர்கள் அங்கு வந்துள்ள புலி-அரசியல் பிரிவு உறுப்பினர்களால் ஏற்கனவே எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய செயல்களை நிறுத்திக்கொள்ளுமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு தனிப்பட்ட ரீதியிலும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக அறியவருகிறது. பொது மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளையடுத்தே புலிகளால் இந்த எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. சமூக விரோத செயல்களில் ஈடுபடும் சிலரை புலி உறுப்பினர்கள் நேரடியாகச் சென்று சந்தித்து குற்றச்செயல்களைத் தவிர்க்குமாறு கேட்டுள்ளனர்.

வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் உள்ள அரசாங்கக் காரியாலயங்களில் இலஞ்சம் பெறும் அரச ஊழியர்கள் பலருக்கு நேரடி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. உயர் மட்ட நிருவாக அதிகாரிகள் மீதும் புலிகளின் நெற்றிக்கண் திரும்பியிருப்பதாக வவுனியா தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் கசிப்பு விற்பனை, காணித்தகராறுகள் உள்ளிட்ட 60க்கும் மேற்பட்ட பிரச்சனைகள் குறித்து முறைப்பாடுகள் பொது மக்களால் புலிகளின் வவுனியா அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவையும், அதனை அண்டிய பகுதிகளிலும் இடம் பெறும் செயல்களைத் தடுத்து நிறுத்தத் தம்மாலான அனைத்து உதவிகளையும் செய்வதாக அங்கு வந்துள்ள புலி உறுப்பினர்கள் தமக்குத் தெரியப்படுத்தியதாகப் பிரதேசத்தின் பிரதம சங்க நாயக்கரும் கூறியுள்ளார்.

# பேருவளை சம்பவத்தில் பொலிஸார் நடந்துகொண்டவிதம் குறித்து விசாரணை

பேருவளையில் நான்கு முஸ்லிம் இளைஞர்கள் உயிரிழப்பதற்குக் காரணமாக இருந்த தகராறின் சூத்திரதாரிகளைக் கண்டறிய முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனப் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் சார்பாக வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்தவாரம் பேருவளை மருதானை என்ற இடத்தில் முஸ்லிம்களுக்கும், சிங்களவர்களுக்குமிடையில் மீன்பிடிப்படகுகளை நிறுத்துவது தொடர்பான வாய்த்தர்க்கத்தில் ஆரம்பித்த மோதல் 4 முஸ்லிம் இளைஞர்களைப் பலி கொண்டதுடன், வீடுகள் மற்றும் பெருந்தொகையான சொத்துக்களுக்கும் சேதம் ஏற்படக்காரணமாக அமைந்துவிட்டது. இந்த சம்பவத்தின் போது பொலீஸார் நடந்து கொண்ட விதம் குறித்துப் பிரதேச மக்களால் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாகப் பாரபட்சமற்ற விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கரால் உள்துறை அமைச்சருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# மாவீரர் உரையைக் காண்பித்து புலிகளின் பெயரில் நிதி வசூலித்த

## சிங்கள நபர் பொலிஸாரினால் கைது!

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் சிங்கள அரசியல் கைதிகளை வாழவைக்க ஒரு லட்சம் ரூபா நிதியுதவி செய்ய வேண்டுமெனக் கேட்டு புலிகளின் பெயரில் வர்த்தகர்களுக்குக் கடிதம் எழுதிய சிங்கள நபர் ஒருவர் அந்தப் பணத்தின் ஒரு தொகையைப் பெற்றுக்கொள்ளும் போது பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது; புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் மாவீரர் தினஉரையின் சிங்களப் பிரதிகளைக் கொழும்பின் புறநகர்ப்பகுதியில் உள்ள வர்த்தக நிறுவனங்களுக்கு அனுப்பிய ஒருவர், தனக்குப் புலிகளுடன் தொடர்பிருப்பதாகவும், சிறையில் உள்ள தமிழ் சிங்கள இளைஞர்களின் நலனுக்காக ஒரு லட்சம் ரூபா நிதியுதவி வழங்கவேண்டும் என்று எழுதப்பட்ட கடிதம் ஒன்றையும் இணைத்து அனுப்பியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக குறிப்பிட்ட வர்த்தக நிறுவனங்களால் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்துப் பணத்தை வழங்குவது போன்ற நாடகம் ஒன்றில் சந்தேகநபர் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டார்.

மிரிஹானையைச் சேர்ந்த இவர் ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடன் தொல்லையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கும்தான் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் புலி எனக்கூறி ஏதேனும் சம்பாதிக்க முடியுமா? எனச் சிந்தித்ததாக சந்தேக நபர் தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# புலிகள் மீதான தடை முதலாம் திகதி நீக்கப்படும்

## அமைச்சர் அறிவிப்பு!

விடுதலைப் புலிகள் மீது 1998ம் ஆண்டு மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட தடை மே முதலாம் திகதி விலக்கப்படும் என்று ஐக்கிய தேசிய முன்னணி அமைச்சரான தி.மகேஸ்வரன் தெரிவித்தார். யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர்களின் மாநாடு யாழ்ப்பாணத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போதே இந்துசமய விவகார அமைச்சர் இத்தகவலை வெளியிட்டார்.

வார இறுதியில் ஏ9 பாதை திறப்பதையொட்டி யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த காணியமைச்சர் கலாநிதி ராஜித சேனாரத்னவை வரவேற்குமுகமாக இம் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்குமிடையில் நடைபெறவிருக்கும் பேச்சு வார்த்தைகளுக்கு ஒரு சிக்கல் மிகுந்த முட்டுக்கட்டையாக புலிகள் மீதான தடை விளங்கி வந்துள்ளது. இத்தடையை விலக்குவது தொடர்பாக ஐ.தே.கட்சியின் நிலைப்பாடு குறித்து அமைச்சர் மகேஸ்வரனின் அறிவித்தலே முதன்முதலாக வெளிவந்துள்ளது.

தாய்லாந்தில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் பேச்சு வார்த்தை தொடங்குவதற்கு முன்னதாக விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படுவதற்கு அரசாங்கம் ஆயத்தமாகிவருவதாக லண்டனிலிருந்து வெளியாகும் "தமிழ் கார்டியன்" இதழ் இவ்வார ஆரம்பத்தில் செய்தி வெளியிட்டிருந்தது.

நோர்வே அரசாங்கத்தின் இராஜாங்க நடவடிக்கைகள் கடந்த இரு வாரங்களில் முடுக்கி விடப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை அரசாங்கம் தடைநீக்கம் தொடர்பான சட்ட நடவடிக்கைகளை முடித்துவிட்டதாக அரசியல் வட்டாரங்களைச் சுட்டிக் காட்டி "கார்டியன்" தகவல் வெளியிட்டிருந்தது. தடைசெய்யப்பட்ட ஓர் இயக்கம் என்ற கோதாவில் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வது உசிதமானதல்ல என்று விடுதலைப் புலிகள் பலதடவைகள் கூறிவந்துள்ளனர்.

# புலிகளின் அரசியல் செயற்பாடுகள்

## யாழ் நகரில்....

திங்களன்று ஏ9 வீதி திறக்கப்பட்டதும், ஆரம்பகட்டமாக புலிகளின் அரசியல் பிரிவைச் சேர்ந்த சுமார் 15 உறுப்பினர்கள் தமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவென யாழ்ப்பாணம் சென்றுள்ளனர்.

பாதை திறப்பை முன்னிட்டு நடைபெற்ற வைபவத்தின் பின்னர் இவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் உத்தியோகபூர்வமாகப் பிரவேசித்தனர். இந்தப் புலி உறுப்பினர்களுக்குப் பொது மக்களிடமிருந்து உற்சாகமான வரவேற்புக் கிடைத்தது.

இதேவேளை தற்போது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வருகை தந்திருக்கும் புலிகள் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள நகரங்களில் தமது அரசியல் நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் ஏற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். ■

# இலங்கை அகதிகள் நாடுதிரும்ப விருப்பம்

இந்தியாவில் தங்கியுள்ள இலங்கை அகதிகளில் பெரும்பாலானோர் வடக்கு கிழக்கில் மீண்டும் நிரந்தர அமைதி தோன்றினால், உடனடியாக இலங்கை திரும்ப ஆர்வம் கொண்டுள்ளனர்.

தற்போது இந்தியாவில் சுமார் ஒரு லட்சம் தமிழர்கள் அகதிகளாகத் தங்கியுள்ளார்கள். அமைதி வழிமுறைகள் நிரந்தர சமாதானத்திற்கான சமிக்ஞையை காட்டியவுடன் வெளிநாடுகளை தங்கியுள்ள இலங்கை அகதிகள் திருப்பியனுப்புவது பற்றி ஐரோப்பிய நாடுகளும் ஆராய்ந்து வருகின்றன.

# ஸ்ரீகாந்தா உறுதி

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் புலிகளால் கடத்திச் செல்லப்பட்ட "செல்வி"யை விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பதாக ரெலோ இயக்க முதல்வர் ஸ்ரீகாந்தா வாக்குறுதியளித்துள்ளார்.

கனேடிய தமிழ் வானொலி ஒன்றிற்குக் கடந்த 5ம் திகதி வழங்கிய பேட்டியின் போது நிருபரின் கேள்விக்குப் பதிலளித்த ஸ்ரீகாந்தா, புலிகளுடன் கதைத்து செல்வியை விடுவிக்க ஆவன செய்வதாக வாக்குறுதியளித்தார். ■

# பி.எஸ்.டி. தலைவர் கைது

## ஜனாதிபதி கடும் கண்டனம்

ஜனாதிபதிப் பாதுகாப்புப் பிரிவின் தலைவர் நிஹால் கருணாரத்ன கைது செய்யப்பட்டமை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கடும் அதிருப்தி தெரிவித்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

கடுமையான வார்த்தைப் பிரயோகங்களுடன் நான்கு பக்கங்களில் எழுதப்பட்டிருந்த அந்தக் கடிதத்தில் நிஹால் கருணாரத்னவின் கைது தொடர்பில் உள்துறை அமைச்சர் நடந்துகொண்ட விதம் முற்றிலும் தவறானதென்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான நெருக்கடிகளைக் கொடுத்துத் தன்னை தேசிய அரசாங்கம் ஒன்றிற்குச் சம்மதிக்கச் செய்ய பிரதமர் முயற்சித்தால் அது முட்டாள் தனமான செயல் என ஜனாதிபதி தனது கடிதத்தில் கூறியிருக்கிறார்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, நீதிமன்ற உத்தரவை மீறியதாலேயே நிஹால் கருணாரத்ன கைது செய்யப்பட்டதாகவும், ஜனாதிபதியே அவ்வாறு செய்யத் தூண்டினார் எனத் தனக்குத் தெரியவந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# ஒப்பந்தத்தில் முஸ்லிம்களைப் பற்றிக் குறிப்பிடுவது அவசியமில்லை

**-அமைச்சர் தயாரத்ன-**

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் தங்களுக்கு பிரச்சனைகள் தோன்றியிருப்பதாக முஸ்லிம்கள் கூறுவது தவறானதென சுகாதார அமைச்சரும் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பி.தயாரத்ன கூறியுள்ளார்.

முஸ்லிம்கள் இந்த ஒப்பந்தத்தில் தங்களுக்கென தனியான ஏற்பாடுகள் இடம்பெறவேண்டும் என்று கோரினால், கிழக்கில் வாழும் சிங்களவர்களும் அவ்வாறு கேட்கக் கூடும். அதனால், முஸ்லிம்களுக்கென்று பிரத்தியேக ஏற்பாடுகள் அவசியமற்றவை என்றும் அவர் கூறியிருக்கிறார்.

முஸ்லிம்களுக்கென விசேடமாக எதனையும் ஒப்பந்தத்தில் குறிப்பிடுவதாயின் சிங்களவர்கள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். சகல இனமக்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்படும் விதத்தில் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டால், இந்தப் பிரச்சனையைத் தீர்க்கலாம் எனவும் தயாரத்ன கூறினார்.

# நான் சிங்களவராக இருந்தால்...

"நான் சிங்களவராக இருந்தால் புலிகள் இயக்கத்தை நம்பப் போவதில்லை" என்று பிரபல பத்திரிகையாளர் அனிதா பிரதாப் குறிப்பிட்டுள்ளார்.

"ஹிந்து" செய்தித்தாளுக்கு எழுதிய கட்டுரை ஒன்றிலேயே அனிதா பிரதாப் இவ்வாறு கூறியுள்ளார்.

புலிகள் இயக்கத்துடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருக்கும் ஒரு செய்தியாளராகக் கருதப்படும் இவர், அந்த இயக்கத்தின் நடவடிக்கைகள் குறித்து நூல் ஒன்றை அண்மையில் இலங்கையில் வெளியிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. ■

# முரசம்

## பாதை திறப்பு

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

யாழ்ப்பாணக்குடா நாட்டை நாட்டின் தென்பகுதியுடன் இணைக்கும் பிரதான போக்குவரத்துப் பாதை திறக்கப்பட்டுள்ளது.

ஏ9 வீதி என அனைவராலும் அழைக்கப்படும் இந்த வீதியில் பொது மக்கள் போக்குவரத்திற்கான ஏற்பாடுகள் இன்னமும் பூர்த்தியாகாத போதிலும், பாதை திறக்கப்பட்டதானது சகல தரப்புக்களாலும், மிகுந்த ஆர்வத்துடன் வரவேற்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பாதை மூடப்பட்டிருந்த கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேற்பட்ட காலப்பகுதியில் வடபகுதி மக்கள் அனுபவித்த போக்குவரத்து, பொருளாதார நெருக்கடிகள் கொஞ்ச நஞ்சமல்ல.

யாழ்ப்பாணத்திற்கும் கொழும்பிற்கும் இடையிலான விமானசேவை சீரற்ற நிலையிலேயே இயங்கியது.

கப்பல் சேவை அதை விட மோசமாகக் காணப்பட்டது. எப்படியாக இருந்தபோதிலும் தமது அத்தியாவசிய தேவைகளுக்காக நாட்டின் தென்பகுதிக்கு வரவேண்டிய மக்களும், தெற்கிலிருந்து வடக்கிற்கு போகவேண்டியவர்களும் தரகர்களால் சாறுபிழிந்தெடுக்கப்படும் விமானசேவையையும், கப்பல் சேவையையுமே நம்பி இருக்க வேண்டியிருந்தது.

தரைவழிப்பாதை தடைப்பட்டிருந்ததால் உணவுப் பொருட்கள், உயிர் காக்கும் மருந்துப் பொருட்கள் என்று சகலதையும் யாழ் குடாநாட்டில் பல மடங்கு விலைக்கே வாங்க வேண்டியிருந்தது.

இனிமேல் இந்த நிலைமைகளில் மாற்றத்தை எதிர்பார்க்கலாம்.

கப்பல் கட்டணம் என்ற பெயரில் அத்தியாவசியப் பொருட்களின் விலையை உயர்த்தி மக்களைச் சுரண்டும் வர்த்தகர்களிடமிருந்து யாழ் மக்களுக்கு ஓரளவு விமோசனம் கிட்டும்.

கூடிய விரைவில் பொது மக்கள் போக்குவரத்துக்கென ஏ9 வீதி சீராகுமாயின் அது மேலும் பயனுள்ளதாக இருக்கும்.

அரசு-புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையில் பொது மக்களுக்கு நேரடி நன்மை பயக்கும் ஓர் அம்சமாகப் பாதை திறக்கப்பட்டதைக் கருதலாம்.

குடாநாட்டுக்கான ரயில் பாதையும் சீராக்கப்பட்டால் வடபகுதி மக்களின் பல்வேறு பிரச்சனைகளுக்கு அது தீர்வாக அமையும்.

■■

*மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# இடைக்கால நிர்வாகசபை மாறிவரும் சூழ்நிலை

நரன்

வடக்கு கிழக்குக்கான இடைக் கால நிர்வாக சபை என்பது இப்போது மீண்டும் ஒரு பரபரப் பான விடயமாக அரங்கேற வுள்ளது.

மீண்டும் மீண்டும் பேசப்பட்டு பின்னர் கிடப்பில் போடப்பட்டு வந்த இந்த அரசியல் ஏற்பாடு இப்போது புதிய வடிவத்தில் வேறுபட்ட கருத்தில் அமைவுறு மெனவே எதிர்பார்க்கப் படுகிறது.

முன்னர் அரச தரப்பாலும், உத்தரவாதிகளாக செயற்பட்ட இந்தியாவாலும் முன்மொழியப்பட்ட போதும் புலிகளால் நிராகரிக்கப் பட்டு வந்த நிலைமை மாறி, இப்போது புலிகளால் பேச்சுவார்த்தைகளின் போது ஒரு முன்னேற்பாடாகக் கோரப்படும் விடயமாக இந்த இடைக்கால நிர்வாக சபை ஆகியுள்ளது.

இது புலிகளின் தந்திரோபாயங்கள் பாரிய அளவு மாற்றம் பெற்றுள்ளமையை எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

புலிகள் விடாப்பிடியான, தளர்வற்ற கடும்கோட் பாட்டாளர்களாக வெளியுலகால் பார்க்கப் பட்ட போதி லும் அவர்கள் மிகவும் நெகிழ்வுப் போக்குக் கொண்ட சாதுரியமான அணுகுமுறைகளை முன்னரும் கடைப் பிடித்திருக்கிறார்கள்.

இலங்கை அரசாங்கத்தைப் பிரதான எதிரியாகக் கொண்டு ஆயுதப் போராட்டத்தினை நடத்தியவர்கள் ஒருகட்டத்தில் பிரேமதாஸா அரசாங்கத்துடன் இணக்கத்துக்கு வந்து அவரிடமே ஆயுதம், பணம் ஆகியவற்றைப் பெற்று இந்தியாவை எதிர்த்தமை எவரும் எதிர்பார்த்திராத சாதுரியமான அரசியல் சாணக்கியமே.

முன்னர் இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்ட போது, வடக்கு கிழக்கு மாகாணசபை அமைப்பதற் கான ஒரு இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்து வது பற்றி இணக்கம் காணப்பட்டது.

அதில் புலிகளின் தலைமையின் கீழ் அவர்களின் 7 உறுப்பினர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒரு பிரதிநிதியுட்பட அரசாங்க மற்றம் முஸ்லிம் தரப்பு பிரதிநிதிகளும் அடங்கியிருப்பதாக அச் சபை முன் மொழியப்பட்டது.

அச் சபைக்கான முதலமைச்சராகத் தெரிவு செய் வதற்கு மூன்று பிரதிநிதிகளின் பெயர்களைப் புலிகள் வழங்க அதில் ஒன்றை அரசாங்கம் தெரிவு செய்யலா மென ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இதன்படி புலிகள் முதலமைச்சருக்கான தமது சிபார்சுகளாக மாத்தையா, முன்னாள் ஏ.ஜி.ஏ பத்ம நாதன், சி.வீ.கே. சிவஞானம் ஆகியோரின் பெயர் களைச் சிபாரிசு செய்திருந்தார்கள்.

இதில் அன்றைய ஜே.ஆர். அரசாங்கம் சி.வீ. கே. சிவஞானத்தை முதலமைச்சராக்குவதற்குத் தெரிவு செய்தது.

ஆனால் புலிகள் பத்மநாதனை முதலமைச்சராக்க வேண்டுமென வலியுறுத்தினார்கள்.

எனினும் இதில் பத்மநாதன் மீது வழக்கு இருந்த காரணத்தைச் சாட்டி அவரை முதலமைச்சராக்க முடியாதென மறுத்துவிட்டது.

இந்தப் பிணக்குடன், இழுபறி நிலையை அடைந்த இடைக்கால நிர்வாக ஏற்பாடு பின்னர் கும ரப்பா, புலேந்திரனாகிய புலிகளின் முக்கிய உறுப்பினர் கள் கடலில் வைத்துக் கைது செய்யப்பட்டு, கொழும்பு கொண்டு செல்லப்பட முற்பட்ட நிலைமையில் புலி களால் மேற்கொள்ளப்பட்ட திலீபனின் உண்ணா விரதத்தையும் அவரின் மரணத்தையும் அடுத்துக் குழம்புண்டு போனது.

அத்துடன் இம் மாகாணசபைத் தீர்வை நிராகரித்த புலிகள் இந்தியப் படைகளுடனான பெரும் மோதலில் இறங்கியது வரலாறு.

இவ்வாறு முதன் முதலில் தோன்றிய இடைக்கால நிர்வாக சபைக்கான ஏற்பாடு செயலற்றுப் போகவே, மாகாணசபைக்கான தேர்தல் வைக்கப்பட்டு வடக்கு கிழக்குக்கு ஈ.பி.ஆர்.எல். எவ்., ஈ.என்.டி.எல்.எப்., முஸ்லிம் காங்கிரஸ், யு.என்.பி. ஆகிய கட்சிகளடங்கிய ஈ.பி.ஆர்.எல்.எப். இன் வரதராஜப்பெருமாளை முதல மைச்சராகக் கொண்ட ஒரு மாகாண சபை இந்திய அரசின் துணையுடன் நிறுவப்பட்டது.

ஆயினும் ஜே. ஆருக்குப் பின்னர் ஜனாதிபதியாகிய பிரேமதாஸாவின் இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டாலும், அரசாங்கத்துக்கும் வடக்கு கிழக்கு மாகாண சபைக்கும் நிலவிய முறுகல் நிலையாலும், இவற்றுக்கு மேலாக புலிகளின் கடுமையான எதிர்ப்பாலும் ஒரு வருடம் நீடித்த அம் மாகாணசபை ஈற்றில் இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்தோடு தானே கலை யுண்டு போனது.

அப்போது, முதலமைச்சர் வரதராஜப் பெருமாள், 19 அம்சக் கோரிக்கை ஒன்றை முன்னிறுத்தி, அவை நிறைவேற்றப் படாத பட்சத்தில் இச் சபை ஈழ தேசத் துக்கான சபையாக செயற்படுமென்ற ஒரு தனிநாட்டுக் கான முன்றிவித்தலை விடுத்துவிட்டு இந்தியப் படைகளுடன் நாட்டை விட்டு வெளியேறினார்.

இதுவே ஒருதலைப் பட்சமான ஈழப் பிரகடனமென தென்னிலங்கை அரசியல் வாதிகளால் விமர்சிக்கப் பட்ட சம்பவமாகும்.

இச் சம்பவத்தின் தாக்கம் தற்போது சிந்திக்கப் படும் இடைக்கால சபை பற்றிய சந்தேகங்களுக்கும் பின்னணியாக இருக்கிறது.

வரதராஜப் பெருமாளின் வெளியேற்றத்தின் பின் பிரேமதாஸ அரசாங்கம் முதலமைச்சரின் ஆலோசனையின்றிக் கலைக்கப்பட முடியா தென்றிருந்த மாகாண சபைக்கான சரத்தை நீதிமன்றத் தீர்ப்பொன்றின் மூலம் தள்ளுபடி செய்து அம் மாகாணசபையை சட்டரீதியாகக் கலைத்தது.

அன்று கலைக்கப்பட்ட வடக்கு மாகாண சபை இன்று வரையும் இயங்கவேயில்லை.

அதேவேளை தமிழ் பேசும் மக்களுக்கான தீர்வாக முன்வைக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணசபை முடக்கப்பட்டிருக்க, ஏனைய மாகாணங்களுக்கான மாகாண சபைகள் தங்கு தடையின்றி இயங்கி வருகின்றன.

இது மிக மனவருத்தத்துக்குரிய ஒரு சாபக் கேடாக அமைந்திருந்தது.

மாறி மாறி வந்த அரசாங்கங்கள் எத்த னையோ தேர்தல்களை வைத்த போதிலும் வடக்கு கிழக்கு மாகாணசபைக்கான தேர்தலை மட்டும் நடத்தாது இடைநிறுத்தியிருந்தன.

அத் தேர்தலை நடத்துவதற்கான சூழ்நிலை இல்லையென்ற ஏற்க முடியாத காரணத்தையே அவை முன்வைத்து வந்தன.

1994 ஒகஸ்ட்டில் பாராளுமன்றத் தேர்தலை நடத்தியபோதும், புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த யாழ்ப்பாணத்தில் தேர்தலை நடத்த முடியா திருந்த நிலைமையிலும் வெறும் தீவுப் பகுதியில் மட்டுமே அத் தேர்தலை நடத்தி பாராளுமன்றத் தேர்தலை பூர்த்தி செய்ய முடிந்த அரசாங்கம் வடக்கு கிழக்கில் மாகாண சபை தேர்தலை நடத்துவது சாத்தியமில்லையெனக் கூறுவது ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு காரணமல்ல.


பேச்சுவார்த்தைகள் கட்டங்கட்டமாக நகர்ந்து ஈற்றில் ஒரு அரசியல் தீர்வை எட்டும் பட்சத்தில் அது புலிகளுக்கு இணக்கமான ஒரு தீர்வாகவும், அதை நடைமுறைப் படுத்தக்கூடிய சாத்தியங்களை உறுதிப்படுத்த முடியுமான தாகவும் காணப்படும் பட்சத்தில், புலிகள் தமது தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு அவ் அரசியல் தீர்வினடிப்படையில் செயலாற்ற முன்வரலாம்.


வடக்கு கிழக்கில், பொதுத் தேர்தல் மட்டு மல்ல, ஜனாதிபதித் தேர்தல்கள், உள்ளூராட்சி தேர்தல்களும் வைக்கப்பட்டிருந்தன.

உண்மையில் மாகாண சபைத் தேர்தலை வைக்காமைக்கு அடிப்படையான ஒரு அரசியல் காரணம் பின்னாலிருந்தது.

அதாவது வடக்கு கிழக்கு மாகாண சபை யில், வடக்கும் கிழக்கும் தற்காலிகமாக இணைக்கப் பட்டிருக்கிறது.

திரும்பவும் அப்படியே தேர்தலை வைத்தால் இந்த இணைப்பானது நிரந்தர இணைப்பாக உறுதிப்படுத்தப் பட்டுவிடும் என்ற அச்சமே இதன் அடிப்படைக் காரணம்.

எனவே வடக்கு கிழக்கைப் பிரிக்க வேண்டு மென்ற அரசியல் நோக்கம் கொண்ட அரசாங் கத்தின் சூத்திரதாரிகளே அதைத் தடுத்து வந்தனர்.

ஆனால் அதற்குப் பதிலாகத் தாம் ஒரு அரசியல் தீர்வொன்றை வரைவதாகச் சொல்லிக் காலம் கடத்தி வந்தனர்.

எனினும் மீண்டும் இடைக்கால நிர்வாக சபைக்கான கோரிக்கைகள் எழத்தான் செய் தன.

ஈ.பி.டி.பி. கட்சியினர் அன்றைய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திடம் இடைக்கால நிர்வாக சபையை வலியுறுத்தி வந்தனர்.

அப்போது அவர்களுக்குப் பாராளுமன்றத் தில் 9 உறுப்பினர்கள் இருந்ததுடன் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தவாறே அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கி வந்தனர்.

ஆனால் அவர்களின் இவ் இடைக்கால நிர்வாகக் கோரிக்கையை அப்போதிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப் பினர்கள் விரும்பவில்லை.

அவ்வாறான இடைக்கால நிர்வாக சபை உருவாகுமானால் அதில் 9 பாராளுமன்ற உறுப் பினர்களைக் கொண்டிருந்த ஈ.பி.டி.பீ.யே ஆட்சி யதிகாரத்தைப் பெறுவதுடன் பெரும்பான்மை அங்கத்துவத்தையும் பெறுமென்பதால் தமது கட்சி பலஹீனமுற்றுப் போய்விடுமென்ற அரசியல் ஆதங்கமே கூட்டணியின் இந்த இடைமறிப்புக்கு அடிப்படைக் காரணம்.

அதேவேளை அப்போது கூட்டணியின் முக்கிய பிரமுகர்களும் பா.உகளுமான நீலன் திருச்செல்வம், சம்பந்தன் ஆகியோர் அன்றைய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத் தலை மையோடு நெருக்கமான உறவை வைத்துக் கொண்டிருந்ததோடு அவ் அரசாங்கம் வகுத்த தீர்வுத் திட்டத்தை வரைவதற்கும் இரகசியமாக உதவி வந்தார்கள்.

அதனால்தான் முதன் முதலில் ஜனாதிபதி அத் தீர்வுத் திட்டத்தை 1995ல் வெளியிட்ட போது தமிழர் விடுதலைக் கூட்டணி உடனடியா கவே அதை வரவேற்று இது இனப்பிரச்சினையின் தீர்வுக்கான அடிப்படையாக அமையுமெனக் கருத்துக் கூறியிருந்தது.

ஆனால் அத் தீர்வுத் திட்டத்தை புலிகள் நிராகரித்திருந்தனர்.

கூட்டணி இடைக்கால நிர்வாக சபையை எதிர்ப்பதைச் சாட்டாக வைத்து பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கமும் வடக்கு கிழக்கை இணைத்த ஒரு நிர்வாகத்தை வழங் கியமைக்கான எதிர்ப்புகளை எதிர்கொள்ளாது தப்பிக்கொள் வதற்காக இக் கோரிக்கையைத் தட்டிக் கழித்து விட்டது.

எனினும் தேர்தல் நெருங்கியபோது ஈ.பி.டி.பி.யைச் சமாளிப்பதற்காக இடைக்கால நிர்வாக சபையை அமைப்பதாக அவ் அரசாங் கம் வர்த்தமானிப் பிரகடனமொன்றைச் செய்து அதற்கான பிரதிநிதிகளைத் தரும்படி தமிழ்க் கட்சிகளிடம் கோரியிருந்தது.

ஆயினும் ஏனைய தமிழ்க் கட்சிகள் அதில் அக்கறை காட்டாத நிலையில், தேர்தல் நெருங்கி வந்த கெடுபிடியில் அவ் வர்த்தமானி அறிவிப்பும் அப்படியே கிடப்பில் போட்டு கைகழுவி விடப்பட்டது.

இதன்பின் அடுத்து வந்த ஆட்சியில் ஈ.பி.டி.பி., முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிக ளோடு கூட்டாட்சி அமைத்துக் கொண்ட பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திடமிருந்து ஈ.பி.டி.பீ.யால் இம் முறையும் இடைக்கால நிர்வாகசபையைப் பெற்றுக்கொள்ள முடிய வில்லை. அமைச்சர் பதவியினைப் பெற்றும்கூட அரசாங்கத்தின் இத்தகைய மனோபாவத்தை அதனால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

எனினும் தற்போது ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திடம் பேரம் பேசும் விடுதலைப் புலிகள் அதே இடைக்கால நிர்வாக சபையை மிக உடனடியாகவே இப்போது பெற் றுக் கொண்டுள்ளார்கள்.

இந்த இடைக்கால நிர்வாக சபை மாறு பட்டது.

முக்கியமாக இவ் இடைக்கால நிர்வாக சபை இனப் பிரச்சினைக்கான ஒரு தீர்வாக இங்கு அமைக்கப் படவில்லை.

மாறாக, தீர்வை எட்டும் வரையான ஒரு இடைக்கால முன்னேற்பாடாக மட்டுமே புலிக ளால் கொள்ளப்படுகிறது.

இவ் இடைக்கால நிர்வாகசபையைப் பொறுப்பேற்பதானது, தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டதாகாதென்ற கருத்தினடிப்படை யிலேயே புலிகள் அவற்றைக் கோருகிறார்கள்.

அதை வழங்கும் அரசாங்கமும் இதை மறைமுகமாக ஒத்துக்கொண்டே வழங்குகிறது.

ஆக, புலிகள் தமது நிலையிலிருந்து எவ்விதத்திலும் இறங்காமல், தமக்கான ஒரு அரசியல் அங்கீகாரத்தை நிலைநாட்டும் தந்திரோபாயமாக இதை மிக சாதுரியமாகக் கையாண்டுள்ளார்கள்.

புலிகள் இடைக்கால நிர்வாக சபையை ஏற்ற நிலையில் அவர்கள் ஒரு பயங்கரவாத அமைப் பென்ற சர்வதேசப் பார்வை நீங்கி கௌரவமான ஒரு அரசியல் பிரதிநிதிகளாக முன்னிலைப் படுவார்கள்.

இந்நிலையில் இலங்கை அரசாங்கம் புலிகள் மீதான தடையை நீக்கவேண்டியது ஒரு தவிர்க்க முடியாத, தார்மீகக் கடமையாக மாறி விடும்.

அதேவேளை வெளிநாடுகளில் புலிகளைத் தடை செய்திருப்பதும் அர்த்தமற்ற ஒன்றாக நெருடி நிற்கும்.

இருந்த போதிலும் புலிகளின் இராணுவமோ, அவர்களது பிரதேசங்களில் உள்ள அவர்களின் கட்டுப்பாடுகளோ கலைக்கப்பட வேண்டிய தில்லை.


இந்த இடைக்கால நிர்வாகத்தினை மேற் கொண்டவாறே புலிகள் அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வர்.

அப் பேச்சுவார்த்தைகள் கட்டங்கட்டமாக நகர்ந்து ஈற்றில் ஒரு அரசியல் தீர்வை எட்டும் பட்சத்தில் அது புலிகளுக்கு இணக்கமான ஒரு தீர்வாகவும், அதை நடைமுறைப் படுத்தக்கூடிய சாத்தியங்களை உறுதிப்படுத்த முடியுமான தாகவும் காணப்படும் பட்சத்தில், புலிகள் தமது தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு அவ் அரசியல் தீர்வினடிப்படையில் செயலாற்ற முன்வர லாம்.

இதற்கு இன்னும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் செல்லலாம்.

அதுவரை இப் போக்கில் பாரிய திருப்பம் ஏதும் நிகழாதவரை, புலிகளின் இடைக்கால நிர்வாகசபையின் நிர்வாகத்தை ஒரு புதிய அனு பவமாக நாம் பார்த்தபடியிருக்கலாம். ■

# சாதாரணன் எழுதுவது.....



அண்ணன் வரதராஜப் பெருமாள்
அவர்களுக்கு,

நான் வியக்கும் 'வின்னர்'களில் நீங்களும் ஒருவர். ஆனபடியால்தான் இந்தக் கடிதம்.

என்ன ஒரு சிலுப்பச் சிலுப்பின ஆள்! இண்டைக்கு அட்ரஸ்லேஸ இல்லாமல் அப்பப்ப அறிக்கையளில 'தமிழ்' மனங்களை ஆத்திரப்படுத்திக் கொண்டிருக்கிறியள்.

உங்கட குறுக்கு மூளையோட்டங்களையும், குதர்க்கமான பதில்களையும் சந்திச்சவைக்கு நீங்கள் படுபயங்கரமான ஆளாய்த்தான் தெரிஞ்சிருக்கிறியள். உங்களைச் சுத்தி நிண்டவைக்கெல்லாம் ஒட்டகத்தைக் கூடாரத்துக்கு விட்ட பதற்றத்தைத்தான் ஒரு காலத்தில நீங்கள் குடுத்திருக்கிறியள்.

உங்களுக்குக் கடிதம் எழுத முதல் ஒருக்கால் உங்களை அறிஞ்சவையிட்ட விசாரிப்பம் எண்டு உங்கட பழைய இயக்கத் தோழர் ஒருத்தரிட்டக் கேட்டன். அவர் ஒரு விசித்திரமான விசயத்தைச் சொன்னார்.

ஒரு வெள்ளைப் பூவைக் கையில எடுத்துக் காட்டிக் கொண்டு, ஏன் இது மஞ்சள் நிறமாயிருக்கு எண்டு விளக்கம் குடுக்கத் தொடங்குவியளாம். விளக்கம் முடிய, "ஓம் வடிவான மஞ்சள் பூதான்..." எண்டு கேட்டுக் கொண்டு நிண்டவையும் சொல்லிப் போவினமாம்!

"எட்ட நிக்க வேணும்... சரியான வில்லங்கம் படிச்ச ஆள்!" எண்டு ஒருவித தப்பிப் பிழைச்ச மன நிலையோடை சொன்னார் அந்தத் தோழர்.

இது கொஞ்சம் 'ரூ மச்' எண்டு தெரிஞ்சாலும், உங்கட உயர்மட்டச் சகபாடிகள் மத்தியில, அவைக்குப் பயங்குடுக்கிற ஆளாய் இருந்திருக்கிறியள் எண்டது கிளியராய் விளங்கிச்சு.

அந்நேரம் பிரேமதாசாவும் கூட, பிரபாகரனைத் தன்னும் சேர்த்துக் கொள்ளலாம், பெருமாளை மட்டும் அண்டவே கூடாது எண்டுதானே காட்டிக் கொண்டவர்.

இப்பிடியான கில்லாடிக் கெட்டித்தனங்கள் ஒருபக்கமிருக்க, நான் வியந்தது, உங்கட இயக்கத்துக்குள்ள இருந்த சீனியர்மார், வெளியில இருந்த கூட்டணிக்காரர், அரசியலில பழுத்த அப்பக்காத்துகள் எல்லாரையும் உச்சிப்போட்டு இலங்கையில முதல் தமிழ் முதலமைச்சராய் வந்தியளே... அந்தத் தனியோட்டத்தைத்தான்!

ஆனாலும், என்னமோ தெரியேல்லை, முதலமைச்சராய் உங்களை நான் அறிஞ்சு கொண்ட நாளில இருந்து உங்களை நினைச்சாலே எனக்கு புண்ணில பளிப் பத்தின எரிச்சலும் கோவமும்தான் வருகுது.

உங்கட மூஞ்சையைப் பிடிக்கேல்லையோ... அல்லது இந்தியன் ஆமியோட பறந்து திரிஞ்சது பிடிக்கேல்லையோ... இல்லாட்டி உங்கட விதண்டாவாதக் கதையள் பிடிக்கேல்லையோ... நாங்கள் நடப்போட வாழுறதுக்குத் தங்களைத் தாங்களே அழிச்சுக் கொண்டிருக்கிற பொடியளின்ர பாதையை விட்டு வேற பாதையிலயும் போகலாம் எண்டு அவையின்ர 'ரூட்'டைக் குழப்பினது பிடிக்கேல்லையோ... அல்லது உங்களைப் பற்றிக் கேள்விப்பட்ட கதையளில இருந்துதான் வெறுப்பு வந்ததோ... என்னெண்டு சரியாச் சொல்லத் தெரியேல்லை, எனக்கு உங்களைப் பிடிக்காமல் போச்சுதெண்டது உண்மை!

ரீவியை நிறைக்கிற முகமும், கறுத்தக் கண்ணாடியும், மடுத்துக் குத்துற கதையும், போராளியளை எதிர்க்கிற போக்கும் எனக்குப் பிடிக்கேயில்லை.

பிரேமதாசாவைப் பகைச்சதில முதலமைச்சர் பதவியும் போய், புலியளைப் பகைச்சதில உங்களை முலமைச்சராக்கின கட்சித் தலைவர் நாபாவும் போய், கூட்டணியையே அடிச்சுப் பறக்கிற பொங்கு தமிழ்க் காத்தில கட்சியும் போய் வெறும் முன்னாள் முதலமைச்சர் எண்ட பேரை மட்டும் வைச்சுக் கொண்டு சிங்கள அரசாங்கத்தை நம்பின சீவியமாய்ப் போச்சு உங்கட பாடு.

எங்கள் ஒவ்வொருவருக்குள்ளையும் ஒவ்வொரு ஹிட்லர் இருக்கிறான் எண்டு லெக்சரர் ஒருக்காச் சொன்னவர். ஹிட்லரிட்டைக் கொஞ்சம் பெரிய பெரிய ஆயுதங்கள் கிடைச்சிட்டுது அவ்வளவுதான். நாங்களும் எங்களிட்டைக் கிடைச்ச குண்டூசியை வைச்சுக் கொண்டு என்ன செய்ய ஏலுமோ அதைச் செய்துகொண்டுதான் இருக்கிறம் எண்டது அவற்றை விளக்கம்.

நான் சொல்லுறதைக் கேட்டு நடக்குமெண்டால் இந்த உலகம் உருப்படியாயிருக்கும் எண்டதுதான் எல்லாருக்குள்ளயும் ஓடுற எண்ணம்.

ஆனால் என்ன செய்யிறது, எல்லாருக்கும் அதை 'இம்பிளிமென்ற்' பண்ணுற பலம் வாய்க்கிறேல்லை. ஆரோ ஒருத்தரோ ஒரு குழுவோதான் மற்ற எல்லாக் கருத்தையும் அமத்திப் போட்டு தான் நினைச்சதைச் சரியெண்டு செய்துகொண்டுபோக முடியுது. அதுக்குப் பெரும்பான்மைக் கருத்தை வளைக்கிறதும் பெரிய விசயமொண்டுமில்லை.

இந்தச் சூக்குமத்தை உங்களுக்குள்ள இருந்தவையில சரியாய்ப் பிரிஞ்சுகொண்ட முதல் ஆள் ஈரோஸ் பாலகுமாரன்தான். எல்லாரும் குண்டூசியை வைச்சுக் குத்திக் கொண்டிராமல் ஏகப் பிரதிநித்துவத்தை விளங்கிக்கொண்டுபோனது அவர்தான் முதலில. இண்டைக்குச் சுரேசும் போய்ச் சேர்ந்திட்டுது.

உங்களுக்கும் டக்ளசுக்கும்தான் ஒரு அறுப்பும் விளங்காமல் வேற கருத்தெண்டு விண்ணாணம் விட்டுக் கொண்டு நிக்கிறியள்.

டக்ளசுக்கெண்டாலும் ரண்டு எம்.பி.மார் மிச்சம். அதுவும் இல்லாமல் போகும்வரை அவருக்கு விளங்காதெண்டு விட்டுவிடலாம்.

ஆனால் நீங்கள் என்னத்தை வைச்சுக்கொண்டு 'தமிழ்க் கருத்து'க்கு எதிராய்க் கதைவிட்டபடி இன்னுமிருக்கிறியள் எண்டதுதான் எனக்கு விளங்கேல்லை. மனதுக்குள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் எண்டு ஏதும் நினைப்ப வேற வைச்சுக் கொண்டிருக்கிறியளோ தெரியா. அவன்தானே "எல்லாரும் சரணடைஞ்ச பிறகு நீ ஒருவன் மட்டும் சரணடையாதிருப்பது ஒரு லாபமா?" எண்டு வெள்ளைக் காரன் கேட்க, "எல்லாரும் சரணடைஞ்ச நான் ஒருவன் மட்டும் சரணடையாமலிருப்பது உனக்கொரு நஷ்டமா?" எண்டு சிவாஜிக் கர்ச்சனையில சிலுப்பிக் கொண்டு கேட்டவன்.

ஆனால் 'தமிழ் வீரர்கள்' ஆரெண்டது எல்லாருக்கும் தெரியும். நீங்கள் சிலுப்பினால் சிரிக்கத்தான் ஆக்களிருக்கினம்.

தமிழ் வீரர்களுக்குப் பின்னால திரண்டு நிக்குது தமிழ்ச்சனம். நீங்களெல்லாம் அதுக்குள்ள கலந்து அல்லது கலந்தது போலக் காட்டிக் கொண்டாவது உய்யுற வழியைப் பாருங்கோ.

எல்லாரும் சேர்ந்து ஒண்டாய் நிண்டு சிங்கள அரசாங்கத்துக்குச் 'சூ'க் காட்டிப்போட்டுப், பிறகு பத்தோ பதினைஞ்சோ வரிசத்தில உள்ளுக்க ஜனநாயகம், பல கட்சி எண்டு பாத்துக் கொள்ளலாம் தானே?

அதுவரை ஏகப்பிரதிநிதிக்குக் கீழ இருக்க விரும்பாதவன் தமிழ்த் துரோகியாய்த்தானிருக்க வேணும் எண்டதை வேதனையோடு சொல்லிக் கொண்டு, அனுதாபங்களுடன்.

*சாதாரணன்.*

# 'சமாதானத்தை எந்தவொரு ஆயுதமும் கெடுத்துவிடக்கூடாது'

**-கிழக்கான்-**

**கி**ழக்குப் பக்கம் கிட்டடிக்காலத்தில பெரும் அதிஸ்டக்காரர் ஆர் எண்டு கேட்டால் ஜோசப் அண்ணையின்ர பெயர் தான் வாயில வரும் எண்டு நினைக்காதையிங்க. அதவிட அதிஸ்டக்காரர் தான் நம்மட ஏறாவூர் கார பசீர் சேகுதாவூத்.

அவரை நினைச்சி பார்க்கக்குள்ள கவலை யாத் தன் கிடக்கு. மத்தப் பக்கம் சந்தோசமாகவும் இருக்குது.

முந்தியொரு காலத்தில அதுதான் ஆரம்ப கால போராட்ட களத்தில தமிழ் முஸ்லிம் எண்டில்லாம ஒண்டுக்கை ஒண்டாக இருந்த நேரத்தில ஈழப் புரட்சியமைப்பில (ஈரோஸ்) எவ்வளவு முக்கியமான மனிசனாக இருந்தவர். அது ஒரு காலம்.

ஆனால், இப்ப இந்தக் கொஞ்சக் காலத்தில கடந்த காலத்தையெல்லாம் மறந்து போய்த்து இந்த மனிசன்.

விடுதலைப் பாதையில் மாக்சிசம் பேசி நல்ல வழியைக் காட்டினவர் இப்ப என்ன எண்டா எப்பிடி எல்லாமோ பேசித் திரியிறார். சமூக ஒடுக்கு முறைக்காக தன்ரை தன்ரை மேம்பாட்டுக்காக குரல் கொடுப்பது நியாயமானது தான். அதுக்காக ஒரேயடியாக அடிப்படைவாதியாக மாறக் கூடாது தானே. எலக்சன் காலத்தில மனிசன் மேடைமேடையாக ஏறியிறங்கி என்னென்னமோ எல்லாம் பேசிப்பார்த்தார். ஆனாலும், அலிசாகிர் காக்காவை நெருங்க முடியல்லை. ஏனெண்டால் அவர் தமிழ் சனத்தையும் அரவணைச்சிக்கொண்டு போறதெண்டு சொல்லுறாங்க. ஆனாலும், இந்த மனிசன் தலைவரோட நெருங்கிப்போய் தேசியப்பட்டியலுக்குள்ளால எம்.பியாகி பிரதியமைச்சராகவும் வந்த விடயம் உள்ளேயும், வெளிலேயும் பலருக்கு எரிச்சல் எரிச்சலாகத் தானிருக்குது.

இந்த எரிச்சல் புகைச்சல் கிழக்கு அபிவிருத்தி அமைச்சர் கிழக்கானுகளுக்கு குடுக்காதது எல்லாத்தையும் கொட்டித் தீர்க்கிற மாதிரித் தான் அமைச்சர் அதாவுல்லாட தலைமையில மூதூரில இருந்து கல்முனைக்கு புறப்பட்ட பேரணியில நடந்த விசயங்கள் எல்லாம் சொல்லுதெங்கிறாங்க.

எவர் என்னத்தக் கிழிச்சாலும் என்ன மட்டும் ஒருத்தரும் ஒண்டும் செய்ய ஏலாதெங்கிறாராம் பசீர் காக்கா.

அதையெல்லாம் விடுங்க, நாம அவரிட்ட என்னத்த கேக்கிறமெண்டால் மாக்சீசம் லெனனிசம் எண்ட அந்தப் பெரிய பெரிய விசயமெல்லாத்தையும் இனி அவரிட்ட துளி கூட எதிர்பார்க்க ஏலாது தானே. ஆனால், அரசியல் யாபாரத்துக்கு இனிமேலாவது தமிழ் முஸ்லிம் சகோதரங்கள்ற உறவில விளையாட்டுக்காட்டக் கூடாது எண்டத மட்டும் தான் கேக்கிறம். முயற்சியுடையவர் இகழ்ச்சியடையார் எண்டு அந்தக் காலத்திலயே சொல்லி வச்சிருக்காங்க.

இதவிட இன்னொரு கவல என்னெண்டா விமான விபத்தில மறைஞ்ச உடனேயே போட்டி பொறாமை எண்டு துண்டு துண்டாப் பிரிஞ்சி போய் எலுவா கிடக்கிறாங்க. என்ன தான் ஆயிரம் சண்ட சச்சரவுகள் நமக்குள்ள கிடந்தாலும், என்ன அன்னியமா ஒரு காலத்தில கிடந்த நாங்க எண்டத நினைக்கக்குள்ளதான் கவலை வருகுது.

இதவிட, இன்னொரு விசயம் என்னெண்டா, சமாதானத்தக் கொண்டு வாறதுக்கு ஓடியோடித்திரியுற நோர்வேக் காரங்க கொண்டு வந்த ஒப்பந்தத்த மதிச்சி புளொட், ஈபிடிபி, ஈபிஆர்எல்எப் வச்சிருந்த ஆயுதங்களை ஒண்டுமே கதைக்காமலுக்கு குடுத்துப் போட்டாங்க.

ஆனால், கிழக்கில அந்தக் காலத்தில நீங்களே அடிபட்டுச் சாகுங்க எண்டு அரசாங்கம் அள்ளிக்குடுத்த ஆயுதங்கள் நறையவே ஜிகாத்திட்டையும், ஊர்காவல் படைக்காரங்களிட்டையும் இருக்குது தானே. ஏன் இதையெல்லாம் களையல்ல எண்டு கேக்கிறதிலயும் நியாயமில்லாமலில்ல தானே.

ஏனெண்டால், இந்த ஆயுதங்கள் தான் பலதடவை முஸ்லிம் சனத்தின்ர கொள்ளையடிக்கிறதுக்கும், தனிப்பட்ட வெட்டுக்குத்துக்களுக்கும் பயன்பட்டிருக்குது எண்ட உண்மையை ஆராலையும் மறைக்க ஏலாது.

ஏனெண்டால் ஜிகாத் ஊர்காவல் படை எல்லாத்துக்கும் அரசாங்கம் தானே ஆயுதங் குடுத்தது. "சமாதானத்த எந்தவொரு ஆயுதமும் கெடுத்திடக்கூடாது" எண்டு சொன்னால் ஆராவது கோபிப்பீங்களோ தெரியாது!

# விளம்பரப் பகுதி



## அஸ்மா நோய்க்கு வைத்தியம்

அஸ்மா, வீசிங், தொய்வு, இழுப்பு, இளைப்பு, மாய்ச்சல், மூச்சுத்தட்டல், மூச்சடைப்பு, நெஞ்சுச்சளி, மண்டைச்சளி, கக்கல், இருமல், தடிமன், மூக்கால் நீர் வடிதல், மூக்கடைப்பு, நாசி அரிப்பு, மூக்கரிப்பு, தும்மல், மூக்கினுள் சவ்வு வளர்தல், கண்கடி, கண்ணரிப்பு, தலைவலி, பீனிசம் போன்ற குணங்களுக்கு நிரந்தர சுகம் பெற அஸ்மா சிகிச்சை நிபுணர் டொக்டர் சுராஜ் சோமசுந்தரம் அவர்களை இல. 25 சில்வெஸ்டர் வீதி, கல்கிசை (மவுண்ட்லெவினியா)(கொழும்பு) எனும் இடத்தில் பழைய நோயாளர்களும், முன் அனுமதி பெற்ற புதிய நோயாளர்களும் தினமும் மாலையில் 4.00மணி முதல் 7.00மணி வரையும், செவ்வாய், வியாழன், சனி கிழமை நாட்களில் காலையில் 9.00மணி முதல் 12.00மணி வரையும் சந்தித்து சிகிச்சை பெறலாம். புதிதாக வரும் நோயாளர்கள் மேற்கூறிய நாட்களிலும் நேரங்களிலும் தொலைபோசி இலக்கம் 074-201582 மூலம் தொடர்பு கொண்டு உங்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும் நாளையும், நேரத்தையும் முன் அனுமதி பெற்றே (பதிவு செய்து) வரவேண்டும்.

---

"உங்களது பெரிய பிரச்சனை, நடுத்தர பிரச்சனை, சின்னப் பிரச்சனை. நம்பிக்கையாக உங்களுக்கு செய்து தரப்படும் 100% உத்தரவாதம். உங்கள் பிரச்சனைக்குரிய விடை உடனடியாக. உங்கள் பிரச்சனை எதுவாகினும் என்னுடன் தொடர்பு கொள்ளவும். துரிதகதியில் செய்து தரப்படும்.

பெண் பிரச்சனை, பாலியல் பிரச்சனை, வாழ்க்கையில் வெற்றி, பணக்காரனாக வேண்டுமா? தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்புகொள்ளும் இடம்:


**விலாசம் :** PR. DANSOKHO ALI,
55. Rue des Poissonniers, 75018 Paris, France.
தொலைபேசி–0142552036

---

## மலையாள மாந்திரீகம்



பரம்பரை பரம்பரையாக 39 வருடகால தன்னிகரற்ற சேவை யாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக எமக்களித்த சான்றிதழ்களை நேரில் கண்டறிய வாருங்கள்!



**சுவிஸ் அன்பரின் "கணவன்/மனைவி பிணக்கு தீரல் மடல்"**

"மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாபின்னமான எமது குடும்பத்தை 7000 KM க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்."

**சுவிஸ் அன்பரின் மடல் "ஸ்ரீ துர்க்கையம்மனின் சக்தியால் பேசும் மழலை"**

"மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கவைத்த உங்களுக்கு எமது கோடானு கோடி நன்றிகள்."

**ஜெர்மன் அன்பரின் மடல், "மகளின் திக்குவாய் குணமாகியது"**

"அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்!"

**லண்டன் அன்பரின் மடல், "எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்"**

"பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்!"

**கொழும்பு அன்பரின் மடல், "39 வயதில் அதிசயத் திருமணம்"**

"பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எமது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடானுகோடி நன்றிகள்!"

**குருணாகல் அன்பரின் மடல், "நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி"**

"தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப்பட்ட வண்ணம் இருந்ததால், உங்களிடம் பரிகார நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமண நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்."

**பிரான்ஸ் அன்பரின் மடல், "குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி"**

"அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாடு செல்லமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்து என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்."

**ஹட்டன் அன்பரின் மடல், "தீராத் தலைவலி தீர்ந்துவிட்டது"**

"மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத் தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்."

**இத்தாலி அன்பரின் மடல், "சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி"**

"வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்."

**பதுளை அன்பரின் மடல், "போதை அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவர்"**

"அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதைப்பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்துக்கு புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்"

**கனடா அன்பரின் மடல், "ஜாதகத்தில் கூறியது பலிதம்"**

"மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு. இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக்கூறியது பலித்தது கண்டு ஆச் சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்."

**நீர்கொழும்பு அன்பரின் மடல், "புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்"**

"மாட்சிமை பொருந்திய ஐயா, சூனியத்தின் பிடியில் சிக்குண்டு புத்திபேதலித்து பலரது ஏளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னை பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்கு கண்ணீரால் என்றும் நன்றி கூறுகிறேன் ஐயா!"

**யாழ்ப்பாண அன்பரின் மடல், "அதிசய அக்னி குண்டல பூஜை"**

"மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விசேஷமாக நடைபெறும் அக்னிகுண்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா,"

**கொழும்பு அன்பரின் மடல், "அச்சொட்டான கைரேகை பலன்"**

"மதிப்பிற்குரிய சாமிகங்காதரனுக்கு, எனது கைரேகையின் பலனைக் கொண்டு தெளிவான முறையில் கடந்த கால, நிகழ் கால, எதிர் கால பலன்களை கூறி என்னை ஆச்சரியப்பட வைத்ததுக்கு நன்றி. உங்களது சேவை தொடரட்டும்."

**டென்மார்க் அன்பரின் மடல், "அதிசயிக்கத்தக்க முடி வளர்ச்சி"**

"அன்புள்ளம் கொண்ட ஐயா! தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நல்முடன் வாழ எனக்கு வழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்."

**இனியென்ன உங்கள் குறை?, திருமணம் நடக்கவில்லையென்ற அங்கலாய்ப்பா?**
**வெளிநாட்டு பிரயாணத்தடையா?, காதலில் தோல்விகண்டு விட்டீர்களா?**
**இன்னும் சகலவற்றுக்கும் உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் தொடர்பு கொள்ளலாம்.**

**குறிப்பு : இங்கு தீமையான வேலைக்கு இடமில்லை.**

39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பி.கே. சாமி (J.D.G.A.N)JP

**உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி**
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika Uchchada Peedam.

**கொழும்பில்**
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

**நுவரெலியாவில்**
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 342463
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-342463, 431137,47065- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.

---

## சித்திரபானு வருடப்பிறப்பு

சித்திரபானு சிறக்கும் மழைமிகுந்து
வித்துள்ளவெல்லாம் விளையுமே – எத்திசையும்
பார்ப்பாருக்காகாது பார்வேந்தர்க்கே நலமாம்
தீர்ப்பாகப் பூமியும் செப்பு

இலங்கையைப் பொறுத்தவரை பொதுவான பஞ்சாங்கக் கணிப்புகள் திருக்கணித அடிப்படையிலும், வாக்கியமுறையிலும் வருடாவருடம் கணிக்கப்படுகின்றன. அறுபது வருடங்கள் கொண்ட வட்டத்தில், பிறக்கும் புத்தாண்டான சித்திரபானு 16வது வருடமாகும். சித்திரபானு புதுவருடப்பிறப்பையொட்டி மேற்படி இரு முறைமைகளிலும் காணப்பட்டுள்ள அம்சங்களை இங்கு தருகிறோம்.

**திருக்கணித முறைப்படி:** சித்திரபானு வருடம் பங்குனி மாதம் 30ம் நாள் (14.04.2002) சனிக்கிழமை பின்னிரவு–புதிய நேரப்படி–6மணி 19 நிமிடத்தில் பிறக்கின்றது. அன்று மேட ராசி, பரணிநட்சத்திரம். உதய லக்கினம்; திதி பூர்வபட்சத்து துவிதியை சித்தயோகமுமாகும்.

**புண்ணியகாலம்:** சனிக்கிழமை பின்னிரவு 2மணி 19 நிமிடம் முதல் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணி 19 நிமிடம் வரையாகும்.

**வாக்கிய பஞ்சாங்கக் கணிப்பின்படி:** பங்குனி 30ம் நாள் (14.04.2002) சனிக்கிழமை பின்னிரவு–புதிய நேரப்படி–3மணி 41நிமிடத்தில் மேடராசி, பரணி நட்சத்திரத்தில் புதிய வருடமான சித்திரபானு பிறக்கின்றது.

**புண்ணியகாலம்:** சனிக்கிழமை பின்னிரவு 7மணி 41நிமிடம் தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை காலை 6மணி 41 நிமிடம் வரையாகும்.

இப்புண்ணிய காலத்தில் யாவரும் சங்கற்பித்து மருத்துநீர் வைத்து ஸ்நானம் செய்தல் வேண்டும்.

**மருத்துநீர்:** தலையில் இலவம் இலை, காலில் விளாவிலை வைத்து கிழக்கு அல்லது வடக்கு நோக்கிநின்று மருத்து நீர் தேய்த்தல் வேண்டும்.

**புத்தாடை:** இளம் சிவப்புப் பட்டாடை அல்லது சிவப்புக் கரையுடைய வெண்பட்டாடை.

**கைவிசேஷம் பரிமாறும் காலம்:** ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணிமுதல் 6.20 மணிவரை அல்லது திங்கட்கிழமை காலை 6.00 மணிமுதல் 6.33 மணிவரை.

---

பண்டாரவளை நகர மத்தியில் சகல வசதிகளுடனும் 26 பேர்ச்சஸ் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
4 படுக்கையறைகள், விறாந்தை, சாப்பாட்டு சமையலறைகள், உள்வெளி மலசல கூடங்கள். குழாய் நீர், கிணற்று வசதி, தொலைபேசி வசதியும் உண்டு.
தொடர்பு கொள்க: 057-22331/072-505567

---

## தினமுரசு சந்தா விபரம்

| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 2600 | ரூ.1350 | ரூ.700 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 3100 | ரூ.1550 | ரூ.800 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 2075 | ரூ.1050 | ரூ.600 |
| உள்ளூர் | ரூ. 740 | ரூ.375 | ரூ.200 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெறவிரும்புவோர் D.D. Enterprises எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர் தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் 'Manager Thinamurasu' என்னும் பெயருக்கு கட்டளையிட்டு பதிவுத்தபாலில் Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

---

|| श्रीविष्णवे परमात्मने नमः ||

சிவான மட்டக்களப்பு மஹா மாந்திரீக மருத்துவம்

INTERNATIONAL TRADITIONAL & HOMOEOPATHY MEDICAL & RESEARCH & SERVICE

தூரதேச மந்திர உட்சாடன ஆஹர்ஷண பிராண தியான யோக ஆன்மீக அலைகள் (Cosmic Vibration) மருத்துவம்



MAHARISH MAHESHYOGI

MY GURU



முனிவர்களின் குருகுல வைத்திய பரம்பரை
(டாக்டர் "மந்திரயோகி")
YOGI. DR. T. MYALVAGANAM
R.H.M.D-D Acu-(இலங்கை) P.I.S.M (இந்தியா)
REGISTERED BY MINISTRY OF HEALTH SLMCNO.061

விதியினால், அல்லது சதியினால் பிரிந்த காதலர்கள், கணவன்–மனைவி குடும்பங்கள் எங்கிருந்தாலும் ஒன்று சேர, வெறுப்பவர்கள் வேண்டியவர்கள் வந்து உறவாக உதவிபெற, தகாத ஆண் பெண் உறவை போதைவஸ்த்தை மறப்பிக்க, தீயசக்திகளினால் ஏற்பட்ட தீராத உடல் நோய், மன நோய், பிரச்சனைகளைத் தீர்த்து. எத்துன்பங்களும் அணுகாமல் உடல், வீடு வளவு, வியாபார நிலையங்கள், வாகனங்களை காவல் செய்ய காதல் திருமணம் பெற்றோர்களின் சம்மதத்துடன் நிறைவேற கல்வி, தொழில், வியாபாரம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு காரியத்தடைகள் ஏற்படாமல் நினைத்த செய்கின்ற போகின்ற காரியங்கள் வெற்றிபெற, வேறு நன்மையான காரியங்களுக்கு தீங்கில்லாத தெய்வீக மஹா மாந்திரீக வசிய வைத்தியங்கள் செய்து கொள்ள வரமுடியாதவர்கள்கடல்கடந்த வெளிநாட்டவர்கள் பதிவுத்தபால், பக்ஸ், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு மனோ தத்துவ மாந்திரீக ஆன்மீக மருத்துவ அறிவுரைகளோடு எல்லாமதத்தினர்களுக்குமேற்ற இறைபக்தியோடும் யோகசக்தியோடும் செய்யப்படும். புனித பரிகார பொருட்களை துரித விஷேட தபாலில் பெற்றும் தூரதேச ஆகாய ஆஹர்ஷண மந்திர உட்சாடன பிரான தியான யோக ஆன்மீக அலைகள் மருத்துவ முறைப்படியும் உடன் நிறைவேற்றிக் கொள்கிறார்கள்

GURUSACKTHY CENTER
(INDIAN CLINIC)
KALLADY - BATTICALOA.(P.O.)
(SRI LANKA)

குரு சக்தி நிலையம்
(இந்தியன் வைத்தியசாலை)
கல்லடி மட்டக்களப்பு. P.O
(ஸ்ரீலங்கா)

ரெலிபோன், பக்ஸ்
உள்நாட்டவர்களுக்கு 065-24872காலை 8 இருந்து இரவு 9 மணி வரை
வெளிநாட்டவர்களுக்கு 00946524872 காலை 8 லிருந்து இரவு 11 மணி வரை
கடல் கடந்த வெளிநாட்டவர்களுக்கான விஷேட சேவை.
REGISTERD BY MINISTRY OF HINDU RELIGIOUS & CULTURAL. AFFAIRS
கொழும்பில் மாதத்தில் இருதடவைகள் நேரில் ஆலோசனைகள் பெறலாம்.

---

## Vella Maxi Credit

**சுவிஸில் உங்கள் பணத்தேவைகளை பூர்த்தி செய்ய இலகுவான கடன் வசதிகளை விரைவாக செய்து கொடுக்கின்றோம்**

- 100,000 SFR வரை கடன் வழங்கப்படும்
- 10,000 SFRற்கு வருட வட்டி 525 SFR
- ஒரு மாதத்திற்கான கட்டுப் பணம் 877 SFR
- வட்டி வீதம் 9.99%
- ஏற்கனவே கடன் பெற்றவர்களுக்கும் வழங்கப்படும்
- B/C காட் உள்ளவர்களுக்கு மட்டும்

மேலதிக தொடர்புகளுக்கு
**கந்தராஜா பிரபு**

**Vella Credit**
Spitalgasse 16 (4ம் மாடி)
3011 Bern
Tel: 031/3122426 Fax: 031/3119351
Natel: 079/7139509

---

## தேவை

கடிகாரம் திருத்துபவர்கள், T.V, ரேடியோ திருத்துபவர்கள் தேவை. சாப்பாடு தங்குமிடவசதி உண்டு.
திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும் தொடர்பு கொள்ளவும்.

**MOHAN RECORD BAR**
19, BRIDWELL BAZAAR
BOGAWANTALAWA.
T.P. 052-67616

---

## லண்டன், பாரிஸ்
## இந்திய ஹோமியோபதி வைத்திய நிபுணர்

மாறாத நோய்களை எல்லாம் ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் தீர்த்து வைக்கும்
*இந்திய ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்*

**டாக்டர் ஆர்.தியாகராஜன் DHMS,AMRSH (LON.).**

26.03.2002 முதல் லண்டன் பாரிஸ் நகரங்களுக்கு விஜயம் செய்து நீண்டகால நோயினால் பாதிக்கப்பட்டவர்களை நேரில் பார்வையிட்டு சிகிச்சை அளிக்கவுள்ளார்.

மாறி மாறி வரும் ஆஸ்த்துமா (Asthuma) சர்க்கரை வியாதி என்ற டையபற்றிக்ஸ் (Diabetes) எக்ஸிமா (Eczema) மலட்டுத்தன்மை–பேரின்மை (Sterrility) ஆண்மைக் குறைபாடுகள் (Impotency) போன்ற வியாதிகளுக்கு சிறந்த முறையில் நிவாரணம் அளிக்கப்படும்.

ஹோமியோபதி மருத்துவம் மனிதனை முழுமையாகக் கருத்திற்கொண்டு மனம், மற்றும் உடலில் உண்டாகும் மாற்றங்களை உற்று நோக்கி ஒரு முழுமையான சிகிச்சையை பாதுகாப்பான, பக்க விளைவுகளற்ற (Side effects) முறையில் அனைத்து வியாதிகளுக்கும் அளிக்கவல்லது.

**முன்கூட்டிய பதிவுக்கு**

லண்டன் தொலைபேசி: 07984803488 / 07833341693
email: homoeocare @ rediffmail. com
தொடர்பு: 0091-9843051099 (இந்தியா) 0094-77602513 (இலங்கை)
பாரிஸ் விஜயம் 30.03.2002 முதல் 31.03.2002 வரை
பாரிஸ் தொலைபேசி: 0610225386, 0611401882
இலங்கை விஜயம் 24.04.2002 முதல் 27.04.2002 வரை

---

தெய்வீக மருத்துவம்
National Theiveega Sakthy Foundation
International Interregious Traditional & Medical & Divine service
சர்வதேச சமூக மாந்திரீக மருத்துவ தெய்வீக சேவை
Government Approved Charity Regd No:- HA/4/BT/219
அகில இலங்கை சமாதான நீதவான்

**டாக்டர் பாலு சோதிடர்**
**S.A.M.P. J.P. (SL)**

கிரக தோஷம் காலப்பகையால் பிரிந்த, காதலர்கள் கணவன் மனைவி ஒன்று சேர, வெறுத்த உறவினர்கள், வேண் டியவர்கள் அன்பாக இருக்க, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடன் நிறைவேற மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனநோய், தாழ்வு மனப்பான்மை, கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமின்மை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சனைகள், தீயபழக்கம், மனிதத் தீமை, மருந்திடு போன்ற தீமைகளில் இருந்து விடுபட்டு சந்தோஷமாக வாழ பிரச்சனைகளுக்குரிய காரணத்தை காண்டம் இறைசக்தியால் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன தீங்கற்ற மஹா மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தி அளிக்கப்படுகிறது.

நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனையை எழுதினால் அல்லது தொலைபேசி ∴பக்ஸ் மூலம் தொடர்பு கொண்டு உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள் கிறார்கள். (இரகசியம் பாதுகாக்கப்படும்)

THIEIVEEGAM SRILANKA
HEAD OFFICE
BATTICALOA SRILANKA.

தெய்வீகம் ஸ்ரீலங்கா
தலைமை அலுவலகம்
மட்டக்களப்பு ஸ்ரீலங்கா

தொலைபேசி / ∴பக்ஸ்
உள்நாட்டவர்களுக்கு:- (065) 24825
வெளிநாட்டவர்களுக்கு:- 0094 78610098

**கொழும்பில் நேரில் சந்திக்கலாம்**

"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
*"DISPEL DARKNESS IN LIFE AND LET LIGHT SHINE"*

அலசுவது-இராஜதந்திரி

# தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரவேசம்!

இராணுவ ரீதியாக மிகப் பலம் வாய்ந்த நிலையில் இருந்து வருகின்ற தமிழீழ விடுதலைப் புலிகள் என்றுமில்லாதவாறு அரசியல் ரீதியான நடவடிக்கைகளில் விரிவாக ஈடுபட ஆரம்பித்துள்ளனர்.

பயங்கரவாத அமைப்பினர் என்று தம்மீது சூட்டப்பட்ட அவப்பெயர் தவறானது என்பதை நிரூபிக்கும் விதத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் தமது அலுவலகங்களைத் திறந்து அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

கடந்த பெப்ரவரி மாதம் 22ம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனுக்கும், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் கைச்சாத்தான புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழீழ விடுதலைப் புலிகளின் விரிவான அரசியல் பிரவேசத்துக்கு வழி அமைப்பதாகவே இருக்கின்றது.

அரசின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நடமாடுவதற்கும், தமது அலுவலகங்களைத் திறப்பதற்கும் பொதுக் கூட்டங்கள், அரசியல் பிரசாரங்களை மேற்கொள்வதற்கும் இடமளிப்பதாகவே ரணில்-பிரபா புரிந்துணர்வு ஒப்பந்தம் விளங்குகின்றது.

முன்பொரு காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைப்பற்றி பேசினால் கூட கைதாகும் நிலை காணப்பட்டது. எல்.ரி.ரி.ஈ. அமைப்பின் பத்திரிகைகள், நூல்கள், படங்கள் போன்றவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டுக்காக, பலர் கைது செய்யப்பட்டும் இருந்தனர். "நீ புலியா? உனக்கு எல்.ரி.ரி.ஈ.யுடன் தொடர்பிருக்கிறதா?" என வினவப்பட்டு இளைஞர் யுவதிகள் நையப்புடைக்கப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட சம்பவங்களும் ஏராளமாகவே நடந்ததுண்டு.

ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரவேசத்துக்கு தற்போது என்றும் இல்லாதவாறு பெரும் வரவேற்புக்கிடைத்துள்ளது. இலங்கையின் ஆட்சியாளர்கள் மட்டுமல்ல. சர்வதேச சமூகமும் தமிழீழ விடுதலைப் புலிகளது அரசியல் பிரவேசத்தை வெகுவாகவே வரவேற்றுள்ளது.

சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் இலங்கையின் மூலை முடுக்குகளில் 'எல்.ரி.ரி.ஈ. தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பொலிஸாரால் வேண்டப்படுகிறார். அவர் பற்றிய தகவலுக்கு சன்மானம் தரப்படும்' போன்ற சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

ஆனால் தற்போது எல்.ரி.ரி.ஈ. தலைவரது முழு உருவ கட்-அவுட் படங்கள் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் மட்டுமல்ல. இலங்கையின் மிக உயரமான பகுதியான நுவரெலியாவின் மலைக் குன்றுகளிலும் பிரபாகரனது விசாலமான படங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

வடக்கு-கிழக்கின் தமிழ் மக்கள் அப்பழுக்கற்ற விதத்திலேயே தமது அரசியல் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தனர். ஆனால் அவர்களது குரல்வளை நசுக்கப்பட்டதையடுத்தே ஆயுத பலத்தோடு தமது உரிமைகளுக்காகப் போராட தமிழ் மக்கள் முன் வந்தனர்.

அரசியல் ரீதியான வடக்கு-கிழக்கு மக்களின் கோரிக்கைகளுக்கு ஆயுதப் போரட்டம் வழங்கிய பலமான பின்னணியே இன்று பேரின வாதிகளை அடிபணியவும் வைத்துள்ளது.

இந்நிலையில் கடந்த இரு தசாப்த காலமாக வடக்கு-கிழக்கில் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தற்போதைய அரசியல் பிரவேசம் ஒரு உறுதியான பின்னணியைக் கொண்டதாகவே விளங்குகின்றது.

கடந்த காலங்களில் பல தடவைகள் தமிழீழ விடுதலைப் புலிகள் வடக்கு-கிழக்குப் பிரச்சனைத் தீர்வுக்கான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட முன்வந்தனர்.

1985ம் ஆண்டில் பூட்டானின் திம்புவில் நிகழ்ந்த பேச்சுக்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஏனைய வடக்கு-கிழக்குத் தமிழ் அமைப்புக்களுடன் பங்குபற்றினர்.

இதன் பின்னர் 1987ம் ஆண்டில் எல்.ரி.ரி.ஈ. அமைப்பு அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதோடு இலங்கை-இந்திய ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட்டது.

எல்.ரி.ரி.ஈ. தலைவர் வே.பிரபாகரன், மறைந்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியுடனும் இந்திய-இலங்கை ஒப்பந்தம் தொடர்பாக பேசியிருந்தார்.


1990ம் ஆண்டு இலங்கையின் மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவுக்கும் எல்.ரி.ரி.ஈ. அமைப்புக்குமிடையே பேச்சு வார்த்தைகள் இடம்பெற்றன.

எல்.ரி.ரி.ஈ. அமைப்பின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் அந்த அமைப்பைச் சேர்ந்த ஏனைய அரசியல் முக்கியஸ்தர்கள் சகிதம் பிரேமதாசா அரசுடன் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தார்.

இதனையடுத்து 1995ம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிகாவின் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளோடு பேச்சு வார்த்தைகளைக் குறுகிய காலம் நடத்தியது.

மேற்குறிப்பிட்ட தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சு வார்த்தைகள் மற்றும் அதுசார்ந்த அரசியல் நடவடிக்கைகள் தகுந்த புரிந்துணர்வுடன் இடம்பெறவில்லை.

அத்துடன் ஒரு விரிவான அரசியல் தீர்வைக் கருத்தில் கொண்டதாகவும் அப்பேச்சுக்கள் காணப்படவில்லை. பரஸ்பரம் சந்தேக உணர்வு மேலிட்டிருந்ததுடன் இராணுவ ரீதியான அணுகுமுறைகளில் இருந்து முற்றிலும் விடுபடாத ஒரு சூழலிலேயே அப்பேச்சுகள் இடம்பெற்றன.



இதன் காரணமாகவே கடந்த கால சமரச முயற்சிகள் தோல்வியைத் தழுவியதோடு இராணுவ நடவடிக்கைளிலேயே அதிகளவு காலப்பகுதி விரயமாகியும் இருந்தது.

ஆனால் இத்தடவை மேற்கொள்ளப்பட்டுவருகின்ற சமரச முயற்சிகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் நேரடியாகவே ஆர்வம் கட்டி வருகின்றார்.

இனப்பிரச்சனை தீர்வு முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்ற நோர்வே அனுசரணையாளர்களுடனான நேரடிச் சந்திப்புக்களில் பங்குபற்றியதுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் திரு.பிரபாகரன் கைச்சாத்திட்டிருந்தார்.

இதுதவிர, விரிவான பத்திரிகையாளர் மாநாடொன்றையும் திரு.பிரபாகரன் ஏற்பாடு செய்திருந்தார்.

1990ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இந்திய அமைதிப் படையினரது வெளியேற்றத்தையடுத்து எல்.ரி.ரி.ஈ. தலைவர் பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்தியிருந்தார்.

அதன் பின்னர் சுமார் 12 வருடங்கள் கடந்த நிலையில் திரு.பிரபாகரன் பெருமளவிலான உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகையாளர்களை இத்தடவை வன்னியில் சந்தித்திருந்தார்.

இதேவேளை வடக்கு-கிழக்கைச் சேர்ந்த தமிழ் தேசிய கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் அவர்களைத் தொடர்ந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியையும் சந்திப்பதற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு முன்வந்திருந்தது.

வடக்கு-கிழக்கு பிரச்சனைக்கான அரசியல் தீர்வு பரந்துபட்டதாகவும் உறுதியானதாகவும் இருக்கவேண்டியது அவசியமானதாகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரச தரப்பினருக்குமான புரிந்துணர்வு ஒருபுறமிருக்க வடக்கு-கிழக்கில் உள்ள ஏனைய அரசியல் அமைப்புக்களுடனும் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான உறவு வலுப்பெற வேண்டியதாகின்றது.

வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் இருந்து பாராளுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த பாராளுமன்றப் பிரதிநிதிகள் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளையே வடக்கு-கிழக்குப் பிரச்சனை குறித்த சமரச நடவடிக்கைகளில் பங்குபற்றும் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டிருந்தனர்.

இருந்தபோதிலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் ஒன்று சேர்ந்துள்ள ஒவ்வொரு கட்சியும் வெவ்வேறானாவை கடந்த காலங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இவை குறிப்பிடத்தக்க விதத்தில் ஒரு புரிந்துணர்வைக் கொண்டிருக்கவில்லை.

இந்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரனுடன் தமிழ் தேசிய கூட்டமைப்பு மேற்கொள்ளும் சந்திப்பு எதிர்கால அரசியல் நடவடிக்கையைப் பொறுத்தவரை இன்றியமையாததாகவே இருக்கின்றது.

தமிழ் கூட்டமைப்புடனான சந்திப்பையடுத்து ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியுடனும் எல்.ரி.ரி.ஈ. அமைப்பு பேச்சுக்களை நடத்த சம்மதித்திருந்தது.

வடக்கு-கிழக்கு பிரதேசங்களைப் பொறுத்தவரை முஸ்லிம் மக்கள் மொழி அடிப்படையில் தமிழ் மக்களுடன் பின்னிப் பிணைந்தவர்கள்.

கடந்த காலங்களில் வடக்கு-கிழக்கில் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே கசப்புணர்வு தோன்றியிருந்தது.

இக் கசப்புணர்வு துரதிஷ்டவசமானது என எல்.ரி.ரி.ஈ. அமைப்பின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் குறிப்பிட்டுள்ளதோடு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு நேசக்கரமும் நீட்டியுள்ளார்.

எனவே தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு பரந்தபட்ட அரசியல் மயமாக்கலின் பொருட்டு வரவேற்கத் தக்க முறையில் பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் மூலம் வடக்கு-கிழக்கில் இருக்கின்ற அனைத்து அரசியல் சக்திகளுக்குமிடையிலான பகைமை, கருத்து வேற்றுமை என்பவை ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

ஓர் அரசியல் தீர்வுக்கான பரந்துபட்ட முயற்சியில் முதலில் தமது பிரதேசத்தில் எழக்கூடிய நெருக்கடிகளைக் குறைப்பதில், தமிழீழ விடுதலைப் புலிகள் காண்பிக்கும் ஆர்வம் காலம் அறிந்ததாவே இருக்கின்றது. ○

## அதிரடி அய்யாத்துரை



**போன வெள்ளிக்கிழமை** கனேடிய தமிழ் வானொலிக்குப் பேட்டிகுடுத்த எங்கட சீறிற காந்தர் கூட்டமைப்புக்கு மேல நல்லாச் சீறியிருக்கிறார். பாராளுமன்ற வரவு செலவுத் திட்டத்தில ரெண்டு பட்டு வாக்களிச்சுக் கோமாளித்தனமாடிச் சுய நலத்தக் காட்டிட்டினமாம். இதுக்கெல்லாம் ஒரு பாடம் படிப்பிக்கத்தான் புலிகள் அவைய வன்னிக்குக் கூப்பிட்டிருக்கினமாம். போகப் பயமெண்டால் தானும் கூடப்போய் வீட்டுட்டு வாறாராம். வன்னி போய் வந்த பிறகு அவை ஒழுங்கா இருப்பினமெண்டதில தனக்குச் சந்தேக மில்லையாம். பாக்கப் போனால் வன்னியில ஓருவேளை கூட்டமைப்பாருக்குப் பாவமன்னிப்புக் கிடைச்சாலும் இவர் பணிஷ்மெண்ட் குடுக்காமல் விடார் போல கிடக்கு. ம்... எல்லாம் பாழாய்ப்போன பதவியாசை படுத்திற பாடு!

**ஹோம் வேர்க்** செய்யாத ஸ்கூல் பிள்ளைகள் வாத்தியாரிட்டப் போறதுபோல கிடு நடுக்கத்தோடதான் வன்னிக்குப் போயினம் எங்கட கூட்டமைப்புப் பா.உகள். தங்கட பெயரைப் பாவிச்சு தேர்தலில வெண்டிட்டு இப்ப ரணிலோடயும் அமைச்சர் மாரோடயும் உரசித் திரிஞ்சு காரியம் பாக்கிற உவைக்குச் சொல்லி விளங்குதில்லை, வன்னிக்குக் கூப்பிட்டிருத்திச் சொன்னால் தான் விளங்குமெண்டு அன்ரன் பாலசிங்கம் சொன்னபிறகு ஆக்களுக்கு இப்ப குலைப்பனடிக்கத் தொடங்கியிட்டுதாம். எந்தக் கண் தங்கள நோட்டம்பாத்து மூட்டி வைக்குதெண்டது தான் அவைக்குப் பார்லிமெண்டுக்குள்ளேயே பிரச்சினையாப் போச்சுது. சிலபேர் அரசியலுக்கே முழுக்குப் போடப்போறதாயும் சொல்லித் திரியிறதாக் கேள்வி. இரவல் பதவிக்கு ஆசைப்பட்டால் ஊசிக் கதிரையிலதான் உக்காரவேனும்.

**கூட்டமைப்பைக்** கூட்டுகினமில்லை, சங்கரியாருக்கு ஏதும் சங்கடமெண்டால் வேறயாரையாவது நியமிச்சுக் கூட்டுங்கோ எண்டு காட்டமா அறிக்கை விட்டிருக்கிறார் பிரேமையில இருக்கிறவர். கூட்டத்தான் வேனும், அந்தளவுக்கு உள்ளுக்குத் தூசு பிடிச்சுத்தான் இருக்குது கூட்டு. ஆனால் ஆள் குடும்பத்தோட அமெரிக்க விசா எடுத்து வைச்சுக்கொண்டு கூட்டக் கேக்கேக்கதான் கூட்டக் கேக்கிறவை குடியிருக்கத் தயாரில்லையோவெண்டு கொஞ்சம் யோசிக்க வைக்குது. எதுக்கும் வன்னிச் சந்திப்பு முடிஞ்சால் எந்த வெள்ளி எந்தத் திசையிலயெண்டது வெளிக்கும்.

**ஏ 9 பாதை திறந்தபிறகு** முறுகண்டியில ஏதோ புதுசாய் செய்யப்போறதா எங்கட தமிழ் அமைச்சர் ஒரு திட்டம் வைச்சிருக்கிறாராம். முறுகண்டிக் கோயிலைக் கட்டியெழுப்பிற திட்டமாக்குமெண்டுதான் நீங்கள் எடுத்த எடுப்பில நெப்பியள். அதில்லை, முறுகண்டியில ஒரு ஹொட்டேல் கட்ட உத்தேசமாம். கடவுள் பெயரில பிஸ்னஸ் செய்யிறதில கரைகண்டவருக்கு எந்த றோட்டத் திறந்தாலும் இந்த ரூட்டிலதான் புத்தி ஓடும் போல. இதுபோக, காரைநகரிலையும் ஒரு ஹொட்டேல் கட்டுறதாக் கேள்வி. சம்பாதிக்க நினைக்கிறவனுக்குக் கோயிலலென்ன ஹொட்டேலென்ன ரெண்டும் ஒண்டுதானெண்டுது உள்ளூர்ச் சனம்.

**உடன்படிக்கை,** சமாதானப் பேச்சுவார்த்தை, இடைக்கால நிர்வாகம் எண்ட பேச்சும் போக்கும் தொடங்கினதுக்குப் பிறகு வெளிநாடுகளில புலம் பெயர்திருந்தவை யாழ்ப்பாணம் போய்வர வெளிக்கிட்டவை. சுவிஸில இருந்து மட்டும் 1600 பேர் இலங்கைக்கு வந்தவையாம். ஆனால் கொழும்பில வந்து நிண்டு பாத்திட்டு அப்பிடியே திரும்பிப் பிளேனேறியிட்டினம் கனபேர். யாழ்ப்பாணம் போனால் ஏதும் நிதியுதவி கேட்டுடுவினமெண்ட பயம்தான் காரணமாம். வெளிநாட்டில இருந்து வீரப் பிரதாபம் பேசிறவைக்கு உள்நாட்டில வந்து உதவிசெய்யக் கசக்குதாக்கும்.



ஓடம் மட்டும் தான் ஒரு நாள் வண்டியில் ஏறுமா .....?

# வலைவிருந்து

உங்கள் அபிமான நட்சத்திரங்கள் பலர் இன்னும் சில தசாப்தங்களின் பின்னர் எப்படியிருப்பார்கள் என்ற ஒரு கம்பியூட்டர் கற்பனையிது.

பட உதவி:- மொஹமட் ஸல்மி - பஸ்யாலை.



## டயானாவின் சாவுக்கு பத்திரிகையாளர் காரணமல்ல...



டயானா மற்றும் டொடி அல் பயட் ஆகியோரின் மரணத்திற்கு அவர்கள் பயணம் செய்த காரைத் துரத்திய பத்திரிகையாளர்களே காரணம் என்று கூறி அல் பயட்டின் தந்தையார் சார்பில் தொடுக்கப்பட்டிருந்த வழக்கை பிரான்ஸ் நீதிமன்றம் நிராகரித்தது.

டயானாவை படம்பிடிக்கப் பத்திரிகையாளர்கள் மோட்டார் சைக்கிள்களில் துரத்திச் சென்றதாகவும், இதன் காரணமாக விபத்து நேர்ந்தது என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

படப்பிடிப்பாளர்கள் டயானாவின் காருக்கு வெகு தூரத்திலேயே சென்றதாகவும், அவர்கள் துரத்தியது தான் விபத்துக்குரிய காரணம் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாமல் இருப்பதாகவும் நீதிமன்றம் கூறியது.

காரை ஓட்டிச்சென்றவர் குடிபோதையில் காணப்பட்டதாலேயே விபத்து நேர்ந்ததாகத் தீர்ப்பில் கூறப்பட்டிருக்கிறது.

## லெப்டொப் திருடும் டிப்டொப் திருடர்கள்

பிரான்ஸின் பாரிஸ் நகரில் லெப்டொப் கம்பியூட்டர்களை திருடும்டிப்டொப் ஆசாமிகளை பிடிக்க முடியாமல் பொலிஸார் முடியை பிய்த்துக்கொள்கின்றனர்.

ரயிலில்தான் இந்த அட்டகாசம் அதிகளவில் காணப்படுகின்றது. அதிகாலை வேளையில் பாரிஸ் நகரிலிருந்து தூர இடங்களுக்கு அரசாங்க அதிகாரிகள் பலர் கம்பியூட்டர்களுடன் பயணம் செய்கின்றனர்.

அவர்களிடமிருந்து லாப்டாம் கம்பியூட்டர்களை ஒரு கும்பல் திருடி வருகிறது. 'பிக்பாக்கெட் அடிப்பவர்களை நாங்கள் பார்த்தவுடனேயே கண்டு பிடித்துவிடுவோம். ஆனால் இந்த நவநாகரீக திருடர்கள், பெரிய பணக்காரர் போல உடையணிந்து கையில் பீஃப்கேசுடன், ரயிலில் முதல் வகுப்புப் பெட்டியில் ஏறிவிடுகின்றனர். அவர்களைக் கண்டுபிடிப்பது சிரமமாக உள்ளது' என்று பொலீசார் கூறுகின்றனர்.

அனேகமாக தினசரி இவ்வாறான கம்பியூட்டர் களவுகள் பிரான்ஸ் ரயில்களில் இடம்பெறுகின்றன. அவற்றைத் தடுக்க பல்வேறு வழிகளில் முயற்சி செய்து பார்த்த பொலிஸார் இப்போது வேறு வழியின்றி திருடர்களுடன், திருடர்களாக ரயிலில் பயணம் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள்.

## தகவல் சொல்லும் மதுக்கிண்ணம்

### பெருங்குடி மக்களுக்கு மகிழ்ச்சிகரமான ஒரு செய்தி

மது அருந்தும் கிண்ணத்திலும் எலக்ட்ரோனிக் புகுந்துள்ளது. மதுக் கிண்ணத்தில் மது தீர்ந்து விட்டால் உடனே அது பற்றி மதுக்கடையில் மது ஊற்றும் ஊழியருக்கு ரேடியோ சிக்னல் மூலம் தெரிவிக்கும் கண்ணாடிக் கிண்ணத்தை ஜப்பானிய நிறுவனம் கண்டுபிடித்துள்ளது. மதுக் கிண்ணம் காலியாகி விட்டது என்ற தகவல் வந்தவுடன் கடை ஊழியர் விரைந்து வந்து மதுக்கிண்ணத்தை மீண்டும் நிரப்ப இது வசதியாக இருக்கும்.

மது அருந்துபவர் இனிமேல் கை தட்டி அவரைக் கூப்பிடத் தேவையிருக்காது. அதே நேரத்தில் அவர் எத்தனை பெக் மது குடித்தார் என்ற கணக்கையும் அந்தக் கிண்ணம் சரியாகச் சொல்லிவிடும்.

இந்தக் கருவியை மேலும் அபிவிருத்தி செய்து அதனை மிக விரைவிலேயே உலகம் முழுவதற்கும் விநியோகக்கப்போவதாக இதன் உற பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த உபகரணத்தைப் பாவனைக்கு விடுவதன் மூலம் மதுபானக் கடைகளில் நடக்கும் வாக்குவாதங்களையும், அடிதடிகளையும் குறைக்க முடியும் என்று நம்புவதாகவும் கூறுகிறார்கள் இதன் உற்பத்தியாளர்கள்.

## மனிதனின் கருத்தடைச் சாதனங்களால் மீன்களுக்குப் பாலியல் பலவீனம்

வட அமெரிக்காவில் உள்ள உலகப் புகழ் பெற்ற ஐம்பெரும் ஏரிகளில் வாழும் மீனினங்கள் விரைவிலேயே பாலியல் பலவீனத்திற்கு உள்ளாவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

சூழலியல் ஆய்வாளரான கிரீஸ் மேட் காஃப் சமீபத்தில் நடாத்திய ஆய்வொன்றின் போது இந்த ஏரியில் வாழும் மீன்களில் 80 சதவீதமானவை ஏதோவொரு வகையில் பாலியல் குறைபாடுகளைக் கொண்டிருப்பதாக அறிந்துள்ளார்.

ஈரி மற்றும் ஒன்டாரியோ ஆகியன நீர் நிலைகளில் இந்த நிலமைகள் மோசமாக இருப்பதாகவும் இங்கு மீன்களின் இனப்பெருக்கம் வெகுவாகக் குறைந்துள்ளதாகவும், கிரீஸ் கூறுகிறார். ஆண் மீன்கள் மட்டுமன்றிப் பெண்மீனினமும் இத்தகைய பாலியல் குறைபாடுகளால் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றன.

மனிதப் பாவனைக்காகப் பயன்படுத்தப்படும் கருத்தடை மாத்திரைகள், கிரீம் வகைகளின் கழிவுகள் என்பன இந்நீரேரிகளில் கலப்பதே மீன்களின் பாலியல்பலவீனத்திற்குக் காரணம் என ஆய்வாளர் கருதுகிறார்.

சக்தி மிக்க கருத்தடை மாத்திரைகளைப் பாவித்தவர்களின் சிறுநீர், வியர்வை போன்ற கழிவுகள் நீரேரியுடன் கலக்கும் போது அவற்றில் வசிக்கும் மீன்கள் பாலியல் ரீதியில் பாதிப்புக்குள்ளாகும் சாத்தியமிருப்பதை பிரான்ஸ் விஞ்ஞானிகளும் முன்னதாகக் கண்டறிந்து கூறியிருந்தனர்.

## நெட் ஜோக்

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஸ்ஸும், இந்தியப்பிரதமர் வாஜ்பேயும் மரநிழல் ஒன்றில் அமர்ந்து உரையாடிக்கொண்டிருந்தனர். "காஷ்மீரில் உள்ள அனைவரையும் அணுகுண்டு போட்டுக் கொன்றுவிடவா? " என வாஜ்பேய் புஷ்ஷிடம் கேட்டார்.

"அப்படிச் செய்தால் உலக நாடுகள் கண்டிக்கும்" என பதில் சொன்னார் புஷ்.

அப்போது அவர்கள் இருக்கும் இடத்திற்கு வியர்க்க விறுவிறுக்க ஓடிவந்த ஒருவர் "நீங்கள் தானே வாஜ்பேய், நீங்கள் புஷ்தானே" என்று கேட்டார். "ஆம்" என்றனர்.


"நீங்கள் எதைப்பற்றிக் கதைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார் அந்த நபர். "காஷ்மீரில் அணுக்குண்டு வீசி அங்குள்ள 12 லட்சம் மக்களையும் ஒரு மோட்டார் மெக்கானிக்கையும் கொல்லப்போகிறோம்" என்றார் வாஜ்பேய். "யாரந்த மோட்டர் மெக்கானிக்" என்று அபூர்வமாகக் கேட்டார் அந்த நபர்.

உடனே ஜோர்ஜ் புஷ்ஷைப் பார்த்து வாஜ்பேய் சொன்னார் "நான் அப்போதே சொன்னேன் தானே... அந்த 12 லட்சம் மக்களைப் பற்றி யாருக்கும் கவலையில்லை என்று."

# அர்ப்பணிப்பு

ஒரு நாட்டின் தலைவராகப் பதவியேற்றுவிட்டால் அதன் பின்னர் அந்தப் பதவியைக் காப்பாற்றிக் கொள்ள எந்தப் படுபாதகத்தையும் செய்யத்தயங்காத இந்தக் காலத்தில், தனது வாழ்நாளின் பாதியை சிறையில் செலவிட்டு, போராடிப் பெற்ற ஜனாதிபதிப்பதவியை ஒரேயொரு பதவிக்காலத்துடன் தனக்குப் பின்னால் உள்ளவரிடம் ஒப்படைத்துவிட்டு மரியாதையாக மிக மரியாதையாக ஒதுங்கிக்கொண்ட ஒரு மாபெரும் தலைவர் நெல்சன் மண்டேலா. தனது மக்களுக்காக தன் வாழ்நாளின் பெறுமதி மிக்க காலப்பகுதி முழுவதையும் அர்ப்பணித்த அவர் ஜனாதிபதிப்பதவியை துறந்தபின்னர் தன் சேவையை ஒரு நாட்டுக்கு மாத்திரமன்றி உலகம் முழுவதுக்கும் வழங்கி வருகிறார். ஆபிரிக்காவிலும் அதற்கு வெளியிலும் வேகமாகப்பரவி வரும் எயிட்ஸ் நோய்க்கு எதிரான விழிப்புணர்வு பிரசாரத்தில் ஈடுபடுகிறார் மண்டேலா.

சொவேட்டோவில் உள்ள எயிட்ஸ் நோய் சிகிச்சை நிலையம் ஒன்றில் நடைபெற்ற கருத்தரங்கின் போது எயிட்ஸினால் பாதிக்கப்பட்ட கைக்குழந்தைகளை நெசல்சன் மண்டேலாவும் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி காட்டரும் கையில் வைத்திருப்பதையே காண்கிறீர்கள்.






## கபடத்தனம்

ஆப்கானிஸ்தானில் விமானத்திலிருந்து குண்டுகளை வீசிய அமெரிக்கா அதே விமானங்களில் வந்து உணவுப்பொதிகளையும் வீசியது. குண்டுகளையும் உணவுப்பார்சல்களையும் அடையாளம் காணுவது எப்படி என்ற விளக்கமும் அமெரிக்கர்களால் வழங்கப்பட்டது.

அதே அமெரிக்காவின் கபடத்தனத்தை நிரூபிக்கும் "சிறுபிள்ளைத் தனமான" புகைப்படமிது. இதுவும் ஆப்கானிஸ்தான் சமாச்சாரம் தான். காபூல் நகரெங்கும் குண்டுமழை பொழிந்து ஆயிரக்கணக்கான அப்பாவிகளை கொன்று குவித்த அமெரிக்கா இப்போது அங்கு "ஜோக்கர்"களை அனுப்பி மக்களை மகிழ்விக்கிறது. ரொபின் வில்லியம் என்ற பிரபல ஹொலிவுட் நகைச்சுவை நடிகர் அண்மையில் காபூல் நகரில் உலா வந்து அங்குள்ளவர்கள் மத்தியில் தனது "நடிப்புத்திறனை" வெளிப்படுத்தினார்.

செப்டம்பர் 11ம் திகதி அமெரிக்க நகரங்கள் மீதான தாக்குதலின் போது பொது மக்களுடன் சேர்த்து நூற்றுக்கணக்கான தீயணைப்புப்படை வீரர்களும் உயிரிழந்தமை ஞாபகமிருக்கும். உலக வர்த்தக நிலையம் மீது விமானம் மோதுண்டு அது தீப்பற்றியெரியும் போது கட்டிடத்திற்குள் அகப்பட்டவர்களைக் காப்பாற்ற முயன்றவர்களே இவ்வாறு உயிரிழந்தார்கள். உலக வர்த்தக நிலையத்திற்குள் தீயணைப்புப்பணியில் ஈடுபட்டு உயிர்தப்பி வெளியில் வந்த ஒரு வீரர் அன்றைய தினம் கொல்லப்பட்ட சக ஊழியர்களின் குடும்பத்தினருக்காக நிதி சேகரிக்கிறார். இதற்காக வேண்டி அவருக்கு உதவுவது உயிரிழந்தவர்களின் பாதணிகள். அந்த பாதணிகளுடன் வாஷிங்டன் தீயணைப்பு பணிமனைக்கு முன்பாக நிற்கும் இவ்வீரர் தான் சேகரிக்கும் நிதியைக் கொண்டு உயிரிழந்த வீரர்களின் பிள்ளைகளின் கல்விக்கு உதவப்போவதாகக் கூறுகின்றார்.




## தகவல் பெட்டி

இரண்டு வல்லரசுகளினால் உக்கிரமாக தாக்கப்பட்ட நாடு ஆப்கானிஸ்தான். 1970களில் ரஷ்யா ஆப்கானிஸ்தானை ஆக்கிரமிக்க முயற்சித்தபோது அங்கு பாரிய போர் மூண்டது. கெடுபிடி யுத்தகாலத்தின் பின்னர் ரஷ்யர்களுக்கு தமது ஆயுத பலத்தை பரிசோதிக்ககூடிய வசதியான களமாக ஆப்கான் விளங்கியது. எவ்வாறெனினும் முஜாஹிதீன் போராளிகளின் கடும் எதிர்ப்பை சமாளிக்க முடியாமல் ரஷ்ய இராணுவம் காபூலிலிருந்து தோல்வியுடன் வெளியேறிசந் சென்றது. தமது ஆயிரக்கணக்கான படை வீரர்களை பலிகொடுத்த ரஷ்யா அவசரமாக ஆப்கானை விட்டு வெளியேறியதில் ஏராளமான கனரக ஆயுதங்களை விட்டுச்சென்றது.

### இன்னதென்று புரியாமல்...

அவ்வாறு கைவிடப்பட்ட ஆயுத தளபாடங்களில் சிலவற்றை பிந்திய காலங்களில் ஆப்கான் போராளிக் குழுக்குள் தமது பாவனைக்காக எடுத்துக்கொண்டன. ஏனையவை வீதியோரங்களில் கிடக்கின்றன. இவ்வாறு கவனிப்பாரற்றிருக்கும் பீரங்கி ஒன்றில் அப்பாவிச் சிறுவர்கள் ஏறி விளையாடுவதைத் தான் இங்கே காண்கிறீர்கள்.




## சினி விசிட்

## விஜய்யின் கல்யாண மண்டபம்

[illegible] சம்பாதிப்பதையெல்லாம் [illegible] விழிப்பார்கள். ஆனால் இன்றைய [illegible] நடிகர்கள்கூட புத்திசாலித்தன [illegible] கிறார்கள். சிலர் சொத்துக்களாக [illegible] போடுகிறார்கள். சிலர் திருமண மண்டபங்களாக கட்டி வாடகைக்கு விடுகிறார்கள். இந்த விஷயத்தில் முதலிடம் நடிகர் விஜய்க்குத்தான்.

[illegible] மீபத்தில் சில இடங்களில் திருமண மண்டபங்களைக் [illegible] னார். இப்போது பணம் கொழிக்கும் இன்ஜினியரிங் காலேஜ் ஒன்றை கட்ட வருகிறார்



பிரசாந்த்-சிம்ரன்
படம்: தமிழ்



## 'ரேஸ்' கலர் மாறியது ஏன்?

ரோஸ் நடிகைக்கு புதுக் காதலர் கிடைத்து விட்டாராம். அதனால்தான் ரெ ரம்ப நாளாக காதலித்து வந்த மணியான காதலரை கழற்றி விட்டு விட்டாராம்.

மணியான டைரக்டரும், ரோஸும் எத்தனை டீப்பாக லவ் பண்ணிக் கொண்டிருந் தார்கள் என்பது அவர்களைவிட அகில உலகத்திற்கும் நன்றாக தெரியும். இந் நிலையில் திடீரென மணியான காதலரை ரோஸ் கழற்றி விட்டது திரையுலகையே கலக்கியுள்ளது. ரோஸ் ஏன் இப்படி மாறினார் என்று அனைவரும் மண்டையைப் பிய்த்துக் கொள்கின்றனர்.

இந்நிலையில் ரோஸ் கலர் மாறியதற்குரிய காரணமாக கோடம்பாக்கத்தில் உலவி வரும் கிசு கிசு இதுதான்:

மணியான காதலர் மீண்டும் ஏதாவது நல்ல படம் கொடுத்து எழுந்து சொந்தக் காலில் நிற்பார் என்று பொறுத்துப் பொறுத்துப் பார்த்த ரோஸ் வெறுத்துப் போய்விட்டார். அடிக்கடி பணம் தான் கேட்கிறாரே தவிர உருப்படியாக ஒரு படத்தை தயாரித்து, இயக்கும் வழியைக் காணாததால் நொந்து போய் விட்டாராம்.

மறுபக்கம் கடன்காரர்கள் வேறு அரிக்கத் தொடங்கியுள்ளனர். கோர்ட், கேஸ், அபராதம் என அலைந்து அலைந்து ஓய்ந்து போய்விட்டார். டி.வி சீரியலில் நடிக்கும் வாய்ப்பு வந்த போதிலும் அதில் அவருக்குக் கொடுக்கப்பட்ட சம்பளத்தில் பாதியை ஒரு பைனான்ஷியர், அவருடைய பாக்கித் தொகைக்காக கேட்டு வாங்கிக் கொண்டு விட்டாராம்.

இதனால் நிம்மதியிழந்து போன நிலையில் இருந்த ரோஸுக்கு ஒரு பிரபலத்தின் அறிமுகம் கிடைத்துள்ளது. பணப் பசையுள்ள அவர், ரோஸிடம் ஆறுதலாக பேசி, பிரச்சினைகள் குறித்துக் கவலைப்பட வேண்டாம் என்று கூறியுள்ளார். பழகப் பழக அவரிடம் மனதைப் பறிகொடுத்தார் ரோஸ்.

குறிப்பிட்ட பிரபலம் ஏராளமான சொத்துக்களுக்குச் சொந்தக்காரர். ஊட்டியில் தனியான ஹோட்டல் வைத்திருக்கிறார். ரோஸுக்கு ஆறுதல் கூறுவதற்காக அவரை தன் ஹோட்டலுக்கு அழைத்துச் சென்று ஒரு வாரம் தங்க வைத்தார். அந்த சங்கமத்தில் அகமகிழ்ந்துபோன ரோஸ் அடிக்கடி 'பிர பலத்தின்' கட்டிலறையை அலங்கரிக்கத் தொடங்கியிருக்கிறார். இரவுகளை பெரும் பாலும் பிரபலத்துடன்தான் கழிப்பார் ரோஸ் என்றளவுக்கு நிலைமை சீரியஸானது.

இது மணி காதுக்கு வந்துள்ளது. அதிர்ந்து போன அவர், ரோஸிடம் சண்டை போட்டுள்ளார். உங்களை நம்பி இருந்ததற்கு கோர்ட்டுக்கும், வீட்டுக்குமாக அலைந்ததுதான் மிச்சம் என்று பதிலுக்கு சாடியுள்ளார் ரோஸ். சண்டை முற்றவே இனிமேல் நண்பர்களாகவே இருப்போம் என்று கை குலுக்கி, மணிக்கு பெரிய கும்பிடு போட்டு அனுப்பி விட்டாராம்ரோஸ். இப்போது அந்த முக்கியஸ்தருக்கு தன் ஒட்டுமொத்த வளர்ச்சியையும் வாரி வழங்குகிறார்.



## சூர்யாவின் ஸ்ரீ

சூர்யா நடிக்கும் 'ஸ்ரீ' பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

கிட்டத்தட்ட நந்தா ரௌடி கேரக்டரை நினைவூட்டும் வகையில் தான் இதிலும் சூர்யாவுக்கு கெட்அப் அமைந்திருக்கிறது. ஆனால், முற்றிலும் வித்தியாசமான வேடம் தரப்பட்டிருக்கிறது என்கிறார் இயக்குனர்.

இதில் சூர்யாவுக்காக ஒரு பாடலைப் பாடியுள்ளார் நடிகர் விக்ரம். இதனால் பிற நடிகர்களுக்காக வாய சைத்த பிரபல நடிகர்கள் வரிசையில் சேருகிறார் விக்ரம். முன்னவர்கள் கமல் (அஜித்துக்கா), விஜய் (விக்னேஷுக்கா).

நாட்டுக் குதிரை என செல்லமாக பெயர் சூட்டப் பட்டிருக்கும் காயத்ரி ஜெயராமின் அசத்தலான பாலே நடனம் இந்தப்படத்தில் வருகிறது. முறைப்படி பாலே நடனம் கற்றுள்ள காயத்ரி கலக்கலாக ஆடியுள்ளாராம்.

அந்தக் கால கலகலா காமடியன் தேங்காய் சீனி வாசனின் பேத்தி ஸ்ருதிகாவும் படத்தில் ஒரு ஹீரோயினாக வருகிறார்.

## 'மனசெல்லாம் நீனே!'

சிம்ரனுடன் காதல் தோல்வி, 'ஐ லவ் யூடா' [illegible]குமா என்ற குழப்பத்துடன் நாட்களைத் தள்ளிக் கொண்டிருக்கிறார் ராஜுசுந்தரம். இதனால் சகோதரரான நாகேந்திரபிரசாத்தை [illegible] ஹீரோவாக்கும் முயற்சியில் இறங்கி [illegible] தந்தை சுந்தரம். இவர் சொந்தமாக [illegible] நீனே' என்ற தெலுங்குப் படத்தை [illegible] ஹீரோயின் காயத்ரி [illegible] புது ஹீரோக் [illegible] ரிக்கும் தெலுங்கு [illegible] லா [illegible] [illegible]கிறது.

## இலங்கையில் 'உன்னை நினைத்து'

லக்ஷ்மி மூவி மேக்கர்ஸ் சார்பில் கே.முரளீதரன், வி.சுவாமிநாதன், ஜி.வேணுகோபாலன் தயாரித்து வரும் படம், 'உன்னை நினைத்து' இதன் படப்பிடிப்பு சென்னையிலும் விசாகப்பட்டினத்திலும் நடைபெற்றது. முக்கியமான ஒரு பாடல் காட்சிக்காக படப்பிடிப்புக் குழுவினர் இலங்கை வந்து சென்றனர்.

பாடல் காட்சி ஒன்றுக்காக இயக்குநர் விக்ரமன் வெளிநாட்டில் படப்பிடிப்பை நடத்துவது இதுதான் முதல் முறை. "என்னைத் தாலாட்டும் சங்கீதம் நீயல்லவா

உன்னை சீராட்டும் பென்னூஞ்சல் நானல்லவா
உன்னை மழை என்பதா-இல்லை தீ என்பதா
அந்த ஆகாயம், நிலம், காற்று நீ என்பதா
உன்னை நான் என்பதா?"

இப்படி ஒரு கவித்துவமான பாடலுக்கு சூர்யா, லைலா, ஸ்னேகா ஆகியோர் மலையகத்தின் நுவரெலியா, கண்டி, ரம்பொட போன்ற இடங்களில் ஆடிப்பாடினார்கள்.

## ஸ்ரீகாந்த் கேட்ட ஒருகோடி

'பஞ்சதந்திரம்' படத்தில் நடிக்க முதலில் கிரிக்கெட் வீரர் ஸ்ரீகாந்தை அணுகினார்கள். அவர் கேட்ட சம்பளம் எவ்வளவு தெரியுமா? ஒருகோடி. [illegible] காணோம் துணியைக் காணோம் என்று ஓடிவிட்டார் தயாரிப்பாளர். அதன்பின்னர்தான் யூகி சேதுவை நடிக்க வைத்திருக்கிறார்கள். படத்தின் ஹீரோ 5 பேரும் கிரிக்கெட் ஸ்ரீகாந்த் போலவே தாடி வைத்த [illegible] ஸ்ரீகாந்த் மறுத்ததற்கும் சம்பந்தம் இல்லையென்றலும் புலம்பிக்கொண்டிருக்கிறார் ஸ்ரீகாந்த்.

இவருக்கு ரஜினி அவ்வளவு பழக்கம் இல்லை. இருந்திருந்தால் என் படங்களையோ என் [illegible] யாரும் பின்பற்றக் கூடாது என்று சொன்ன மாதிரி இவரையும் சொல்ல வைத்திருப்பார்.

**முகப்பில்** சினேகா | சரத்குமார்

## சங்கவியின் மீள் வருகை

கோடம்பாக்கம் பக்கம் போனல் 'பாபா' காற்றுத்தான் வீசுகிறது. எதைச் சொல்வது எதை விடுவது. தான் உண்டு தன் வீடு உண்டு என்று இருந்துவரும் நடிக, நடிகைகள் பலருக்கு இதில் வாய்ப்பு கிடைத்துள்ளது. அந்த லிஸ்டில் ஒருவர் சங்கவி.

ஆம் வீட்டிலிருந்த சங்கவியை அழைத்து வாய்ப்புக் கொடுத்திருக்கிறார் 'பாபா'. இந்த நன்றிக்கடனுக்கு என்ன பரிகாரம் பண்ணப் போகிறாரோ சங்கவி!

## அழகிக்குப் பிறகு

'அழகி' படத்தின் வெற்றியை தொடர்ந்து அதே தயாரிப்பாளர் இயக்குனர் தங்கர் இயக்கத்தில் அடுத்த படத்தை தயாரிக்க திட்டமிட்டிருக்கிறார். ஹீரோக்களிடம் கால்ஷீட் கேட்டுப்போகும் அவர 'அழகி'யை முழுக்க முழுக்க இயக்கியது தான்தான் என்று ரேஞ்சுக்கு பேசிக்கொண்டிருக்கிறார். அப்படியென்றால் அந்தப்படத்தில் தங்கர் பச்சான் என்னதான் செய்தார் என்று குழம்பிப் போகும் ஹீரோக்கள். பச்சானிடம் விஷயத்தை போட்டு வைக்க தனபதியை கூப்பிட்டு சூடாக கதைத்திருக்கிறார் பச்சான். இப்போதெல்லாம் அடக்கி வாசிக்கிறார் தனபதி.

"கும்மாளம்" ஆகிய [illegible]
ரத்தி, ஏற்கனவே [illegible]
★ "பேசாத [illegible]
ஜோடியுடன் கூடு[illegible]
ளார். இதனால், [illegible]
★ மும்தாஜின் [illegible]
பட்டிதொட்டியெங்[illegible]
எத்தையும் கலக்கி [illegible]
பாட்டுக்கச்சேரி. [illegible]
இந்தப் பா[illegible]
பெறுகி[illegible]



[illegible]-ராதிகா சௌத்ரி
படம்: [illegible]-2



## அடிக்கடி ஆளை மாற்றுகிறார் சிம்ரன்

சிம்ரனின் தொல்லை தாங்கவே முடியவில்லை. அடிக்கடி ஆளை மாற்றிக் கொண்டே இருக்கிறார். இது யாருடைய புலம்பலாக இருக்கும் என்று சத்தியமாக உங்களுக்குத் தெரியாது. இது சிம்ரனிடம் வேலை பார்த்த மேனேஜர்களின் புலம்பல். சிம்ரனிடம் பணியாற்றிய சமீபத்திய மேனேஜரையும் இப்போது மாற்றிவிட்டார். இப்போது மாதவனின் மேனேஜர்தான் சிம்ரனுக்கு மேனேஜர். வெளியே துரத்தப்பட்ட முன்னாள் மேனேஜர், "ராஜுசுந்தரத்தோட இருந்த காதலுக்கு நான்தான், அன்னப்பறவையாக செயல்பட்டேன். இப்போது என்னைக் கண்டால் ராஜுசுந்தரம் ஞாபகம் வருதாம். அதற்காக என்னை துரத்திட்டாங்க சிம்ரன். அவர் ஞாபகம் வந்தா நான் என்ன பண்ண முடியும் என்று இந்தியில் புலம்பி வருகிறார்.

சமீபத்தில் ஒரு ஆங்கில இதழுக்கு ராஜுசுந்தரம் யாரு பெயரையே கேட்டது இல்லையே என்று சொல்லி இருக்கிறார் சிம்ரன்.

## அஜித்-விஜய்யின் அச்சம்

'ரோஜாக்கூட்டம்' படம் நன்றாக ஓடுவதில் பெரும் அதிர்ச்சியடைந்திருப்பது அஜித் மற்றும் விஜய் இருவரும்தான். முதல் படத்திலேயே தங்களுக்கு இணையாக பேசப்படும் புதுமுகம் ஸ்ரீகாந்தின் வளர்ச்சி இருவரையும் மிரள வைத்துள்ளது. ஸ்ரீகாந்தைவிட ஆர்வமாக தியேட்டர்களுக்கு போன் செய்து படம் எப்படி ஓடுகிறது என்று விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள் இருவரும். எல்லாவற்றுக்கும் மேல் விஜயின் அப்பா எஸ்.ஏ.சந்திரசேகர், ஸ்ரீகாந்தை வைத்து ஒரு படத்தை எடுக்க திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார். [illegible] தான் என்று [illegible] கொடுக்க [illegible] ஒலிகிறார் [illegible].

## உலக அழகியின் குழறுபடிகள்

உலக அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் அதே வேகத்தில் திரைப்படத் துறையில் நுழைந்து இந்தி, தமிழ் உட்பட பல மொழிப் படங்களில் நடித்து வந்தார் ஐஸ்வர்யா ராய்.

அவரது காதலருடன் அவர் அடிக்கடி ஷூட்டிங் நேரத்தில் வெளியே கிளம்பிச் சென்றுவிடுவதாக இந்தி திரைப்படத்துறையில் புகார் எழுந்தது. மேலும், நடிகர் அமீர்கான் ஐஸ்வர்யாவுடன் நட்புக் கொண்டு அவர் பின்பாக சுற்றி வந்ததாகவும் கூறப்பட்டது. அமீர்கானை தவிர்த்து வந்த ஐஸ்வர்யா ராய் ஒரு கட்டத்தில் அவர் மீது கடும் கோபம் கொண்டு காவல்துறையிலும் புகார்செய்ய, போலீசார் வழக்கு எதுவுமின்றி பிரச்சினையை முடித்து வைத்தனர்.

இந்நிலையில், அதிரடியாக பல படங்களில் ஒரே நேரத்தில் நடித்து வந்த உலக அழகி தற்போது ஓரிரண்டு படங்களில் மட்டுமே நடித்து வருகிறார். காலிஷீட் குழறுபடிகளே இவருக்கு படங்கள் குறையக் காரணம் என்கிறது பாலிவுட் வட்டாரம்.

## தேவயானியின் சாதுர்யம்

காசு பார்க்கும் வழியைக் கண்டுவிட்டார் தேவயானி. அம்மா வேடமோ அண்ணி வேடமோ, எது வேண்டுமானாலும் நடிக்கத் தயார் என்ற முடிவுக்கு வந்துவிட்டார். அம்மன் வேடமாகவும் அப்புறம் சேரிப் பெண்ணாகவும் துணிந்து இறங்கிவிட்டார். ரசிகர்கள் தன்னை மறந்து விடக்கூடாது என்பதில் குறியாக இருக்கிறார். சான்ஸ் கேட்டு வருபவர்களின் மனம் புண்படாதபடி எந்த ரோலுக்கும் ஓகே சொல்லி விடுகிறார். ம்... பிழைக்கத் தெரிந்தவர்!



கார்த்திக்-மந்த்ரா
படம்: குபேரன்

## சிம்ரனின் மற்றொரு தங்கையும் சினிமாவில்

மோனலைத் தொடர்ந்து சிம்ரன் தங்கை ஜோதியும் நடிக்க வந்துள்ளார். மேக்கப்பில்லாமல் இவரைப் பார்க்கும் யாரும் இவரா? நடிகையா? என்று ஆச்சரியப்படுவார்கள். ஆனால், மேக்கப் பிற்குப் பின் அட இவர்தானா என்று கேட்கும்படி யான அழகு. நாசர் தயாரிக்கும் 'பாப்கார்ன்' என்ற படத்தில் சிம்ரனின் மகளாக நடிக்கிறார்.

★புதுமுக இசையமைப்பாளர் இமானுக்கு திரைப் படவாய்ப் புக்கள் வருகிறதாம். "தமிழன்" பாடல்களின் எதிரொலி தானாம் இது. சந்தோஷத்தில் ஒரு சுற்றுபெருத்துவிட்டாராம் இமான். இவர் இசையமைப்பாளர் அஸ்லம் பாஷாவின் சொந்தக்காரர் என்பது போனஸ் செய்தி.

★"எங்கே எனது கவிதை", [illegible] படங்களில் நடித்துவரும் பெங்களூர் கிளியான [illegible] தமிழ் டிவி சீரியல் ஒன்றில் நடித்தவர்.

[illegible]னாலும் பேசுமே" படத்தில் குணால்-மோனல் [illegible]வாக மம்தா என்ற புதுமுகமும் சேர்க்கப்பட்டுள் [illegible]மோனலுக்குக் கடும் அதிருப்தியாம்.

[illegible] சேம குலுக்கல் ஆட்டத்தால் தமிழகத்தின் [illegible]தும் வியாபித்துவிட்ட "மல மல மலே.." பாட்டு கேர [illegible] வருகிறதாம். அங்கு நடக்கும் [illegible] கல்யாணக்கச்சேரிகளில் [illegible] கண்டிப்பாக இடம் [illegible]றதாம்.

★தேங்காய் சீனிவாசனின் [illegible] ஸ்ருதிகா தனது [illegible] கண்கள் தான் கவர்ச்சி [illegible] என்கிறார். கண்ணைக் காட்டியே ரசிகர்களைக் கவர்ந்துவிட முடியும் என்று கூறுகிறாராம் ஸ்ருதிகா.

மி ன் சி ன்

## ராஜுசுந்தரத்திற்கு சிம்ரன் 'குட்பாய்'

ராஜுசுந்தரம்-சிம்ரன் காதல் முறிவு உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுவிட்டது.

இது குறித்து ராஜுசுந்தரமே ஒரு வார இதழுக்குப் பேட்டியளித்துள்ளார். டான்சராக இருந்து மாஸ்டராகி முன்னணி ஹீரோயினான சிம்ரனையே ராஜு மடக்கியபோது திரையுலகமே ஆச்சரியத்துடன்தான் பார்த்தது. இந்தக் காதலை மையமாக வைத்தே 'ஐ லவ் யூடா' என்ற படமும் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதில் ஹீரோவாக ராஜுசுந்தரமும் ஹீரோயினாக சிம்ரனும் நடித்துள்ளனர். இன்னும் இந்தப் படம்கூட வெளியாகாத நிலையில் இருவரும் பிரிந்துவிட்டனர்.

இந்தப் பிரிவில் சகலகலா நடிகருக்கு மிகப் பெரிய பங்கிருப்பதாகக் கூறப்படுகிறது.

அந்த நடிகருடன் ஜோடி சேர்ந்து நடித்த பின்னர்தான் சிம்ரனின் நடவடிக்கைகளில் மாற்றம் தெரிய ஆரம்பித்ததாக ராஜு கருதியுள்ளார். இது குறித்து சிம்ரனிடம் ராஜு விளக்கம் கேட்க எடுத்தெறிந்து பேச ஆரம்பித்துள்ளார் சிம்ரன்.

இதையடுத்து கொஞ்ச கொஞ்சமாய் விலகி வந்த இருவரும் இப்போது முழுவதுமாக ஒதுங்கிக் கொண்டுவிட்டனர். எங்கள் இடையில் எந்த உறவும் இல்லை என்று ராஜு பேட்டி கொடுத்துள்ளார்.

"நான் இது பத்தி யார்கிட்டேயும் பேசாமல் இருந்தேன். நானும் சிம்ரனும் காதலித்தது உண்மைதான். ஆனா இப்போ பிரிஞ்சிட்டோம். எங்கள் காதல் முறிஞ்சு போச்சு. இப்போ சிம்ரன் ஒரு நடிகை. நான் ஒரு டான்ஸ் மாஸ்டர். அவ்வளவுதான்.

நாங்கள் பிரிஞ்சதுக்குக் காரணம் மிஸ் அன்டர்ஸ்டாண்டிங்தான். வேற எதையும் சொல்ல விரும்பலை. அந்தப் பெண்ணை காயப்படுத்துற மாதிரி எதையும் நான் சொல்லமாட்டேன்." என்று கூறுகிறார் ராஜுசுந்தரம்.

## 'சித்தியின்' ஆசை

தன் காதல் கணவரை எப்படியாவது மீண்டும் ஒரு முன்னணி கதாநாயகனாக் கொண்டுவர வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார் சித்தி.

முன்னணி இயக்குனர்களிடம் கணவருக்காக ரெகமண்டேஷனுடன் செல்கிறார் ஆனால் சித்தப்பா என்றாலே அலறியடித்து ஓடுகிறார்கள் பிரபல டைரக்டர்கள்.

இவர் நடித்த படங்கள் எல்லாமே வரிசையாக சறுக்கிக் கொண்டதுதான் காரணம். இதற்கிடையில் தன் கணவரை வைத்து சொந்தப்படம் எடுக்கும் எண்ணத்தில் இருந்த சித்திக்கு அந்த ஆசையிலும் மண்! பைனான்ஸ் செய்ய ஒருவரும் தயாரில்லையாம். சின்னத்திரையிலிருந்து வந்த வரவுகளை சித்தப்பா தன் முந்தைய கடன்களை அடைக்கப் பயன்படுத்திவிட்டாராம். அதனால் சித்தியின் கையும் இந்த நாட்களில் காலியாக இருக்கிறதாம்.

## தமிழுக்குக் கிடைத்த மரியாதை!

தமிழ் வசனங்கள் வருவதால் 'எச்2ஓ' என்ற கன்னடப் படத்தைத் திரையிட்ட பல்வேறு திரையரங்குகள் மீது கடும் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

அதையடுத்து இந்த வசனங்கள் அனைத்தையும் நீக்கிவிட அந்தப் படத்தின் தயாரிப்பாளர் முடிவு செய்துள்ளார்.

பிரபுதேவா, கன்னட நடிகர் உபேந்திரா ஆகியோர் நடித்த இந்தப் படத்தில் தமிழ் வசனங்களும், 'நான் உன்னை விடமாட்டேன்' போன்ற சில தமிழ் பாடல் வரிகளும் வருகின்றன.

இதற்கு கன்னட சாளுவளி என்ற அமைப்பை வைத்துக் கொண்டு தமிழர் எதிர்ப்பு செயல்களில் ஈடுபட்டு வரும் வாட்டாள் நாகராஜ் போன்றவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இந்தப் படத்தை திரையிட்ட திரையரங்குகளுடன் கன்னட வெறிக் கும்பல்கள் நுழைந்து தாக்குதல் நடத்தின. இதனால், இந்தப் படத்துக்கு மக்கள் வருவது நின்று போய்விட்டது.

மேலும் பல திரையரங்கு உரிமையாளர்களும் இந்தப் படத்தை எடுத்துவிட்டனர்.

இதனால், படத்தில் இருக்கும் அனைத்துத் தமிழ் வசனங்களையும் நீக்கிவிடவும், தமிழ் பாடல் வரிகளை நீக்கிவிடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. [illegible]





## வா என்தேவியே!

வா,
நம் காதலுக்கு
வரையறை போட்ட
வேலிகளைக் கடந்து...
☆★
மனித தடையங்களற்ற
வேறு உலகிற்கு
நாம் செல்வோம்!
☆★
கசப்பான எமது எதிர்கால
நினைவுகளை
நாம் மறப்போம்
☆★
என் ஆத்மாவில்
உன்...
நினைவுகள் மட்டுமே
நிறைந்திருக்கட்டும்!
☆★
என் இதயவேதனை
கண்ணீர் துளிகளாய் சிந்தும்போது
உன் உதடுகள் அல்லவா
எனக்கு இதமான ஒத்தடங்கள்
☆★
என் இனியவளே!
என்றும் உன்னைப் பிரியாது
என் இதயத்தின் அருகே
வைத்திருப்பேன்!
☆★
பூவைப்போன்று
என்றும் கசங்காமல்
உன்னை
விழித்திருந்து காப்பேன்!
☆★
இதயமும் இதயமும்
பேசிக்கொள்ள
இவ்வுலகில் ஆயிரம் தடைகளா?
உலகம் மிகவும் கொடியது
☆★
வா,
என் தேவி
ஒளியும், ஒலியும் இல்லாத
இருளுக்குள் தனித்திருப்போம்!
☆★
உனக்கு நானாக
எனக்கு நீயாக
என்றும் என்றும்
என்றென்றைக்குமாய்...
எனக்கு மட்டும் தெரியும் நீ
உனக்கு மட்டும் தெரியும் நான்
இதயத்துடிப்பு மட்டுமே
எம் வார்த்தைகள்
இப்படியே இருந்து விடுவோம்
இறுதி மூச்சு வரை!

பா.கவிநிலா, டிக்கோயா.

## புதுமனிதனாய் இனி.....

உன் கன்னத்து முத்துக்களை
உதட்டோர
பூனைமீசையைக் கூட
ரசித்தவன் நான்.

இருந்தும்
உந்தன் பார்வை
என்னை புறக்கணித்து
உன்னைத் தீண்டிய
காற்று
என்னைத் தாண்ட
மறுத்து
இன்னும் இன்னும்
நெஞ்சில்
ரணங்கள் ஆயிரம்.

உனக்காக
எத்தனை
சிறிய சந்தர்ப்பங்கள்
மூளையில்
எத்தனை மூலைகள்
வாழ்நாளில் தான்
எத்தனை சதவீதம்...

ஏன்
உன் பின்னலில்
என் எண்ணங்களை
தூக்குத்தண்டனையிட்டுக்
கொன்றாய்?

உன் உதட்டசைவில்
என் வார்த்தைகளை
ஏன்
சிக்கித்திணறவைத்தாய்?

சில பெண்கள்
சொகுசு தேடும்
பூனைக்குட்டிகள்
என்னும் பழங்கதையை
ஏனடி
தூசுதட்டினாய்...

நிழல்தரா மரங்களாய்
உன் நினைவுகள்
நெஞ்சில்
இருந்தென்ன லாபம்?

இந்தக் கவிதையோடு
உந்தன் நினைவுகளிற்கும்
சேர்த்தே
முற்றுப்புள்ளி வைக்கிறேன்
புதுமனிதனாக
இனி
புனர்ஜென்மம் எடுக்கிறேன்
சத்தியமாக...

க.ராகுலன், வெள்ளவத்தை.

## நந்தவன நாட்கள்

ப்ரியமானவளே
உன் நினைவுகள் தந்த
ரணங்களைக் கூட
ரகசியமாய் ரசித்திருக்கிறேன்

உன்னுடன் கழித்த
கணப்பொழுதுகள் கூட
காலத்தால் அழியாத
கல்வெட்டுக்கள்-எனக்கு

அனுமதி பெறாமலே...
அடிமனதில்
உரிமையோடு உட்கார்ந்துகொண்டு
உல்லாச வானம்பாடியாய் உலாவந்தவள்-நீ

வாலிபத்தின் வசந்தமே-உன்
வார்த்தைகள் ஒவ்வொன்றும்
வசந்தத்தின் வாசற்தலங்கள்

உன் நினைவுகளோடு
நகரும் ஒவ்வொரு நாளும்
நாட்குறிப்பில் பதியப்படும்
நந்தவன நாட்கள்-இருந்தும்

பழகும் போதெல்லாம்-தென்றலாய்
பசப்புக் காட்டிய நீ
புரிந்துகொள்ளச் சொன்னதும்
புயலாய் மாறியதேன்?

எஸ்.மனோஹரன், ஸ்ரீபாத கல்விக் கலாசாலை.

## இறப்பின்றிய பிறப்பு

இறப்பின்றிய பிறப்பு
நீண்டகால நினைவுகள்
என்- மனசுக்குள் - இன்னும்
தொங்கிக்கொண்டிருக்கிறது

வாழ்த்துக்களாலும்-நல்
வார்த்தைகளாலும்...
மகிழ்ந்திருந்த மனசு
அந்த நாட்களின்
ஞாபகங்களைத் தான்
இப்போதெல்லாம்
அசைபோட்டுக்கொள்ள
முடிகிறது.

மாற்றங்களுக்காக
மனசைக்
கட்டிவைத்தாலும்
உடைப்பெடுத்த
வெள்ளமாய்-அந்த
நினைவுகள்
ஓடிவருகின்றது

என்னுள்
அமிழ்ந்திருக்கும்
உணர்வுகள்
உயிர் பெறும்போது
ஆயிரமாயிரம்
கனாக்களுக்குள்
நான் சங்கமமாகின்றேன்

இந்த நிகழ்வுகளால்
ஒவ்வொரு தடவையும்
நான்
இறக்காமலே
மீண்டும்... மீண்டும்
பிறக்கின்றேன்.

இ.சாந்தசீலன், பொத்துவில்.

## மூன்று எழுத்துக் கெட்ட வார்த்தை

நேரத்தையும்
நிலமையையும்
பாராது-மனதில்
கருக்கட்டிவிடம்
சிசு!
••
ஒட்டிக்கொள்ள
உயிர் கிடைத்தால்
சட்டென பெருகும்
வைரஸ்.
••
கர்வம், குழைவு
ரசனையை
கொண்டுவந்த
சேர்க்கும்
காவி.
••
கண்களுக்கு
சூரியனையும்
முகத்துக்கு
சந்திரனையும்
கடத்தி வந்து
ஒளிர வைக்கும்
கடத்தல்
கொடையாளி.
••
உயிரை உருக்கவே
மனிதர இதயத்தோடு
ஒட்டி வளரும்
புற்று நோய்!

ஜெ. அபிராமி,
கல்முனை.

## திரும்புமா அந்நாள்?

என்
வாழ்க்கையில்,
முற்றத்து மா...
கிணற்றடிக் குளியல்...
தெருவோரத்து அரட்டை...
கோவிலடிக் கடலை...
நேற்றைய கனவாய்
யுத்தத்தில்
இரவோடிரவாய்
ஓடியே போனது:
இப்போது மீண்டும்,
ஒரு வாழ்க்கை!
அனைத்தும் பழையதாய்
திரும்பிவிடும் - ஆனாலும்
நெஞ்சில் ஓர் நெருடல்...
திரும்புமா?
அந்த நாள்.....

எஸ்.ரஜீவ், வவுனியா.

## கவிக்குயிலே....

குயிலே நான் ஒரு பட்டமரம்
நான் செழித்து நின்றதே...
நீ என் கிளையில் தேனாய்
இசை(னி)த்தமையால் தான்!
நீ என்னை விட்டுப்
பறந்து போனபோதும்
நான் மண்ணோடு சாயவில்லை
ஏன் தெரியுமா?
என்றோ ஒரு நாள் நீ
என்னைக் காணவருவாய்...
பட்டுப்போன எனக்கு
உன் கீதம்
உயிர்ப்பசுமை தரும் என்ற
நப்பாசையில் காத்திருக்கின்றேன்.

புன்னை மரக்குயிலை
பூமிக்குக் கொண்டு வந்தேன்
பூமியெல்லாம் இசையாச்சு -ஆனால்
புன்னை மரமோ விறகாச்சு
இது பாடல் அல்ல - என்
இதயத்தில் நீ தந்த பள்ளம்!

எம்.கவிதா, வவுனியா.

## ஒருநாள் வரும்!

இனிவரக் காத்திருக்கும்
மையிருளை
எரிக்கவெனப் புறப்பட்ட
சிறு பறவை

நினைவிருக்கும் வலியின் வேதனையை
கண் இமையில்
உயிர் வாழ்வைக் கத்தரித்த
பாழ் வெளிகள்

என் சிறிய விரல்களுக்குள்
வேறொரு கைகோர்க்காமல்
தடுக்கின்ற உன் நினைவில்
மனமெழுதி வரச்சொல்லும்
நீ நடந்த பாதைகளின்
ஆரவாரம் என்னாச்சு?

மூச்சுவரை உயிர் வந்து
முடிந்த பின்னரா
உன் மயக்கம் தெளிவது சொல்

அகலிகைகள், சந்திரமதிகள்
கல்லறைக்காற்று
இனிவரும் காதலைச்
சபித்துவிடப் போவதில்லை

உனதான
நினைவெங்கும்
நரம்புகளால் கீறிக்கொண்ட
சின்னச் சின்ன ஓவியங்களாய்
சீவிக்கிறாய் என்னுள்

இனியெனக்கு
அச்சமில்லை, ஆடம்பரமில்லை
இளம் சூட்டில் வேகும்
இது கிராமத்துக் காற்று

நம் ஞாபகம் நமக்குள்
மீண்டும் வரும் போது
ஒருநாள்
தேநீர் கோப்பையை
ஏந்தி வருவாய்
என் முன்னே!


உவைஸ்கனி.




## பேனா நண்பர்கள்



பெயர்:
ஏ.எல்.எம், றஸ்மி
வயது: 18
முகவரி:
23, சரீப் ஹாஜியார் வீதி,
அட்டாளைச்சேனை-02.
பொழுது போக்கு:
பத்திரிகை, கவிதை.



பெயர்:
என்.எம். முகமட் வாரிஸ்
வயது: 20
முகவரி:
ஆயிலியடி, எஸ்.பி.ஓ.,
கிண்ணியா.
பொழுது போக்கு:
விளையாட்டு, ரீ.வி.



பெயர்: ஒந்தாச்சிமடம்
யா. ரொஷான்
வயது: 22
முகவரி: இல.7,
அபயசுந்தர வீதி,
குளுவெல்ல, காலி.
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி.

## கவனி முன்னேறு நில்

**வி**யாபாரத்தில் லாபத்தை விட சேவைக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும். ஆனால் அதே சமயத்தில் சேவை சேவை என்று எண்ணி லாபத்தை மறந்து விடக்கூடாது.

லாபம் கிடைக்காவிட்டால் சேவை செய்ய இயலாது!

'சேவை மனத்துடன் திறமையாக வியாபாரம் நடத்தினால் லாபம் தானாகவே வந்து சேரும். சேவை எண்ணத்துடன் லாபம் சம்பாதிப்பது சிறப்பானது.

நமக்கு இணையாக போட்டியாக வியாபாரம் செய்பவர்களை அலட்சியம் செய்யாமல் இருக்க வேண்டும்.

வாடிக்கையாளர்களை விருந்தினர்களைப் போன்று வரவேற்று உபசரித்து கௌரவப்படுத்தி மகிழ்சி அடையச் செய்தால் விரைவில் போட்டியை சமாளித்து விட முடியும்.

அவர்களுக்கு வேண்டிய பொருளைச் சரியான விலைக்கு விற்று அன்பான முறையில் பேசினால் வாங்குபவர்கள் ஏராளமானவர்களாகிவிடுவார்கள்.

நம்முடைய வியாபாரம் முன்னேறி வருவதைக் கண்டு சிலர் பொறாமைப் படலாம்; சிலர் இடையூறுகள் செய்ய முற்படலாம்.

ஆனால் நாம் இதற்காக கதிகலங்கிப் போய்விடக்கூடாது. திகைத்துப் போய் நிற்கவோ மலைத்துப் போய் நின்று விடவோ, சளைத்துப் போய்விடவோ கூடாது.

## சேவை தருவது இலாபம்!

வியாபாரத்திலே போடப்படும் பணம் வேலை செய்வதற்கு ஒரு கருவி தான். லாபமானது அந்த வேலையின் பயனாகக் கிடைக்கக் கூடியதுதான்.

வியாபாரத்தில் கிடைக்கும் லாபம் மூன்று வழியில் பயன்படும் படியாக அமைவது சிறப்பானது.

வியாபாரத்திற்கு ஒரு பகுதியும், ஊழியர்களுக்கு ஒரு பகுதியும், விற்பனையை ஊக்குவிக்கும் மக்களுக்கு ஒரு பகுதியும் சேர வேண்டும்.

வியாபாரத்தில் கிடைக்கும் லாபத்தில் வாங்குபவர்களுக்கும் பங்கு உள்ளது என்பதை உணர்த்த வேண்டும்.

பயத்துடன் வியாபாரத்தைச் செய்யக் கூடாது. சென்ற காலத்தைப் பற்றி எண்ணி வேதனைப்படக்கூடாது.

நஷ்டம் ஏற்பட்டுவிடுமோ என்று பயந்து, பயந்து ஒரு செயலை செய்யக் கூடாது. தோல்வியைக் கண்டு துவண்டு விடாமல் இருக்க வேண்டும்.

இதனைக் கண்டு அஞ்சாமல் நல்ல பாடத்தைக் கற்றுக் கொண்டு தெளிவாகச் சிந்தித்து, விடா முயற்சியுடனும் தைரியத்துடனும் செயலாற்ற வேண்டும்.



அப்பொழுதுதான் நாம் அசையாமல் கம்பீரமாகவும் துணிச்சலுடனும் செயலாற்ற வேண்டும்.

உண்மையுடனும் அன்புடனும் நேர்மை யுடனும் வியாபாரம் செய்ய வேண்டியது நம்முடைய கடமை.

அந்தக் கடமை நமக்குத் தருவது லாபம் மட்டுமல்ல! புகழும் பெருமையும்!

வியாபாரம் வெற்றியின் ஆதாரமாக என்றும் நிலைத்து நிற்க பணிவு, துணிவு கனிவு இருக்க வேண்டும்.

**கவிதை நெஞ்சங்களுக்கு!**
இவ்வாரச் சிறப்புக்கவிதைப் பகுதியில் கவிஞர் வைரமுத்துவின் "தமிழுக்கு நிறமுண்டு" என்ற தொகுப்பிலிருந்து மீண்டும் சந்தித்தோம் என்ற கவிதையும், பசுவைய்யாவின் "உன் கவிதையை நீ எழுது" என்ற கவிதையும் இடம்பெறுகின்றன.

## சிறப்புக் கவிதை

## மீண்டும் சந்தித்தோம்

உன்னோடு நானிருந்த
ஒவ்வோர் மணித்துளியும்
மரணப் படுக்கையிலும்
மறக்காது கண்மணியே

இன்று நினைத்தாலும்
இதயம் தவிக்கிறதே
அந்த நினைவுகளின்
அலைவந்து அடிக்கிறதே

தொண்ணூறு நிமிடங்கள்
தொட்டணைத்த காலந்தான்
எண்ணூறு ஆண்டுகளாய்
இதயத்தில் கலக்குதடி

பார்வையிலே சில நிமிடம்
பயத்தோடு சில நிமிடம்
கட்டி அணைத்தபடி
கண்ணீரில் சில நிமிடம்

எத்தனையோ ஆண்டுகளின்
இடைவெளியை இடை
வெளியை
இறுக்கிக் குறைக்கின்ற
எத்தனத்தில் சில நிமிடம்

இந்த விழி தானே
என்னுயிரைத் தின்ற விழி
இந்த முகம் தானே
என் கனவில் தோன்றும்
முகம்

இந்தக் கரம் தானே
எட்டாமல் போன கரம்
இந்த விரல் தானே
இல்லையென்று போன விரல்

இந்தக் குழல் தானே
இதயத்தை இழுத்த குழல்
இந்த எழில் தானே
எனைஎழுத வைத்த எழில்

ஒவ்வொன்றாய் தொட்டு
உயிர்வீங்க முத்தமிட்டுச்
செவ்வாயின் ஓரம் வரச்
சிதறியதே என் ஆவி

கால் நூற்றாண்டு
காணாமல் போயிருந்து
பாலூற்ற வந்திருக்கும்
பௌர்ணமியே பௌர்ணமியே

கற்றைக் குழல் கடந்து
காதோரம் இறங்கி வரும்
ஒற்றை நரையோடு
ஊஞ்சலாடத் தோன்றியதே

பேசாமல் போன
பெருங்காதல் அத்தனையும்
கூசாத வார்த்தைகளால்
கொட்டிவிடத் தோன்றியதே

நில்லென்று சொல்லும்
நீலமணிக் கண்ணுக்குள்
சில்லென்று குதித்துச்
செத்துவிடத் தோன்றியதே

கண்கள் துடித்ததிலே
காதல் தெரிந்ததடி
கைகள் நடுங்கியதில்
காமம் புரிந்ததடி

காதலைத் தண்டிக்க
காலம் பிரித்ததடி
காலத்தைத் தண்டிப்போம்
கண்ணே வளைந்துகொடு

எது நியாயம் எது பாவம்
இருவர்க்கும் தோன்றவில்லை
அது இரவா அது பகலா
அது பற்றி அறியவில்லை

யார் தொடங்க யார் முடிக்க
ஒரு வழியும் தோன்றவில்லை
இருவருமே
தொடங்கிவிட்டோம்
இதுவரை கேள்வியில்லை

அச்சம் களைந்தேன்
ஆசையினை நீ அணிந்தாய்
ஆடை களைந்தேன்
நாணத்தை நீயணிந்தாய்

இருபத்தைந்தாண்டுகளாய்
இறந்து போன வசந்தங்கள்
பொசுக்கென்று கட்டில் மேல்
பூத்தெழுந்து விட்டதடி

கண்ட திருக்கோலம்
கனவாக மறைந்தாலும்
கடைசியிலே அழுத கண்ணீர்
கையில் இன்னும் ஒட்டுதடி.

–வைரமுத்து–

## உன் கவிதையை நீ எழுது!

உன் கவிதையை நீ எழுது
எழுது உன் காதல்கள் பற்றி,
கோபங்கள் பற்றி
எழுது உன் ரகசிய ஆசைகள்
பற்றி
நீ அர்ப்பணித்துக்கொள்ள
விரும்பும் புரட்சி பற்றி எழுது
உன்னை ஏமாற்றும் போலிப்
புரட்சியாளர்கள் பற்றி எழுது
சொல்லும் செயலும் முயங்கி
நிற்கும் அழகு பற்றி எழுது
நீ போடும் இரட்டை வேடம்
பற்றி எழுது
எல்லோரிடமும் காட்டவிரும்பும்
அன்பைப் பற்றி எழுது
எவரிடமும் அதைக் காட்ட
முடியாமலிருக்கும்
தத்தளிப்பைப் பற்றி எழுது
அதற்கு உனக்கு வக்கில்லை
என்றால்
ஒன்று செய்
உன் கவிதையை நான் ஏன்
எழுதவில்லை என்று
என்னைக் கேட்காமலேனும்
இரு.

–பசுவய்யா–

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## கண்ணிமைகள் அழகா க...!

இமைகள் அழகாக இருந்தால் தான் கண்களின் அழகு வெளிப்படும். இமைகளை அழகாக வைத்துக்கொள்ள யாரும் பெரியளவில் அக்கறை எடுத்துக் கொள்வதாகத் தெரியவில்லை.அதற்குச் சில ஆலோசனைகள்...

★ கண்ணிமைகள் மெலிதாக இருந்தால் தினமும் அவற்றின்மீது



கிளிசரின் மற்றும் விளக்கெண்ணெயை சம அளவில் கலந்து தடவி வரவும். இதன் மூலம் நாளடைவில் இமைகள் நீளமாக, அடர்த்தியாக வளர ஆரம்பிக்கும். இதைத் தடவும் போது கைகளால் தடவாமல் பிரஷ்ஷால் தடவினால் கண்களிலிருந்து நீர் வடியாமலும், இமைகள் உதிராமலும் இருக்கும்.

★ தலையில் பொடுகுப் பிரச்சனை உள்ளவர்கள் உடனடியாக அதற்கான சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் பொடுகு அதிகமாகி, கண்ணிமைகள் பாதிக்கப்படலாம். அதனால், இமைகள் உதிரவும் கூடும்.

★ கண்ணிமைகளின் மேல் மஸ்காரா தடவிக் கொள்வதன் மூலம் இமைகளை நீளமாகவும், அழகாகவும் இருக்கும்படி காட்ட முடியும். ஆனால், கறுப்பு நிறத்தைத் தவிர வேறு வர்ணங்களில் மஸ்காரா தடவுவது கொஞ்சம் செயற்கையாகத் தெரியும் என்பதால் அதைத் தவிர்ப்பது நல்லது.

★ மஸ்காராவை அழிக்கக் கண்ணிமைகளை இழுத்துச் சுரண்டியெல்லாம் எடுக்கக்கூடாது. அப்படிச் செய்தால் இமைகள் சீக்கிரமே பலவீனமாகிவிடும். மஸ்காராவை அழிக்க வேண்டுமெனில் கண்ணிமைகளுக்கடியில் ஒரு மெல்லிய டிஷு பேப்பரை வைத்துக்கொண்டு, சிறிதளவு பஞ்சில் பேபி ஆயிலை நனைத்து லேசாகத் துடைத்து எடுக்க வேண்டும்.

★ கண்களுக்கு லென்ஸ் அணியும் பழக்கமுள்ளவர்களாக இருந்தால், முதலில் இமைகளின் மீது மஸ்காரா தடவிவிட்டுப் பிறகு லென்ஸ் அணியலாம்.

★ ஜெலட்டீன் அடங்கிய உணவு வகைகள், சூப்புகள் போன்றவை இமை வளர்ச்சிக்கு இமை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றன. எனவே, இவற்றை உணவில் அதிகம் சேர்த்துக்கொள்ளலாம்.

★ தூங்கச் செல்வதற்கு முன்பாக மஸ்காராவை அழித்துவிட வேண்டும். இல்லையெனில் நிறமிழந்து, வெடித்து, அழகற்றுப் போய்விடும்.


## செல்வாஸின் சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place (Near H.N.B)
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.
★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்** N

பெயர்:........................
முகவரி:........................
........................
தொழில்:........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 20-04-2002
அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

### இந்த வாரம் யாருக்கு சல்வார்?
### முன்னேஸ்வரம் வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்

எஸ். நந்தினி,
சிலாபம் வீதி, முன்னேஸ்வரம்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


சீதாராமன் கூடத்திலேயே இருந்த அந்தப் பையை எடுத்துக் கொடுத்தான்.

பையினுள் இருந்த துணிமணிகளை நீக்கிப் பார்த்து விட்டு, அவ்வளவு தானே... வேற ஏதும் கொண்டுவரவில்லையே?" சி.பி.ஐ அதிகாரி கேட்டார்.

அனிதா "இல்லை" என்றாள்.

"இருந்தா சொல்லிடுங்க... உங்க கணவரையோ மற்ற பேரையோ இனி காப்பாத்தவே முடியாது. சரியான படி மாட்டிக்கிட்டு இருக்கார். அனிதா... உங்களுக்கு அவருடைய பிஸினஸ் நடவடிக்கைகள் பத்தி எவ்வளவு தெரியும்?"

"சொன்னேனே... எங்களுக்குக் கல்யாணம் ஆகி மூணு வாரம் கூட ஆகலை. அதனால அவர் பிஸினஸ் பற்றி எதும் தெரிஞ்சுக்க எனக்கு அவகாசம் கெடைக்கலை..."

"மன்னிச்சுக்கங்க... இந்த வீட்டை நாங்க சோதனை போட வேண்டியிருக்கு. நீங்க ஒத்துழைச்சு எல்லா அலமாரிங்களையும் திறந்து காட்டினா தொந்தரவில்லாம இருக்கும்."

"தாராளமா... இங்க ஏதும்

மகாதேவன், "பேப்பர்ல தான் புட்டுப் புட்டு வெச்சிருக்கானே! இந்த வைரவன் கம்பனிகள் அத்தனையும் மோசடியாம். எல்லாம் பப்ளிக்டெபாசிட், அந்த கொலாபரேஷன், இந்த கொலாபரேஷன்னு தாம்தூம்னு ம்யூச்சுவல் ஃபண்டுலயும், சர்க்கார் பாங்க்குகள்லயும் ரிசர்வ் வங்கி விதிகள் எதுவும் பார்க்காம பணம் வாங்கிண்டு கடைசியில பட்டை நாமம் போட்டுட்டாராம் வைரவனோட அப்பா! இப்ப அத்தனை சொத்துக்களையும் "அட்டாச்" பண்ணாலும் ஏறக்குறைய ஆயிரம் கோடி ரூபாய் துண்டு விழறது! மோசடிப்பணம் எங்க போச்சுன்னு தெரியலை. இந்த ஊழல்ல யாரோ மந்திரிக்குக் கூட பங்கு உண்டுங்கறா... ஒண்ணும் நன்னால்லை!"

"சீதா... நம்மை வந்து அரஸ்ட் பண்ண மாட்டாளே?" அனிதா.

"அப்ப அந்தப் பணம் எல்லாம்..?" ராஜாராம்.

"பொறத்தியார் பணம் எல்லாம் ஸ்வாஹா!" என்றார் மகாதேவன்.

○○○

வைரவனைப் பற்றி எல்லாப் பத்திரிகைகளிலும் பத்திபத்தியாக நெட்டை

கூட இந்த ஊழல்ல பங்கு உண்டு. என்ன பண்றாங்கன்னா வைரவன் இன்டஸ்ட்ரிலருந்து விக்டரி பைனான்ஸுக்கு கடன் தர்றது...! அந்த விக்டரி பைனான்ஸ், ப்ரோக்கர் வழியா வைரவன் இண்டஸ்ரீஸ் ஷேரையே வாங்கறது! இதனால ஷேர் மார்க்கெட்ல பங்கு விலை எக்கச்சக்கத்துக்குத் தாறுமாறா ஏற இறங்க வெச்சு, அதோட ஃபார்வர்டு டிரேடிங் செஞ்சு திமர் லாபம் பண்ணி, அதிரடி பண்ணிருக்கார் வைரவன். என்ன தான் சொல்லு உம் புருஷன் ஜீனியஸ் அனி! டகல்பாஜி பண்ணாலும் ஜீனியஸ் தான்... பெரிய "ரோக்!"

டி.வி. செய்தியில் வைரவன் காட்டப்பட்டான்.

ஒரு கஸ்டடியிலிருந்து இன்னொரு கஸ்டடிக்கு மாற்றப்படும் போது, முகத்தில் மூன்று நாள் தாடியுடன் கொண்டு வரப்பட்டு, ஆயிரம் காமிரா பளிச்சுகளுக்கு இடையில்....

"மிஸ்டர் வைரவன்... பணத்தை எல்லாம் எங்க வெச்சிருக்கீங்க?"

"மிஸ்டர் வைரவன்... உங்க ஸ்விஸ் பாங்க் அக்கவுண்ட் நம்பர் என்ன?"




இல்லை... எதுக்கும் நீங்க பார்த்துக்குங்க..." என்றான் சீதாராமன்.

"நீங்க யாரு?"

"அனிதாவுடைய மாமா. என் பேரு சீதாராமன்..."

இரண்டு, மூன்று பேர் அந்த வீட்டின் அலமாரிகள் அனைத்தையும் பொறுமையாகத் துருவித் தேடினார்கள். பக்கத்து, எதிர் ஃப்ளாட்டில் இருப்பவர்கள் ஜன்னல் வழியே வேடிக்கை பார்ப்பது தெரிந்தது.

மகாதேவன் தலையைப் பிடித்துக் கொண்டு ஈஸிச்சேரில் உட்கார்ந்தபடி அங்கலாய்த்தார். "இதுக்குத் தான் அடிச்சுண்டேன்... சரியா விசாரிக்காம பொண்ணைக் குடுக்கக் கூடாதுன்னு.."

"எப்ப சொன்னீங்க?" என்றாள் கமலம்.

"நான் சொன்னதெல்லாம் உனக்கு ஞாபகம் இருக்கா?"

"கொஞ்ச நேரம் சும்மா இருக்கேளா?" என்றான் சீதாராமன். "அவா தேடறதுக்கு இடைஞ்சலா இருக்க வேண்டாம். அவாளுக்கு நாம் ஒத்துழைப்புத் தரணும்.."

"அது வாஸ்தவம் தான்" என்று ராஜாராமும் ஜிம்புவும் ஆமோதித்தார்கள்.

"மூன்றுமணி நேரம் தேடிய பின் "இங்க ஒண்ணுமில்ல... தொந்தரவு கொடுத்ததுக்கு மன்னிக்கணும் மிஸஸ் வைரவன்... நாங்க வரோம்..." என்று கிளம்பினார்கள்.

"அவரை எப்ப விடுதலை பண்ணுவா?" என்றாள் அனிதா.

"வைரவனையா? ஸாரிம்மா... உங்க புருஷனை நீங்க கொஞ்ச நாளைக்குப் பார்க்க முடியாது."

அவர்கள் போனதும் சீதாராமன், "நல்ல வேளை சமயோஜிதமாக அந்த டாக்குமெண்ட்ஸ் அத்தனையையும் என் ரூமுக்கு எடுத்துண்டு போய்ட்டேன் அனிதா."

"தாங்க்ஸ் சீதா.. அவரைக் கொஞ்ச நாளைக்குப் பார்க்க முடியாதுன்னா, எத்தனை நாள் சீதா?"

"உன் ரூமுக்கும் சி.பி.ஐக்காரங்க வரமாட்டாங்கன்னு என்ன நிச்சயம்?" என்றார் ராஜாராம்.

"என்ன அத்திம்பேர்... நீங்களே காட்டிக்கொடுத்துருவீங்க போல இருக்கே?"

ராஜாராம், "தப்பு பண்ணா தண்டனை வாங்கிக்க வேண்டியது தானே?"

சுகந்தி, "என்ன தப்புன்னு முதல்ல ஒரு எழவும் புரியலையே... நீ வருத்தப்படாம இரு அனி. இவர் பாட்டுக்கு இப்படித் தான் கண்டமேனிக்கு உளறுவார்..." என்றாள்.



யான எழுத்துக்களுடன் செய்தி வந்திருந்தது. வைரவனின் போட்டோவுக்கும் பஞ்சமில்லை. டிவியில் கூட இதைப் பற்றி இரண்டு தாத்தாக்கள் உரையாடினார்கள். அனிதாவுக்கு இதை விவரமாக விளக்கினார்கள்.

"ஸப்ஸிடியில் ஜெனரல் லெட்ஜர்னு ஒண்ணு இருக்கு. அதில எண்ட்ரி போடணும்... கடன் பத்திரம் இல்லாமயே

**நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா**

கிடைச்ச பாங்க் ரசீது கொடுத்ததுக்கு இந்த லெட்ஜர்ல போஸ்ட் பண்ணுவா?"

"சீதா... நான் ஏற்கெனவே ரொம்பக் குழம்பிப் போயிருக்கேன்... இப்ப என்னை மேலும் குழப்பாதே! வைரவன் என்ன ஊழல் பண்ணார்னு மட்டும் சொல்லு..."

"பொதுப் பணம் சுமார் 3,700 கோடி ரூபாயைச் சாப்ட்டிருக்கார்!"

"அந்தப் பணம் எல்லாம் இப்ப எங்க இருக்கு?" என்றாள் அனிதா அப்பாவித்தனமாக.

"உங்க கிட்ட சொல்லலையா... பதினெட்டு இம்போர்ட்டட் கார் எப்படி வந்தது...? இத்தனை ரியல் எஸ்டேட் உருவத்தில் இருந்து கம்பியூட்டர் பெரிஃபெரல் வரைக்கும் கம்பனி ஷேர்கள்... ஜப்பான் கொலாபரேஷன், நிப்பான் பாங்க், அப்புறம் இன்னொரு வெளிநாட்டு பாங்க்... இவங்க எல்லோருக்கும்

"பணம் மொத்தம் எத்தனை கோடி பண்ணினீங்க?" என்று துளைத்தெடுக்க...

வைரவன் எதற்கும் பதில் சொல்லாமல் விரோதம் கலந்த அடிபட்ட பார்வையுடன் இரண்டு விரல்களைக் கயிறு போல் முறுக்கிக்காட்டினான். போலீஸ் வண்டியில் ஏறிய போது ஒரு முறை திரும்பிப் பார்க்க... அனிதாவுக்குத் துக்கம் பொங்கியது.

அனிதா அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டாள். அவள் மனதில் இனம் கண்டுகொள்ள இயலாத வேதனை சூழ்ந்திருந்தது. "என்ன செய்ய வேண்டும்?... அவர்கள் எல்லோரும் எங்கே?" ஆஸ்பத்திரிக்குப் போய் லட்சுமணனைப் பார்க்க வேண்டும் போல இருந்தது. சாந்தோம் வீட்டுக்குப் போன் செய்தாள். யாரோ எடுத்தார்கள்.

"நான் அனிதா பேசறேன். எனக்குக் கார் அனுப்புங்க...!"

"காரா எல்லா காரையும் சி.பி.ஐ. காரங்க சீல் பண்ணிட்டுப் போயிட்டாங்க! கொஞ்ச நாள் நடந்து தான் பாரு!"

"நீங்க யாரு பேசறது?"

"யாராயிருந்தா உனக்கென்ன... போனை வய்யி!"

சீதாவை அழைத்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஆட்டோ பிடித்துச் சென்றாள் அனிதா. லட்சுமணன் இன்னும் இன்டென்ஸிவ் கேர் யூனிட்டில் தான் இருந்தார். உறவுக்காரர்கள் யாரும் இல்லை. கண்ணாடி வழியாகத் தான் பார்க்க முடிந்தது. லட்சுமணனுக்கு ஆக்ஸிஜன் கொடுக்க குழாய் சொருகியிருந்தது. மானிட்டர் இணைப்புக்களிலிருந்து மஞ்சள் திரையில் அவர் இதயத்துடிப்புக்கள் தெரிந்தன.

[அனிதா வருவாள்...]





இனியொரு விதி செய்வோம்-அதை
எந்தநாளும் காப்போம்;
தனியொருவனுக் குணவிலை யெனில்
ஜெகத்தினை அழித்திடு வோம்!
–சுப்பிரமணிய பாரதியார்–

## பாப்பா முரசு சிறுகதை

# அவனுக்குக்கிடைத்தபணம்!



நெடுநாட்களுக்கு முன் ஜெயங் கொண்டான் என்ற ஊரில் நண்பர்கள் இருவர் வாழ்ந்து வந்தனர். சுட்டி, சுறா என்பது அவர்கள் பெயர்.

பெயருக்கேற்ற படியே சுட்டியாக இருப்பான் சுட்டி. எப்போதும் சுறு சுறுப்பாகச் செயல்படுவான். வேலை வேலை என்று ஓடிஓடி உழைப்பான். இதனால், நிறையச் சொத்துக்களை வாங்கிப் போட்டான்.

ஆனால், சுறாவோ படுசோம்பேறி. தகப்பனார் வைத்துவிட்டுப் போன சொத்தில் நன்கு சாப்பிட்டு இன்பமாக வாழ்ந்து கொண்டிருந்தான். அவனுக்கு உழைப்பு என்றால் வேப்பங்காயாகக் கசக்கும். ஆனால், சுட்டி சொத்துக்கு மேல் சொத்து வாங்குவது குறித்து பயங்கர பொறாமை கொண்டான்.

அவனது முன்னேற்றம் இவனது மனதில் பொறாமைத் தீயை வளர்த்தது. அதற்கு மேல் சுறாவின் மனைவி அம்புஜா, கணவனது கெட்ட எண்ணத்திற்கு அவ்வப்போது தூபம் போட்டாள். எப்படியாவது சுட்டியின் சொத்துக்கள் அழிந்து போகாதா என்பது இவர்களது நீண்ட நாள் எண்ணம்.

அதற்கு ஏற்றாற்போலவே அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் வந்தது. அதாவது சுட்டி வெளியூர் போக வேண்டியிருந்ததால் அவனது மாந்தோப்பு, தென்னந்தோப்பு இரண்டையும் பார்த்துக்கொள்ளும்படி சுறாவிடம் சொன்னான்.

அந்த இரண்டு தோப்புக்களும் சுறாவின் வயல்களுக்குப் பக்கத்தில் இருந்ததே இதன் காரணம். சுட்டிக்கு நண்பனின் மனதில் உள்ள பயங்கரமான பொறாமை தெரியாது. எனவே, காய்த்துக் குலுங்கும் தன்னுடைய கொல்லையை அந்நியரிடம் விடுவதை விட பலநாள் நண்பனான சுறாவிடம் விட்டுச் செல்வது நல்லது என்று நினைத்தான்.

இது தான் சமயமென்று சுறாவும், அவன் மனைவியும் அந்தக் கொல்லையில் இருந்த தேங்காய், மாங்காய், எலுமிச்சை என்று என்னவெல்லாம் வைத்திருந்தானோ அத்தனையும் ஒன்றுவிடாமல் பறித்து எல்லாவற்றையும் விற்று செம காசு பார்த்தனர்.

ஒரு வாரத்தில் ஊர் திரும்பினான் சுட்டி. தன் கொல்லையைப் பார்த்தவன் அதிர்ச்சியடைந்தான். நண்பனிடம் சென்று, “என்னப்பா என் மரங்கள் எல்லாம் மொட்டையாக இருக்கிறது... காய்கள் எதுவுமே இல்லையே...” என்றான்.

“அதுக்கு நான் என்ன செய்ய முடியும். நீ போகும் போதும் இப்படித் தான் இருந்தது நண்பா!” என்றான்.

நண்பனது அப்பட்டமான பொய் சுட்டியை ஆச்சரியமடைய வைத்தது. அதிலிருந்து அவன் தான் எடுத்துக் கொண்டான் என்பதைத் தெரிந்து கொண்டான்.

“நண்பா உனக்கு வேண்டுமென்றால் என்னிடம் கேட்டால் தருவேனே... அதற்காக இப்படியா?” என்றான்.

“என்ன நீ, விட்டா என்னையே திருடன் என்று சொல்வ போலிருக்கே... பகலில் தான் உன் தோப்பைக் காவல்காக்க முடியும். இரவிலுமா என்னைக் காவல் பார்க்கச் சொல்கிறாய்? அப்படியே ஒன்றிரண்டு காய்களைத் திருடன் தூக்கிச் சென்றால் நான் என்ன செய்வது?” என்றான் கோபமாக,

அதற்கு மேல் அவனிடம் என்ன கேட்க முடியும். நொந்துபோய் வீட்டிற்குச் சென்றான் சுட்டி.

அந்த வாரத்தில் ஒரு நாள் திருடர்கள் சுறாவின் வீட்டில் புகுந்து திருடினர். நண்பன் சுட்டியின் தோப்பைக் கொள்ளையடித்து விற்ற பணத்துடன் தன்னுடைய பணத்தையும் மூட்டையாகக் கட்டி வைத்திருந்தான் சுறா.

அந்த மூட்டையையும் திருடர்கள் எடுத்துக்கொண்டு சென்றனர்.

அவர்கள் நேராகச் சென்று சுட்டி வீட்டு மாந்தோப்பில் உட்கார்ந்து பங்கு பிரித்துக்கொண்டிருந்தனர்.

“அண்ணாச்சி... சுறா வீட்ல இவ்ளோ பணம் தேறும்னு நெனைக்கல... சும்மா சொல்லக் கூடாது... இன்று நமக்குச் சரியான வேட்டை” என்றபடியே பணம் காசுகளை எண்ண ஆரம்பித்தார்கள்.


தன் மாந்தோப்புத் திருட்டுப் போனதில் இருந்து தானே காவல் காக்க ஆரம்பித்தான் சுட்டி. திருடர்களுக்குப் பயந்து, பேய் வேடமிட்டபடியே உலாவுவான்.

அன்று, இவனது கொல்லையில் திருடர்கள் உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும், பேய் உடையை அணிந்து கொண்டு ஆவி போன்று நடந்து வந்தான்.

அதைக் கண்ட திருடர்கள் “பேய்... பேய்...” என்று கத்தியபடியே பணம், காசு எல்லாத்தையும் போட்டுவிட்டு ஓடினர். அங்கு வந்த சுட்டி அந்தக் காசு, பணத்தை எல்லாம் எடுத்துக் கொண்டான்.


நேர்மையாக உழைத்து சம்பாதித்ததால் அவனுடைய பணம் அவனுக்கே கிடைத்துவிட்டது. பார்த்தீர்களா குட்டீஸ் எதிலும் நேர்மை... நேர்மை தேவை. □

## ஆடைமாற்றும் பாம்பு



புதிதாகப் பிறந்த குட்டிப் பாம்புகள் முதல் 2-3 மாதங்களில் தனது எடையை இரு மடங்காக்கிக்கொள்ளும். இப் பாம்புகள் மாதம் அல்லது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை தோல் உரிப்பது மூலம் பெரிய பாம்பாக வளர்ச்சி பெறுகிறது. தோலுரிப்பதற்கு சுமார் ஒரு வாரத்திற்கு முன்பு அசைவற்றும், கண்களும், உடலும் நீல நிறத்தில் காணப்படும்.

## கண்ணாடி ஓடு



பாங்கொக் என்ற நகரில் ராமா என்றொரு ஆமை உள்ளது. இந்த ஆமையின் ஓடு பைபர் கிளாஸால் அமைக்கப்பட்டுள்ளது. லொறி ஒன்றில் அடிபட்டதால் இந்த ஆமையின் ஓடு உடைந்தது. பின்னர் அறுவைச்சிகிச்சை மூலம் அதன் ஓடு மாற்றப்பட்டது.

## விதவைகள் தீவு



கம்போடியா நாட்டில் நாம் பென்க் நகர் அருகே டோன்லி பாசக் என்ற ஆற்றில் ஒரு குட்டித் தீவு உள்ளது. இந்தத் தீவில் பெண்களும், குழந்தைகளும் மட்டுமே வசிக்கின்றனர். இங்கு வசிக்கும் பெண்களின் எண்ணிக்கை 40. அவர்கள் பெரும்பாலும் கணவனால் கைவிடப் பட்டவர்கள் அல்லது விதவைகள். பகல் நேரத்தில் கூலி வேலை செய்ய அந்தப் பெண்கள் வேலைக்கு அமர்த்துவது ஆண்களை மட்டுமே!

## வேகக் காற்று!

தென்றல்- சுமார் மணிக்கு ஆறு மைல் வேகம்.
சாதாரண காற்று- மணிக்கு பன்னிரெண்டு மைல் வேகம்.
கடுமையான காற்று- மணிக்கு இருபது மைல் வேகம்.
புயல்- மணிக்கு நாற்பது மைல் வேகம்.
சூறாவளி- மணிக்கு அறுபது மைல் வேகம்.

## ஓயில் பாத்!

சாதாரண பாத்னாலே (குளியல்) ஊரைவிட்டு ஓடுபவர்கள், ஆயில் பாத்தின்னா உடனே (எண்ணை குளியல்) நாட்டை விட்டு ஓட தயாராக வேண்டாம். பொறுமையா தொடர்ந்து படிங்க. குளியல்னா குஷி வந்திடும்.

நாம் எண்ணை தேய்த்து குளிப்பதால், நமது உடலில் ஒரு வித மினு மினுப்பு ஏற்படுகிறது. சூட்டை தணித்து புத்துணர்ச்சியும் தருகிறது. நம் உடலில் இயற்கையிலேயே எண்ணை பசை உள்ளது. உடலின் தோலில் எண்ணை சுரப்பிகள் இருக்கின்றன. இவை சுரந்திடும் எண்ணை தோலின் மீது பரவி தோலை நன்கு பாதுகாக்கிறது.

நாம் குளிக்கும்போது, சீயக்காய், பயத்தம்மாவு, சோப்பு போன்றவை தோல் வளவளப்பு பெறவும், தோலின் மீது படிந்துள்ள அழுக்குகளை அகற்றவும் பயன்படுத்துகிறோம். இதை அளவுக்கு அதிகமாக பயன்படுத்தும் போது தோல் வறட்சி அடைந்து வறண்டு விடுகிறது.


நம் முன்னோர் தோலின் வறட்சி போக்க எண்ணை குளியல், வாரம் இரு முறை மேற்கொண்டனர். எண்ணை தேய்த்து குளிக்கும்போது உடம்பு இதமாகிறது. நரம்புக்கு புத்துணர்ச்சி ஏற்படுகிறது. பெண்கள் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் எண்ணை குளியல் மேற்கொள்வது சிறந்தது.

## சார்க் மாநாடு நடைபெற்ற நாடுகள்

07,08.12.1985 - டாக்கா (பங்களாதேஷ்)
16,17.11.1986 - பெங்களூர் (இந்தியா)
02,04.11.1987 - காட்மண்டு (நேபாளம்)
29,31.12.1988 - இஸ்லாமாபாத் (பாகிஸ்தான்)
21,23.11.1990 - மாலே ( மாலைதீவு)
21,12.11.1991 - கொழும்பு ( இலங்கை)
10,11.04.1993 - டாக்கா (பங்களாதேஷ்)
02,03.05.1995 - புதுடில்லி (இந்தியா)
12,13.05.1997 - மாலே ( மாலைதீவு)
29,31.07.1998 - கொழும்பு (இலங்கை)

பி. ஷாலினி,
தரம்: 11 லில்லி,
பது/பசறை தமிழ் மகா வித்தியாலயம் (தேசியபாடசாலை)
பசறை.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **20.04.2002.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **441**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 439

பரிசுக்குரியவர்:
பொன்னம்பலம் கமல்ராஜ்,
அக்/விநாயகர் வித்தியாலயம், கோளாவில்-01, அக்கரைப்பறு.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| லோ. பிரணவன்,<br>நானாட்டான் மகா வித்தியாலயம்,மன்னார். | திவ்யா மோகன்ராஜ்,<br>தபாற்கந்தோர் வீதி, மன்னார். |
| றொஜர்.<br>கிங்ஸ்ரன் சர்வதேச கல்லூரி, முகத்துவாரம், கொழும்பு-15. | வி. ராகுலன்,<br>பரமநைனார் கோயில் வீதி, ஆரையம்பதி-01. |
| எஸ்.கே. ருஸ்னி குறைஷ்,<br>சன்ஜீதா வத்த, நுரைச்சோலை, புத்தளம். | ச. நிதிபன்,<br>சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். |
| ரி. சங்கவி,<br>அட்வென்ரிஸ்ற் சர்வதேச கல்லூரி, நீர்கொழும்பு. | எ.ஃப். றியாஸா பஸ்மீர்,<br>மஹ்மூத் மகளிர் கல்லூரி, கல்முனை. |
| எல். பாரத்,<br>தமிழ் மகா வித்.,பலாங்கொடை. | செல்வி பஸ்லினா,<br>அல்-அஸ்ஹர் மத்திய கல்லூரி, திஹாரிய. |

## பணமும் பாசமும்....

அந்த முதியவரின் உடல்நிலை ரொம்பவே மோசமாகிவிட்டது. அவரது நான்கு மகன்களும் வெவ்வேறு ஊர்களில் வசதியாக இருந்தார்கள். கடைசிக்காலத்தில் அவர்களைப் பார்க்க வேண்டும் என்று முதியவர் ஆசைப்பட்டார். பக்கத்து வீட்டுக்காரர் ஆறுமுகத்தின் குடும்பம் தான் அவரைக் கவனித்துக் கொள்கிறது. முதியவரின் மகன்களுக்கு ஆறுமுகம் கடிதம் எழுதினார்.



எந்தப் பதிலும் வரவில்லை. தொலைபேசியில் தகவல் சொன்னார். "வருகிறோம்" என்றார்கள். ஆனால் வரவில்லை. மொத்தத்தில் ஒரு மாதம் ஓடிவிட்டது. முதியவரோ மகன்களைப் பற்றிய நினைவுப்பிலேயே கிடந்தார். ஏக்கம் அவர் உடல் நிலையை மேலும் பாதிக்கச் செய்தது. எந்த நேரத்திலும் அவரது உயிர் பிரியலாம்.

நிலைமையை உணர்ந்த ஆறுமுகம் மறுபடியும் கடிதம் எழுதினார். எந்தத் தகவலும் வரவில்லை. ஆறுமுகத்தின் மனைவி கவலையோடு சொன்னாள். "என்னங்க இது? இப்படியா பிள்ளைங்க இருப்பாங்க? பாவம் பெரியவரு. மகன்களைப் பார்க்கணும்னு எவ்வளவு ஆசையா இருக்கிறாரு... பிள்ளைங்க கொஞ்சம் கூட இரக்கம் இல்லாதவங்களா இருக்கிறாங்க..." அதைக் கேட்ட ஆறுமுகம் யோசித்தார். "இரு. இதற்கொரு வழி பண்றேன்" என்று சொல்லிவிட்டுப் போனவர் நான்கு மகன்களுக்கும் தந்தியடித்தார்.

அடுத்த நாளே நான்கு மகன்களும் குடும்பத்தோடு பறந்தடித்துக் கொண்டு வந்தார்கள். முதியவரைத் திடீர் பாசத்தோடு விழுந்து விழுந்து கவனித்தார்கள். விசாரித்தார்கள், தட்டிக்கொடுத்தார்கள்.

ஆறுமுகத்தின் மனைவி ஆச்சரியப்பட்டாள்.

ஆறுமுகம் சிரித்துக்கொண்டே சொன்னார். "முதியவருக்கு லாட்டரிச் சீட்டில் ஒரு கோடி ரூபாய் பரிசு விழுந்திருக்குதுன்னு தந்தியடிச்சேன். பணம் அப்படின்னதும் உடனே எப்படிப் பதறியடிச்சுக் கிட்டு ஓடிவந்திருக்காங்கன்னு பாரு..."

அதைக் கேட்கக் கேட்க ஆறுமுகத்தின் மனைவி கோபமாய் பெருமூச்சுவிட்டாள்.

**எஸ்.ரவி-மாத்தளை**

## நான் அவனல்லன்

நான் சுற்றும் முற்றும் பார்த்து மெல்லிய நூல்வழி கிடைக்குமா? என்று எதிர்காலத்தை ஏக்கத்துடன் நோக்கும் ஒரு பிறவி. என்னுள் சாதாரணமான ஆசாபாசங்கள் எல்லாமே மரத்துப்போனது போன்ற உணர்வு. சபலங்களும், சலனங்களும் தரை தட்டும்போதெல்லாம் விழிமூடி "செஸ்" நகர்வாய் நகர்ந்து கொள்ளும் எண்ணங்கள். எனினும், எல்லாமே கனவாகிப் போய்விடக் கூடாது என்ற வைராக்கியம் என்னுள் ஊடுருவும் போது அவ்வப்போது புதிதாய் பிறந்தது போன்ற உணர்வு.

எதிர்காலத்தை எவரெஸ்ற் அளவிற்குக் காணவேண்டும் என்பதற்காக மரியானாவிலிருந்து முயற்சி யெடுக்கும் எனக்கு என்றுமே அந்த உணர்வு-காதல் வரவிரும்பியதில்லை. எனக்குள் ஓர் இரும்புத்திரை.

அன்றுவரை எனக்கு என் மீது நம்பிக்கை இருந்தது. ஆனால், அன்று அவளைக் கண்டேன். சாதாரணமாக வெகு சாதாரணமாகப் பார்த்துக்கொண்டேன். வழமையான கிண்டல்கள், கேலிகளுக்குள் சிக்கிக்கொண்டோம் நானும் அவளும். நாம் நேரடியாக "அந்த உணர்வுடன்" கதைத்துக்கொண்டதாக என்றுமேயில்லை. எனினும் பல வாய்கள் நாக்குகளைப் புரட்டிக்கொண்டன. நான் தளர்ந்து போனேன். அவள் சாதாரணமாக விலகினாள்.

இன்றுவரை அவளின் பெயரே அறிந்திராத எனக்கு அன்றைய அவளின் செய்கை ப்ளஸ். நான் தனிமையில் இருக்கும் போதெல்லாம் அவளின் முகத்தை என் மனத் திரைக்குக் கொண்டுவர முயன்று தோற்றேன். அடி மனதில் பதிந்தது உடனே ஞாபகத்திற்கு வராது. அதிர்ந்து போனேன். நானும் தடம்மாறி விட்டேனோ?

பார் என்று மனது தூண்டும். வேண்டாம் என்று புத்தி தடுக்கும். எனக்குள்ளே ஒரு போராட்டம். இதயத்தின் துடிப்புக் கூட எனக்குள் இடியாக மாறும். வேண்டாம் என்றாலும் கவனம் வேறெங்கும் சிதறாது. எனக்குள் இன்னொரு உறவு சிறிது சிறிதாக ஊறத்தொடங்கியதை உணரத் தொடங்கினேன். ஏனோ அவளை நினைக்கும்



போதெல்லாம் மனது இனித்தது.

பின்னால் சுற்று, அலைந்து திரி இதெல்லாமே ஆண் வர்க்கத்திற்கான சாபக்கேடு. உனக்கென்றது உனக்கே தான். ஆனாலும், அலைகிறார்கள். என்னால் முடியவில்லை. ஒருவனைத் தொடர்ச்சியாக அலைய வைத்தால் அவள் "தியறிவைஸ்" விபச்சாரி. என்னால் முடியவில்லை. அவளும் ஏற்படுத்தவில்லை. மீண்டும் ஒரு ப்ளஸ்.

விரும்புவதாகக் காட்டிக்கொள்- சமிக்ஞை தருவாள்- படிப்படியாக முன்னேறு- கேட்டுக்கொள். இது தான் நியதி. எல்லாமே அவ்வாறு தான் நடந்தது. கதைக்க வேண்டும் என்று மனது தீர்மானித்துக்கொண்டது. அந்நாளுக்காக மனமும் அல்லாடியது. தினமும் எனக்குள்... எல்லாமே நனவு போல...

வழமைபோல் இல்லாமல் என் மனதின் அசைவுகளை மீறி ஏதோவொன்று படர்ந்தது. மீண்டும் ஏக்கத்துடன் எதிர்காலத்தை நோக்கி- எவரெஸ்ற்- மரியானா. இடையில் வந்தது பின்தள்ளப்பட்டது போன்ற உணர்வு. எனினும் கதைத்துக் கொண்டேன். மிகவும் தாராளமாக - ஏனெனில் அவள் ஏமாந்து கெட்ட பெயர் எடுக்க வேண்டாம் என்பதற்காக. எனினும், இறுதியில் என்னைப் புரிந்துகொண்டாள். என் மனம் மீண்டும் இரும்புத்திரைகளால் மூடிக்கொண்டது. மீண்டும் புதிதாய் பிறந்தேன். இப்போது நான் அவனல்லன்.

**கருணையூர்-ரூபன்**

## என் தெய்வத்தின் வழியில்

சோம்பல் முறித்துக்கொண்டு படுக்கையில் புரண்டாள் விஜி. அன்று சனிக்கிழமை என்பதால் பாடசாலைக்குச் செல்லவேண்டிய தேவையில்லை. அருகில் உள்ள வானொலிப்பெட்டியைத் திருகினாள். காலைச் செய்தி ஒலிபரப்பாகிக்கொண்டிருந்தது. செய்தி முடிந்ததும் எழும்பலாம் என்ற எண்ணத்துடன் திரும்பிப்படுத்துக் கொண்டாள் விஜி. செய்தி முடிந்து அறிவிப்புத் தொடங்கியது. "மரண அறிவித்தல் ஒன்று. திருமதி அமுதாம்பிகை பாலசந்திரன், ஓய்வு பெற்ற ஆசிரியை காலமானார்."

அறிவிப்புத் தொடர்கின்றது. "ஐயோ என்ர அமுதா ரீச்சர்" என்று கதறி அழுதவாறு துள்ளி எழுந்தாள் விஜி. பெற்றோர் எவ்வளவு ஆறுதல் கூறியும் அவளால் துயரத்தை அடக்க முடியவில்லை. எப்படியாவது அமுதா ரீச்சரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்ள வேண்டுமென எண்ணினாள். அவளது பிடிவாதம் பெற்றோரைச் சம்மதிக்க வைத்தது. வெள்ளவத்தைக்குப் போக ஆயத்தமானாள் விஜி.

ஏதோ எண்ணியவள் போல அவளது பழைய புத்தகப் பெட்டியை எடுத்தாள். எதையோ தேடினாள். அவள் தேடிய அந்தப் பொருள் கையில் சிக்கியது. அது ஒரு ஆட்டோகிராஃப். விரைவாகப் பக்கங்களைப் புரட்டினாள். கண்கள் ஒரு பக்கத்தில் அப்படியே நிலைத்தன. அந்த முத்துப் போன்ற எழுத்துக்களை அவளது முத்துமுத்தான கண்ணீர்த்துளிகள் மறைத்தன. "நினைவுகள் என்றும் அழிவதில்லை, அவை இதயத்தின் எங்கோ ஒரு மூலையில் உறங்கிக்கிடக்கின்றன, ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் தட்டியெழுப்பப்படுகின்றன." அமுதா ரீச்சரின் முத்துமுத்தான கையெழுத்துக்களைப் பார்த்ததும் அவளது நினைவுகளும் தட்டியெழுப்பப்பட்டன.

அப்போது அவள் பன்னிரெண்டு வயதுச் சிறுமி. தமிழ் மொழியைப் பற்றிய அறிவுகூட இல்லாத நிலையில் தரம் ஆறில் காலடி வைத்தாள். அந்தச் சந்தர்ப்பத்தில் தான் அங்கு வந்து சேர்ந்தார்



அமுதா ரீச்சர். விஜியின் நிலைகண்டு வேதனைப்பட்டார். ஆத்திரப்படவில்லை. அன்பாகவும், ஆதரவாகவும் கற்பித்தார். தமிழ் என்பதன் வரைவிலக்கணத்தை அறியச் செய்தார். அமுதா ரீச்சரின் ஆளுமை மாணவர்களை உற்சாகப்படுத்தியது. விஜி மட்டுமல்ல, அந்தப் பாடசாலையே முன்னேறப் பாதையை நோக்கி நடைபோடத் தொடங்கியது. எந்தப் போட்டியிலுமே பங்கு கொள்ளாத பாடசாலை பல போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியீட்டிக்கொண்டது. புளியங்குளம் அ.த.க. பாடசாலை என்ற பெயர்ப்பலகை புளியங்குளம் இந்துக் கல்லூரி என்று மாறுமளவுக்கு அமுதா ரீச்சரின் உழைப்பு மிகுந்து காணப்பட்டது. விஜி உட்பட பல மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கு அத்திவாரமிட்டார் அமுதா ரீச்சர்.

"இன்னும் ஆயத்தமாகலையா?" அம்மாவின் குரல் கேட்டு சுயநினைவுக்கு வந்தாள் விஜி. "ம்.... அமுதா ரீச்சரைச் சந்திச்சு எத்தனை வருஷங்களாச்சு. நான் கம்பஸுக்குப் போன பிறகு அவரைச் சந்திக்கச் சந்தர்ப்பமேயில்லாமல் போயிட்டுது" என்றெண்ணியவள் வெள்ளவத்தையை நோக்கிப் புறப்பட்டாள்.

புகைவண்டியிலும் அவளது எண்ண அலைகள் புரண்டவண்ணமேயிருந்தது. இந்த இடப்பெயர்வு தான் எத்தனை விந்தைகளைச் செய்துவிட்டது.

அமுதா ரீச்சரின் இல்லம் நோக்கி நடந்தாள் விஜி. அந்த உயிரற்ற உடலைப் பார்த்து விம்மினாள். "என்ர நல்வாழ்வுக்கு வித்திட்ட

**ராஜி தெய்வேந்திரன்-புளியங்குளம்**

அமுதா ரீச்சரைக் கடைசி நேரத்தில கூட சந்திக்க முடியாமப் போயிட்டுதே! எனக்கு ஆசிரியர் வேலை கிடைச்ச செய்திகூடத் தெரியாம அவங்க போயிட்டாங்களே..." விஜியின் புலம்பல் அடங்கவில்லை. இறுதிக்கிரியைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஒருவாறு தன்னைச் சுதாகரித்துக் கொண்டவள், அமுதா ரீச்சரின் உயிரற்ற உடலையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள். "எவ்வளவு சுமைகள் சுமந்து கடமை, கண்ணியம், கட்டுப்பாடு தவறாமல் செயலாற்றியவர், இன்று அமைதியாக உறங்குகிறாரே!" என்று எண்ணியவளது கண்கள் சுற்றும் முற்றும் அலைபாய்ந்தன. அங்கே அமுதா ரீச்சரின் மாணவர்கள் டாக்டர்களாகவும், என்ஜினியர்களாகவும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டிருந்தார்கள். துன்பத்திலும் ஓர் இன்பம் அவளுக்கு, "என்ர ரீச்சரைப் போல என்னால் கடமையாற்ற முடியுமா? கடவுளே இந்தக் கணிப்பீடு, மதிப்பீடு, ஒப்படை, செயற்றிட்டம்.... அப்பப்பா எத்தனை சுமைகள்? நிச்சயமாக என்னால் முடியாது. என்ர ரீச்சரைப் போல வேலை செய்ய என்னால முடியாது" எண்ணியவளின் மனம் ஒரு கணம் துணுக்குற்றது. "ஏன் முடியாது? நான் அமுதா ரீச்சரின்ர மாணவி. என்னால முடியும். எத்தனை சுமைகள் வந்தாலும் அத்தனையையும் இலகுவாக்கி என்ரகையில் ஒப்படைக்கும் மாணவர்களை நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் உருவாக்குவேன். இது உறுதி" அமுதா ரீச்சரின் உயிரற்ற உடலின் முன் சபதமிட்டாள்.

அப்போது அமுதா ரீச்சரின் இறுதி ஊர்வலம் ஆரம்பமாகியிருந்தது. வாய்விட்டுக் கதறினாள் விஜி. விஜியின் அழுகைக்காக ஊர்வலம் இடைநிறுத்தப்படுமா என்ன? அது தன் வழியே சென்று கொண்டிருந்தது. விஜியும் அழுகையை ஒருவாறு அடக்கிக்கொண்டு தன் தெய்வமான அமுதா ரீச்சர் காட்டிய வழியிலே செல்லத் தயாரான மனதுடன் ஊர்வலத்தைப் பின்தொடர்ந்தாள். அப்போது அமுதா ரீச்சரின் இறுதி ஊர்வலத்துக்காகத் தூவப்பட்ட மலர்களில் ஒன்று அவளது காலடியில் விழுந்து அவளை ஆசீர்வதித்தது. ■

# கண்ணாமூச்சி ரே... ரே... 20

கட்டிலின் மேல் ரத்தக் களரிக்கு நடுவே செத்துக்கிடந்தான் சேது.

"ஓ! காட்!" என்றான் பரத்.

★★★

பரத் நள்ளிரவில் வீடு திரும்பினான் களைப்பாக.

கதவு திறந்த சுசிலா, "என்னாச்சி?" என்றாள் இளம் நீல நிற நைட்டியில்.

"ஏசி நீங்களும் கூட இருங்களேன்னுட்டார். கடைசிவரைக்கும் இருக்க வேண்டியதாப் போச்சி... நாய் வந்திரிச்சி. பக்கத்து பெட்ரோல் பங்க் வரைக்கும் போயி படுத்துக்கிச்சி.

> "மதுலதா நெருக்கமாப் பழகினவங்க கிட்டே எல்லாம் விசாரிக்கிறோம். உங்களோட ரெண்டு வருஷம் நெருக்கமா பழகியிருக்காங்க."

ஹோட்டல்ல கிட்டத்தட்ட முப்பது பேரை விசாரிச்சோம். வந்து குத்திட்டு வாஷ்பேஷன்ல கழுவி எடுத்துக்கிட்டுப் போயிருக்கான். யாரும் பார்க்கலை. அது ஏசி ரூம். அதனால சத்தமும் கேக் கலை."

"என்ன பரத் இது இப்படி ஆய்டுச்சி? சேதுவைத் தான் நாம ரொம்ப நம்பிக்கிட்டிருந்தோம். அவன் மூலமாத்தான் எல்லா விஷயங்களையும் தெரிஞ்சிக்க இருந்தோம். இப்ப என்ன பண்றது?"

"புரியலை சுசி. இதுக்கெல்லாம் காரணகர்த்தா யாரு?"

"ஒரு வேளை மதுலதாவோட சித்தி, சித்தப்பாவா இருக்குமோ? சொத்துக்கு ஆசைப்பட்டு இப்படியெல்லாம் செஞ்சிருக்கலாமோ..."

"நானும் அப்படி யோசிச்சேன் சுசி. ஆனா லாஜிக் இடிக்குதே. ஒரு ஆக்ஸிடெண்ட் மாதிரி செட்டப் செஞ்சி மதுலதாவைக் கொன்னா போதுமே... ஆள் மாறாட்டம் எதுக்காக?"

"அதானே... ஏன் பரத், சேது கொலையில சின்ன க்ளூ கூடக் கிடைக் கலையா

"ஒரேயொரு க்ளூ கிடைச்சிருக்கு சுசி. அதாவது சாகிறதுக்கு ஒரு மணி நேரத்துக்கு முன்னாடி ரிசப்ஷனைக் கூப்பிட்டு ரூம் காலி செய்யப் போறேன்னு சொல்லி பில் கேட்டிருக்கான். அனுப்பியிருக்காங்க. செட்டில் செஞ்சிருக்கான். ஆயிரத்திச் சொச்ச ரூபா பில்லு. அதுக்கு ரெண்டு ஐநூறு ரூபா நோட்டு புது நோட்டா கொடுத்திருக்கான். நம்பர் நோட் பண்ணியிருக்கேன்."

"பரத், துர்க்கா அம்மா வீட்ல கட்டாக் கிடக்குது. இங்கே ஐநூறு ரூபா நோட்டுன்னு சொல்றீங்க. ஏதோ நெருடலை?"

"நாளைக்கு ரிசர்வ் பேங் ஆஃப் இண்டியா போறோம் சுசி. இப்ப தூங்கறோம் சுசி. உனக்கு ஆட்சேபனை இல்லைன்னா என் ஷூவை கழட்டி விட றியா? ரொம்ப அலுப்பு..." என்று பரத் சோபாவில் படுத்தான்.

சுசிலா ஷூவையும், சாக்ஸையும் கழற்றிவிட்டு நிமிர்ந்த போது பரத் உறங்கிக்கொண்டிருந்தான். சுசிலா போர்வை கொண்டு வந்து போர்த்தி விட்டு, தலையணையை எடுத்து அதிகம் அசைவு ஏற்படுத்தாமல் தலையைத் தூக்கி அடியில் வைத்துவிட்டு, குனிந்து நெற்றியில் மென்மையாக முத்தமிட்டு, குட் நைட் பரத்" என்றாள் மெதுவாக.

உள்ளே அறைக்கு நடக்க...

"தாங்ஸ் சுசி" என்று அவனிடமிருந்து குரல் வந்தது.

●●●

மறுநாள்.

ரிசர்வ் பேங்கில் நோட்டின் எண்களைக் காட்டி உயர் அதிகாரியை விசாரித்த போது...

அடையாறு பிராஞ்ச் பாங்க் ஆஃப் இந்தியாவிற்கு வழங்கப்பட்டன அந்த எண்கள் தாங்கின நோட்டுக்கட்டுகள் என்கிற தகவல் தரப்பட்டது. ஒரு மாதத்திற்கு முன் என்றார்கள்.

அடையாறு பிராஞ்சில் மானேஜர் காஜியரை அழைத்து பக்கத்தில் வைத்துக்கொண்டு பதில் சொன்னார்.

"மினிமம் மூணு கட்டுக்கள் அதாவது பத்து லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா சமீபத்திலே... யாருக்காவது புது ஐநூறு ரூபா நோட்டுக்களா பேமெண்ட் செஞ் சீங்களா?"

காஷியர் துடிப்பாகச் சொன்னார்.

"அவ்வளவு மொத்தமா சமீபத்திலே யாருக்கும் கொடுக்கலை சார். போன மாசம் சங்கரதாஸ்ன்னு ஒரு பார்ட்டி மூணு லட்சம் வித்ட்ரா பண்ணார். ஐநூறு ரூபா புதுசு வந்திருந்தா கொடுங்களேன்னார். ஆறு கட்டு நான்தான் கொடுத்தேன்."

"வாரே வா!" என்றான் பரத்.

"எங்க சார்?"

"அந்த பார்ட்டி அட்ரஸ் வேணுமே..."

வாங்கிக் கொண்டு சல்லென்று அனில்தூத் வீட்டிற்கு வந்தார்கள். அனில்தூத் அலுமினிய கைத்தடி வைத்துக்கொண்டு வீட்டிற்குள் நடைபழகிக் கொண்டிருந்தான்.

"மிஸ்டர் அனில்! சங்கரதாஸ்னு உங்களுக்கு யாரையாவது தெரியுமா?"


"நான் பார்த்ததில்லை. ஆனா, மதுலதா அவனைப் பத்திச் சொல்லியிருக்கா..."

"யார் அவன்?"

"சார், மதுலதாகிட்டே எனக்குப் பிடிச்ச விஷயம் என்ன தெரியுமா? பொய் பேச மாட்டா. என்கிட்ட எதையும் மறைச்சதில்லை. அனில், நான் கற்புக்கரசி இல்லைன்னு ஒப்பனா சொல்லியிருக்கா. சங்கரதாஸ் மல்டி மில்லியனர் பையனாம். அப்பா சிங்கப்பூர்ல இருக்காராம். இவனுக்குச் சதா விஸ்கி, புஷ்டியான பொம்பளை வேணும். ரெண்டு வருஷம் அவன் மதுலதாவோட பழகியிருக்கான். கல்யாணம் பண்ணிக்கலாம்னு நச்சரிச்சானாம். இவளுக்கு அவனோட நிரந்தரமா ஒரு வாழ்க்கையை நினைக்கக்கூடப் பிடிக்கலையாம். பக்கா சாடிஸ்ட்டாம். ஒரு வேலைக்காரன் கூட நிலைக்க மாட்டானாம். என்னோட பழக ஆரம்பிச்சதும் அவனை கட் பண்ணிட்டா. ஏன் சார்? அவன் இந்த விவகாரத்தில சம்பந்தப்பட்டிருக்கானா?"

"இருக்கலாம்னு சந்தேகப்படறேன். அவனை சந்திச்சிப் பேசினப்புறம் முடிவாச் சொல்றேன்."

"நானும் வரவா?"



"வேணாம். சுசி, வா."

சங்கரதாஸின் பங்களா வாசலில் கூர்க்கா விசாரித்தான்.

"பிரைவேட் டிடெக்டிவ் ஏஜன்சிலேர்ந்து பரத்ன்னு சொல்லுப்பா..."

அவன் கூண்டுக்குள் இருந்த இன்டெர்காமில் பேசிவிட்டு கதவு திறந்து விட்டான். இருவரும் வந்து வரவேற்பறையில் காத்திருந்தார்கள். பரத் அறையின் பணத்திமிரை கணக்கிட்டான். வந்து நின்று ஹலோ சொன்ன சங்கரதாஸின் முகத்தில் உண்மையைக் கணக்கிட்டான்.

பரத் அறிமுகப்படுத்திக் கொண்டு, "சார், மதுலதாவோ கொலைக் கேசைத் தனிப்பட்ட முறையிலே நாங்க விசாரிச்சிகிட்டிருக்கோம்."

"வெரி குட், இதிலே நான் என்ன உதவி செய்யணும்?"

"மதுலதா நெருக்கமாப் பழகினவங்க கிட்டே எல்லாம் விசாரிக்கிறோம். உங்களோட ரெண்டு வருஷம் நெருக்கமா பழகியிருக்காங்க."

"அஃப்கோர்ஸ்" என்றான் சங்கரதாஸ்.

"இந்தப் படுகொலையை சந்திரஜித் வெறியர்கள்ங்கிற போர்வையில வேற யாரோ நிகழ்த்தியிருக்கணும்னு நாங்க சந்தேகப்படறோம்."

"அப்படியா? வேற யாரு? எதுக்காக?"

"அதைத் தெரிஞ்சிக்கத்தான் விசாரிச்சிக்கிட்டிருக்கோம். மதுலதாவுக்கு வேற பகையாளி யாரும் உண்டா? உங்களுக்குத் தெரியுமா?"

"கொலை செய்ற அளவுக்கு பகையா?

"தெரியலை சார்..."

(கண்ணாமூச்சி தொடரும்)

பட்டுக்கோட்டை பிரபாகர்

# "நளினியின் வார்த்தைகள் உற்சாகம் தந்தன"

டாக்டர் பிரகாஷ் விவகாரத்தில் கைதான பெண் சிறைவிலிருந்து பிணையில் விடுதலையாகியிருக்கிறார். பிரகாஷிடம் சிக்கிய விதம் குறித்து தமிழக சஞ்சிகை ஒன்றுக்குப் பேட்டியளித்த அவர் ராஜீவ் கொலை வழக்கில் கைதாகிச் சிறையில் இருக்கும் புலிகள் இயக்க நளினியின் ஆறுதல் வார்த்தைகள் தனக்கு உற்சாகமளித்த தாகக் கூறுகிறார்.

அந்தப் பெண் கைதியின் வாக்குமூலம் இது:

எனக்குத் தான் காலில் எலும்பு முறிவு. புத்தூருக்கு என்னைத் தூக்கிக்கொண்டோடினார் என் கணவர். அருகிலேயே இருந்து நான் குணமாகும்வரை பார்த்துக் கொண்டார்.

அப்படியும் எனக்கு முழங்காலில் லேசான வலி இருந்தது. படிக்கட்டில் ஏறும் போது வலிக்கும். என் கணவரின் உறவினர் பெண் அனிதா, கால் வலியால் நான் சிரமப்படுவதைப் பார்த்தார்.

"அடடா... இன்னுமா பெயின் இருக்கு. எனக்குத் தெரிஞ்ச டாக்டர் ஒருத்தர் இருக்கார். "ஆர்த்தோ"வுக்குச் சென்னையிலேயே அவர் தான் ஃபேமஸ்!" என்று அந்த டாக்டரிடம் அழைத்துப் போனார்.

டாக்டர் பிரகாஷை நான் முதலில் சந்தித்தேன்.

என் காலைப் பரிசோதித்தார். நல்ல ட்ரீட்மெண்ட் கொடுத்தார். அதைத் தொடர்ந்து இரண்டொரு முறை ட்ரீட்மெண்டுக்குப் போனேன்.

"ஒரு அற்புதமான தீவு இருக்கு, எனக்குச் சொந்தமானது. அங்கே நாமெல்லாம் போகலாம். நிறையப் பெண்களும் வருகிறார்கள். நீங்களும் வாங்களேன் சித்ரா" என்று ஒரு நாள் அழைத்தார்.

டாக்டர் மீதிருந்த மரியாதையின் காரணமாகவும், கூடவே நிறையப் பெண்களும் வருவதால் நான் ஒப்புக்கொண்டேன். ஏதோ பிக்னிக் போவதுபோல எல்லோரும் உற்சாகமாகக் கிளம்பினோம். ரொம்ப அற்புதமா இருந்தது. அந்த லொகேஷன் சினிமாவில மட்டும் தான் அந்த மாதிரி இயற்கைத் தீவை நான் பார்த்திருக் கேன்.

டினருக்கு ஏற்பாடு செஞ்சிருந்தார் டாக்டர். சிரிச்சுப் பேசிக்கிட்டே சாப்பிட ஆரம்பிச்சோம். எல்லோருக்கும் ஒரு டம்ளர் பெப்ஸி தந்தார் டாக்டர். அதைக் குடிச்ச கொஞ்ச நேரத்துலயே மயக்கம் வர மாதிரி இருந்தது. எவ்வளவு நேரம் மயங்கிக்கிடந்தேன் என்று எனக்குத் தெரியாது.

கண் விழிச்சபோது பதறிட்டேன். ஒரு பிட் துணிகூட இல்லாம கிடந்தேன். உடம்புல சின்னச்சின்னக் கீறல்கள், எரிய ஆரம்பிச்சது. சூறையாடப்பட்டு விட்டேன் என்று உணர்ந்தேன். அடுத்த அறையில் இன்னொரு அலங்கோலம்... டாக்டர் பிரகாஷ் டைரக்டர் மாதிரிச் சொல்லிக் கொடுக்க, ப்ளூ ஃபிலிம் எடுத்துக் கொண்டிருந்தனர். பாய்ந்து போய் டாக்டரின் சட்டையைப் பிடித்தேன்.

"ஏண்டா பாவி! இப்படிப் பண்ணிட்டியே..." கதறினேன். டாக்டர் கிட்ட எந்த ரியாக்ஷனும் இல்லை. அமைதியா இருந்தார்.

அங்கிருந்து தனியாகவும் புறப்பட்டு வரமுடியாது. நாய்கள், செக்கியூரிட்டிகள் என்று பலத்த காவல். வேறு வழியின்றி டாக்டரைத் தொடர்ந்து திட்டாமல் பொறுமை காத்தேன். சில மணி நேரங்கள் கழித்துச் சென்னைக்குக் கொண்டு வந்து விட்டான் டாக்டர்.

என் சந்தோஷம் தொலைந்து போனது. அத்துடன் விடவில்லை டாக்டர் பிரகாஷ். போன் செஞ்சு மிரட்டத் தொடங்கினான். உன் அழகான உடம்பை நான் மட்டும் பார்க்கலே. என் கமிராவும் உன்னை விழுங்கியிருக்கு. ஆஸ்பத்திரிக்கு உடனே வா சித்ரா.



வரலேன்னா கதை கந்தலாயிடும்."

"இப்படியெல்லாம் பேசினா பொலீஸ்ல சொல்லிடுவேன்" என்று மிரட்டுவதற்காக நேரில் சென்றேன்.

"தாராளமா சொல்லு சித்ரா. டிரஸ் இல்லாமல் நீ இருக்கிற போட்டோக்கள் இதோ இருக்கு பார். உன் ஹஸ்பண்ட் மகேந்திரனுக்கு இதுல ரெண்டு அனுப்பட்டுமா?"

மேசையில் பரப்பினார் என் போட்டோக்களை. அழத் தொடங்கினேன். இனி நான் என்ன செய்வது? அதற்கு ஆலோசனை சொன்னான் அந்த டாக்டர். "சித்ரா... இனி உன்னை அந்த மாதிரி விஷயத்துக்கு யூஸ் பண்ண மாட்டேன். இது சத்தியம். ஆனா, எனக்குக் கூட இருந்து சில விஷயங்கள்ல உதவணும் நீ..."

பிரகாஷ் விஷயம் வெளியில் வரவே என்னையும் பொலீஸ் தேட வாரம் பித்தது.

அவமானமும் ஆத்திரமும் எனக்குப் பொத்துக்கொண்டு வந்தது. நானே அவனால் பாதிக்கப்பட்டு நிம்மதியிழந்து தவித்துக் கொண்டிருந்தேன். இந்த நிலையில் பொலீஸ் தேடல் வேறு. நானே போய் சரணடைந்தேன்.

அப்பப்பா! ஜெயிலில் இருப்பவர்கள் என்ன மாதிரியெல்லாம் பேசினார்கள் தெரியுமா? செத்துப் போயிடலாம் போலிருந்தது. ஐம்பது நாள் ஜெயில் தண்டனை... அசிங்கஅசிங்கமா அர்ச்சனை செஞ்சாங்க மத்தப் பெண் கைதிகள். அடிக்கவும் செஞ்சாங்க.

ஒரு பெண் கைதி என்னிடம் பரிவாகப் பேசினார். யார் தெரியுமா? ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதான நளினி தான் அது. "சாப்பிடும்மா... எல்லோருக்கும் கஷ்டம் வரும். சரியாப் போயிடும்!" அவங்களோட ஆறுதல் வார்த்தைகள் தெம்பு தந்தது எனக்கு.

அண்டை மண்டலத்திலிருந்து

# ஒரு குவைத் பெண் உரிமைக்காகப் போராடுகிறார்!

உலகமறியாத குவைத் பெண்தலால் ஆஸ்மி திடீரென உலகப் புகழ் பெற்று விட்டார். தான் விரும்பியவரை மணப்பதற்காக தனது நாட்டைவிட்டே ஓடிவந்து, இந்தியாவில் புகலிடம் கோரும் அந்த 23 வயதுப் பெண்ணை குவைத் அரசும், அவரது உறவினர்களும் விடாமல் துரத்துகின்றனர். ஆனால், அவர் அசரவில்லை.

காதலன் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த காதர் பாட்சாவைத் திருமணம் செய்துகொண்டு அவருடனேயே வாழப் போவதாக சூழுரைத்துவிட்டு மாயமாகிவிட்டார் ஆஸ்மி.

குவைத்துக்காரர்கள் கொதிக்கிறார்கள். தமிழக அரசு தங்களுடன் ஒத்துழைக்கவில்லை என்று குமுறுகிறார்கள்.

தமிழகத்திலோ பெண்ணுக்கு அமோக ஆதரவு. கட்சி வேறுபாடின்றி எல்லோருமே ஆஸ்மிக்கு அடைக்கலம் அளிக்க வேண்டும் என்று



கோரினார்கள். முதலமைச்சர் ஜெயலலிதா ஆஸ்மிக்கும் பாட்சாவுக்கும் எல்லா வசதிகளையும் செய்து கொடுத்து, ஆஸ்மிக்கு இந்தியக் குடியுரிமை வழங்கலாமென்றும் சிபார்சு செய்திருக்கிறார். இருந்தாலும் சஸ்பென்ஸ் தொடர்கிறது.

மார்ச் 21ம் திகதி இந்தியாவில் ஆஸ்மியின் கதை தொடங்கிற்று. ஒரு குவைத் பெண் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டதாக முதல் தகவல். அவரது குற்றம் போலி பாஸ்போர்ட் தயார் செய்ததாகும். தங்கள் வீட்டு வேலைக்காரப் பெண், ஆந்திராவைச் சேர்ந்த சீனம்மாவின் பாஸ்போர்ட்டைத் திருடி, அவரது போட்டோவைக் கிழித்து, அதன் மேல் தனது போட்டோவை ஒட்டி, இந்தியாவிற்கு வந்திருக்கிறார். அராபிய மொழிதான் பேசுகிறார். உடன் அவரது வீட்டு கார் டிரைவர் காதர் பாட்சாவும் வந்திருக்கிறார். ஒரே குழப்பம் என்பது தான் முதல் செய்தி.

நீங்கள் திருப்பி அனுப்பப்படுவீர்கள் என்று விமான நிலைய அதிகாரிகள் கூறியபோது, ஆஸ்மி பதறியிருக்கிறார். திரும்பப் போனால் என்னைக் கல்லால் அடித்தே கொன்றுவிடுவார்கள். நான் எனது காதலன் கரங்களில் மரிப்பேனேயல்லாது குவைத்திற்குத் திரும்ப மாட்டேனென்று ஆஸ்மி கூறியதாகவெல்லாம் செய்திகள் வந்தன.

பல்வேறு மட்டங்களில் ஆலோசனை செய்த பிறகு அவரை அதிகாரிகள் மாஜிஸ்ட்ரேட் முன்கொண்டு சென்றார்கள். அவரும் ஆஸ்மியின் சோகக்கதையைக் கேட்டு மனமுருகி அவரை ஜாமீனில் விடுதலை செய்தார். ஜாமீன் நிபந்தனைகளின்படி ஆஸ்மி தினந்தோறும் விமானநிலைய பொலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று கையெழுத்திட வேண்டும். ஆனால் அவரோ விவரமில்லாது காதர் பாட்சாவுடன் அவரது சொந்தக் கிராமத்திற்குச் சென்று விட்டார்.

இரண்டு நாட்கள் சென்று சென்னைக்குத் திரும்பும் போது தான் அவருக்குத் தெரியவந்தது தனது ஜாமீன் ரத்துச் செய்யப்பட்டுவிட்டதென்று. நிபந்தனைப்படி பொலீஸ் ஸ்டேஷனில் கையெழுத்திடவில்லை என்று ப்ராசிக்யூசன் கூற, உடனடியாக மாஜிஸ்ட்ரேட் ஜாமீனை ரத்துச் செய்துவிட்டார். அவர்களுக்கு உதவி செய்வதாக முன்வந்த வழக்கறிஞர்கள் தான் 40,000 ரூபாய் கொண்டுவாருங்கள், எல்லோரையும் சரிக்கட்டி வெளியே கொண்டு வந்துவிடுகிறேன் என்று கூறியதை நம்பி, பாட்சாவும், ஆஸ்மியும் பாட்சாவின் சொந்த ஊருக்குக் கிளம்பிவிட்டார்கள். திரும்பி வந்தால் சிறைவாசம்.

கருணாநிதியிலிருந்து இளங்கோவன் வழியாக வைகோ வரை எல்லோரும் ஆஸ்மிக்கு ஆதரவாக அறிக்கை விட்டனர். இதனிடையே கர்ப்பமாக இருந்த ஆஸ்மிக்கு உதிரப்போக்கு எனவே அவர் வேலூர் சிறைச்சாலையிலிருந்து மருத்துவமனைக்கு மாற்றப்பட்டதாகச் செய்திகள் வர, பல்வேறு தரப்பினரும் தங்கள் கவலைகளைத் தெரிவித்தனர்.

இந்நிலையில் தான் முதல்வர் ஜெயலலிதா சட்டமன்றத்திலே பேசும் போது, ஆஸ்மிக்கு அனைத்து உதவிகளும் அளிக்கப்படும் என வாக்குறுதி அளித்தார். உடனடியாக நீதிமன்றமும் ஆஸ்மிக்கு ஜாமீன் வழங்கியது.

சென்னைக்குத் திரும்பிய ஆஸ்மியையும், பாட்சாவையும் பத்திரிகையாளர்கள் மொய்த்தனர். அப்போது தான் பல உண்மைகள் தெரியவந்தன.

ஆஸ்மி ஒரு மத்தியதரக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் தந்தை ஒரு ட்ரைவர் அவ்வளவு தான். பல அரசுத்துறைகளில் பணியாற்றியிருக்கிறார். மூன்று மனைவிகள். ஆஸ்மியின் தாய், இரண்டாவது மனைவி. ஆஸ்மி பிறந்த மறுநாளே அம்மா இறந்துவிடுகிறார். பிறகு சித்திதான் அவரை வளர்த்தார். சினிமா சித்தி போலத் தான். ஏகப்பட்ட கொடுமைகள். சித்தியும் அவரது மகன்களும் சேர்ந்து தொடர்ந்து அடிக்கப்பட்டிருக்கிறார். பல்வேறு சித்திரவதைகள். தனது எட்டு வயதில் தனது தந்தையை இழந்து பல்வேறு துயர்களுக்குள்ளாகும் ஆஸ்மியின் வாழ்க்கையில் வசந்தமாக வருபவர் பாட்சா. பள்ளிக்கு ஆஸ்மியை தினந்தோறும் கொண்டு விடும் பாட்சா அவருக்காகப் பரிதாபப்படுகிறார். ரத்தக் கண்ணீரே விடுகிறார். ஆறுதல் கூறுகிறார். அதுவே காதலாக மலர்கிறது. ஆஸ்மிதான் முதலில் தனது விருப்பத்தைத் தெரிவிப்பவர்.

பாட்சா இதெல்லாம் நடவாத காரியம். உனக்கும் எனக்கும் பொருளாதார ரீதியாகப் பெரும்வேறுபாடுகள் இருக்கின்றன. தவிரவும் நான் ஒரு இந்தியன். என்னை நீ திருமணம் செய்ய முடியாது இப்படியெல்லாம் கூறியும் ஆஸ்மி கேட்பதாக இல்லை. ஒரு கட்டத்தில் தனது கையில் நரம்பை வெட்டிக்கொண்டு தற்கொலைசெய்து கொள்ளப் போவதாக மிரட்டியிருக்கிறார். பிறகு தான் இந்தியாவுக்கு ஓடிப்போகத் தீர்மானித்திருக்கின்றனர் இருவரும். ஆஸ்மிக்கோ பாஸ்போர்ட் இல்லை. என்ன செய்யலாம்?

ஒரு நாள் பத்திரிகையில் படிக்கிறார். மற்றவரின் பாஸ்போர்ட்டில் ஒருவர் தன் புகைப்படத்தினை ஒட்டி மாட்டிக்கொள்கிறார். அதுவும் நல்ல வழியாகப்படுகிறது. எப்படியாவது குவைத்திலிருந்து ஓடிவிட வேண்டும் என்பதில் அவ்வளவு வெறியாக இருந்திருக்கிறார். ஏற்படக்கூடிய ஆபத்துக்களை அவர் கணக்கில் எடுத்துக் கொள்ளவேயில்லை. இதில் இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். தனது செயல்களால் மற்றவர்களுக்குப் பிரச்சனை ஏற்படக்கூடும் என்பது பற்றிக் கூட அவருக்குக் கவலையில்லை. வேலைக்காரி சீனம்மாவின் பாஸ்போர்ட்டை இவர் எடுத்து வந்துவிட்டார். அவர் என்ன செய்வார்? நிருபர்கள் கேட்டபோது சொல்கிறார் அலட்சியமாக - என்ன செய்வது நான் எப்படியாவது தப்பிவிடவேண்டுமென்பதில் உறுதியாக இருந்தேன். கிடைத்தது சீனம்மாவின் பாஸ்போர்ட் தான். அவளுக்கென்ன ஆகிவிடப் போகிறது? பாஸ்போர்ட் இல்லாதது எனத் தெரிந்தால் அவளைக் கைது செய்து இந்தியாவக்குத் திருப்பியனுப்பிவிடுவார்கள். சீனம்மாவுக்கு எவ்வளவு தேவையிருந்தால் வெளிநாட்டில் போய் வேலைக்காரியாய் இருப்பார்? அந்தச் சம்பளத்தை இழந்தால் அவரால் தாங்க முடியுமா? அதைப் பற்றியெல்லாம் ஆஸ்மி கவலைப்படவேயில்லை. தன் காதலனுடன் இந்தியாவில் வாழ்ந்துவிட வேண்டும். தன் சித்தி குடும்பத்தினரிடமிருந்து தப்பிவிட வேண்டும் என்பது தான் அவர் நோக்கம். அதற்காக அவர் எதை வேண்டுமானாலும் செய்யத் தயார். அவர் எத்தைகைய ஆபத்துக்களை எதிர்நோக்குகிறார் என்பது பிறகு தான் தெரியவந்தது. இந்திய உள்துறை அமைச்சர் அத்வானியே வைகோவிடம் ஆஸ்மி அவரது விருப்பத்திற்கெதிராகத் திருப்பி அனுப்பப்படமாட்டார் என்று உறுதி மொழி கொடுத்த பின் குவைத் தூதரகம் பிரச்சனை பண்ணத் தொடங்கியது.

ஆஸ்மி மனநிலை சரியில்லாதவர் என்று புதிதாக ஒரு கதை சொல்லியது. எங்கள் நாட்டில் வெளிநாட்டவரை மணம் செய்பவரைக் கல்லால் அடித்துக்கொல்லும் வழக்கம் எல்லாமில்லை. உறவினர்களே ஆஸ்மிக்கு மூளைக்கோளாறென்கிறார்கள். நாங்கள் அகில உலக பொலீஸ் நிறுவனமான இன்ரர்போல் மூலமாக ஆஸ்மியைத் தேடுவோம். புகார் கொடுத்திருக்கிறோம் என்றெல்லாம் பயமுறுத்தினார்கள். ஆனால், புதுடில்லியிலிருந்து அதிகாரிகள் சென்னைக்கு வந்து ஆஸ்மியைத் தேடுவதற்குள் அவரும் பாட்சாவும் சிட்டாகப் பறந்து விட்டனர். தமிழகப் பொலீஸார் தங்களுடன் ஒத்துழைக்கவில்லை எனக் குவைத் அதிகாரிகள் புலம்பத் தொடங்கினர். ஆந்திராவில் கடகப்பா மாவட்டத்தில் பாட்சாவிற்கு சொந்தமான கலைப்பள்ளிக் கிராமத்திற்கு பாட்சாவும், ஆஸ்மியும் சென்று விட்டனர். பாட்சா ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். பெரிய குடும்பமும் கூட. ஏழ்மை தான். ஆனால், எல்லாவற்றையும் சகித்துக் கொள்ள தயாராயிருக்கிறார் ஆஸ்மி. படித்தவர். ஆனால், வேலைக்குப் போகத் தயாரரில்லை. பொதுவாக முகம் உட்பட மூடிய கோஷா அணிந்தபடி தான் அவர் சென்னையில் காணப்பட்டார்.


பெண் விடுதலை பற்றியோ, குவைத்தில் பெண்கள் இரண்டாந்தர பிரஜைகளாக நடத்தப்படுவது பற்றியோ அவர் சிந்திக்கவில்லை. அவருக்குத் தெரிந்ததெல்லாம் மனதிற்குப் பிடித்தமானவருடன் மணம் புரிந்து வாழவேண்டும் அவ்வளவே! ஆனாலும் கூடக் காதல் காரணமாக ஓரளவேனும் பெண்களுக்குத் துணிச்சல் வருமானால் அது வரவேற்கத் தக்கது தானே!

குவைத்தில் மூன்று நான்கு மனைவிகளை வைத்துக்கொள்வதன் பயனாகப் பலரின் வாழ்வு பாழாகிறது என்பது குறித்த விவாதம் எழுமானால் அதுவும் முன்னேற்றத்திற்கான அறிகுறி.

காணகன்

## விடுதலைப் புலிகள்

## முஸ்லிம் காங்கிரஸ் பேச்சுவார்த்தை



வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைமைக்கும் ஸ்ரீலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தலைமைக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

முஸ்லிம்கள் தொடர்பில் புலிகள் கடைப்பிடித்து வரும் அனுகுமுறைகள் குறித்து சமீப நாட்களாக எழுந்த கண்டனங்களையும், அதிருப்திகளையும் சற்றுத் தணிக்கப் புலிகளின் இந்த அறிவிப்பு உதவியிருக்கிறது.

இதற்கமைவாக எதிர்வரும் 13ம் திகதி அமைச்சர் ரவூர் ஹகீம் தலைமையிலான குழுவினர் புலிகளின் அரசியல் பிரிவு முக்கியஸ்தர்களை வன்னியில் சந்திப்பார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

புலிகளின் கிழக்குப் பிராந்திய தளபதி எனக் கருதப்படும் கரிகாலனின் கருத்துக்களை முஸ்லிம் தலைவர்கள் பகிரங்கமாகக் கண்டித்து ஓரிரு நாட்களில் அந்த இயக்கத்தின் தத்துவாசிரியரான அன்ரன் பாலசிங்கம் கூறிய கருத்துக்கள் முஸ்லிம்கள் சார்பில் வரவேற்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமைக்கு அன்ரன் பாலசிங்கம் விடுதலைப் புலிகள் சார்பாக மன்னிப்புக் கோரியிருந்தார். இதற்கு முன்னைய காலங்களிலும், வடக்கிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றியமை குறித்து புலிகள் தமது வருத்தத்தைத் தெரிவித்து வந்திருந்தபோதும் தற்போதைய சூழ்நிலையில் அன்ரன் பாலசிங்கத்தின் கருத்துக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

இதற்கு உடனடியாகவே பதிலளித்த அமைச்சர் ரவூப் ஹகீம், புலிகளுடன் ஆக்கபூர்வமான பேச்சுக்களில் ஈடுபடத் தயாராக இருப்பதாகக் கூறியிருந்தார்.

அரசுக்கும்- புலிகளுக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க குறைபாடாக முஸ்லிம்கள் மீதான புறக்கணிப்பைக் கருத முடியும். இதனை நிவர்த்தி செய்யும் முயற்சிகளே தற்போது நடைபெற்று வருகின்றன.

புலிகளுக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் நடைபெறவிருக்கும் ஆரம்ப கட்டப்பேச்சுக்களின் போது கிழக்கு வாழ் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சனைகள் தொடர்பாக முதலில் ஆராயப்படலாம் எனத் தெரியவருகிறது. அரசியல் தீர்வுகள், முஸ்லிம்கள் பாரம்பரிய உரிமைகள் உள்ளிட்ட விடயங்களை ஆராய வேண்டுமாயின் சமாதான முயற்சி இன்னுமொரு படி மேலே செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது. ஆதலால், ஹகீம் சொல்லும் ஆக்கபூர்வமான பேச்சுக்கள் இப்போதே நடைபெறும் சாத்தியமில்லை.

எவ்வாறெனினும், அடுத்த ஓரிரு மாதங்களில் வடக்கு கிழக்கின் நிர்வாகம் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டால், அதில் முஸ்லிம்களின் பங்கு என்னதாக இருக்கும் என்பதைப் புலிகளுடன் கதைத்துச் சொல்ல வேண்டிய நிலையில் ரவூப் ஹகீம் இருக்கிறார்.

எல்லாவற்றையும் விட கரிகாலனின் கருத்துக்களுக்கும், அன்ரன் பாலசிங்கத்தின் கருத்துக்களுக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை தெளிவாக அறிந்துவர வேண்டிய பொறுப்பு ஹகீமுக்கு இருக்கிறது.

வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் எதிர்காலம் குறித்து புலிகளுடன் முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பிக்கப்போகும் பேச்சுவார்த்தை பல வழிகளில் முக்கித்துவம் வாய்ந்தது. இந்தப் பிரதேசங்களில் வாழும் அனைத்து மக்கள் சமூகங்களினதும் ஐக்கியத்திலும், இயல்புவாழ்விலும் இந்தப் பேச்சுக்கள் வெகுவாகத் தாக்கம் செலுத்தக் கூடியவை.

புலிகள் தமது போராட்ட பலத்தால் இலங்கை அரசாங்கத்துடன் சமபங்கான அதிகாரப்பகிர்வு குறித்த பேச்சுக்களுக்கு தயாராகி வருகிறார்கள். இந்த நிலையை அடையப் புலிகள் இயக்கம் செய்த தியாகங்கள் குறைத்து மதிப்பிட முடியாதவை. தங்களுடன் ஒன்றாக ஆயுதப் போராட்டத்தில் பங்கு கொள்ள்வில்லை என்பதற்காக முஸ்லிம்களுக்கு எதுவும் கொடுக்க முடியாது என்ற புலிகளின் கருத்தும், தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் அதேயளவிலான சுயநிர்ணய உரிமை தங்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற முஸ்லிம்களின் கோரிக்கையும் ஆழமாக ஆராயப்பட வேண்டிய விடயங்கள்.

### ஹகீமின் அமைதி

கிழக்கில் முஸ்லிம்கள் ஆயுத பாணிகளால் பல்வேறு வழிகளில் இம்சைக்குள்ளாக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் கூட ஹகீம் அமைதியையே கடைப்பிடித்து வந்தார். சமாதான முயற்சிகள் தன்னால் தான் குழம்பியது என்ற பழியைச் சுமக்க விரும்பாததால் அமைதி காப்பதாக அவர் இதற்கு காரணமும் சொன்னார். இப்போது ஹகீமுக்கு அவருடைய பிரச்சனை களைக் கூறும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

என்னசெய்யப் போகிறார்...?

# ஸ்போர்ட்ஸ்

## அவுஸ்திரேலியா சாதனை வெற்றி



தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் ஆட்டத்தில் அவுஸ்திரேலியா 7 விக்கெட் இழப்பிற்கு 330 ஓட்டங்கள் குவித்து வெற்றி பெற்றது. இதன் மூலம் ஒரு தின ஆட்டத்தில் இரண்டாவதாக விளையாடும் அணி அதிகபட்சமாக ஸ்கோர் எடுத்து வென்ற அணி என்ற சாதனையை அவுஸ்திரேலியா படைத்தது. இரு அணிகளுக்கிடையேயான 6வது ஆட்டம் போர்ட் எலிசபெத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 50 ஓவர் முடிவில் 3 விக்கெட் இழப்பிற்கு 326 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு ஆடிய அவுஸ்திரேலிய அணி 7 விக்கெட் இழப்பிற்கு 330 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. இரண்டாவதாக ஆடிய அணி 316 ஓட்டங்களை எடுத்து வென்றதே இதுவரை சாதனையாக இருந்தது. 1997ல் டாக்காவில் பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியாவும், 1998ல் லாகூரில் பாகிஸ்தானுக்கு எதிராக அவுஸ்திரேலியாவும் இச்சாதனையைப் புரிந்திருந்தன. 7 போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் அவுஸ்திரேலியா 5ல் வென்றுள்ளது. ஓர் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

## ஷார்ஜா கிண்ணப் போட்டி ஆரம்பம்

ஷார்ஜா கிண்ண முக்கோண ஒருநாள் போட்டித் தொடர் திங்களன்று ஆரம்பமானது.

இலங்கை, பாகிஸ்தான், நியூசிலாந்து அணிகள் பங்கு கொள்ளும் இப்போட்டியின் முதலாவது ஆட்டத்தில் இலங்கையணியும் பாகிஸ்தானும் மோதின.

செவ்வாயன்று இலங்கை நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டி நடைபெற்றது.

ஒவ்வொரு அணியும்மற்ற அணிகளுடன் இரண்டு போட்டிகளிலும் ஆடவேண்டும். முதலிரண்டு இடங்களையும் பெறும் அணிகள் ஏப்ரல் 17ம் திகதி இறுதி ஆட்டத்தில் மோதும்.

# இலக்கிய நயம்

தருவது முழடில்யன்

## கௌரி சிரித்தாள்....

"எங்காவது உட்கார்ந்து கொள்ளலாம்; கால் வலிக்கிறதடி..." என்றாள் கௌரி.

"இன்னும் கொஞ்ச தூரம் தான் நட..." என்ற படியே தோழியின் கையைப் பிடித்து ஏறக்குறைய இழுத்தபடியே விரைவாக நடந்தாள் சீதா.

"விடு கையை... என்னால் இனி முடியாது..." என்று கையை உதறிவிடுவித்துக்கொண்டு போய் ஒரு மரநிழலில் அமர்ந்தாள் கௌரி.

சீதாவும் அருகே சென்றமர்ந்தாள்.

"ஏன் திடீரென்று சோர்வாகிவிட்டாய்; ஏதாவது மரத்தை, நிழலை, குருவியைப் பார்த்ததும் விசாகன் ஞாபகம் வந்துவிட்டதா உனக்கு?"

இவள் கேள்விக்குப் பதில் சொல்லாமல் காலடியில் கிடந்த புற்களைப் பிடுங்கியவாறு இருந்தாள் கௌரி.

"அவருக்கும் உன் போல ஆசை இருக்கத் தானே செய்யும். வந்துவிடுவார் கவலைப்படாதே!"

"அப்படித் தெரியவில்லையே... வருவேன் என்று சொல்லிச் சென்ற நாளும் கடந்து விட்டது. எந்த ஒருசேதியையும் காணோமே..." என்று பேசி வந்தவளின் குரல் விம்மலோடு தடைப்பட்டதை அவதானித்தாள் சீதா. கௌரியின் கரத்தின் மீது தன் கரத்தை வைத்து அழுத்தினாள்.

"ஏய்... என்ன இது?" என்று ஆதுரத்தோடு மெல்லச் சொல்லவும் செய்தாள்.

அவளது அன்பான மொழிகளைத் தாள முடியாமல் உடைந்தாள் கௌரி.

"நீதானே எங்களைச் சந்திக்க வைத்தாய். இருவருக்கும் முடிச்சுப் போட்டாய். எங்கள் அத்தனை சந்திப்புக்களையும் ஏற்படுத்தித் தந்தாய். இப்போது மட்டும் உன்னால் அவரை வரச்சொல்ல முடியவில்லையா..." என்று மேலே சொல்ல முடியாமல் விம்மல் வெளிப்படவே நிறுத்தினாள்.

சீதா, கௌரியைத் தன் மடியில் சாய்த்தாள்.

தலையைக் கோதினாள். எதுவும் பேசாதிருந்தாள்.

"கோவில் திருவிழாவுக்கு நீதானே வற்புறுத்திக் கூட்டிப்போனாய். அங்கு அவரைச் சந்தித்துப் பேசச்செய்தாய். திருவிழாவில் நடந்த ஒவ்வொன்றையும் காட்டி, எங்கள் இருவரதும் இணைவுக்கான நல்ல சகுனங்கள் என்றாய். அதன் பிறகு அவர் என்னை அடிக்கடி சந்தித்தார். ஆனால், இப்படிப் பிரிந்து வாடுவேன் என்று உன் சகுனங்கள் எதுவும் சொல்லவில்லையே..."

"என்ன கௌரி இது. குழந்தைப் பிள்ளை மாதிரி... மனதைப் போட்டு அலட்டாதே, வந்துவிடுவார்..."

"ம்... இப்படித் தான் அவரும் என்னைக் குழந்தைப் பிள்ளை, குழந்தைப் பிள்ளை என்றே கேலி செய்வார்..." என்றவள் நிறுத்திச் சிலகணம் யோசித்து விட்டுத் தொடர்ந்தாள்.

"ஒரு நாள் தினைப்புனத்தில் நான் காவலுக்கு இருக்கும் போது வந்துவிட்டார். சத்தம் போட்டுக் கிளிகளை விரட்டிக்கொண்டிருந்தேன் நான். இப்படிக் கிளிகளோடு வாயால் பேசிக்கொண்டிருந்தால் உங்களையும் தங்கள் இனம் என்றல்லவா நினைத்துத் தாராளமாக இருந்து தானியங்களையெல்லாம் கொறித்துவிட்டுப் போகப் போகின்றன கிளிகள்..." என்று கேலி செய்தார். அடுத்த நாள் வந்து என்னைச் சந்தித்த போது கிளிகளை அடித்து விரட்டுவதற்கான தழல், தட்டைகளையும் எனக்கு அழகான ஆடை ஒன்றையும் பரிசாகத் தந்தார்..." என்றபடியே பழைய



நினைவில் மூழ்கினாள் கௌரி.

"என்ன இவை?"

"கிளிகளோடு கிளியாகப் பேசிக்கொண்டிராமல் அவைகளை விரட்டுவதற்கு இவை உதவும்" அவன் நமுட்டுச் சிரிப்பைப் பொருட்படுத்தாமல்,

"இதுவும் என்ன கிளிகளுக்குத் தானா?" என்று ஆடையைச் சுட்டிக்காட்டிக் கேட்டாள் கௌரி.

"கிளிகளுக்கு இல்லை. கிளிக்கு!"

அவள் வெட்கம் மேலிட மௌனமாக நின்றாள். குளிர்ந்த மெல்லிய மாலைக் காற்று அவளைப் பரவசத்தில் ஆழ்த்தியது.

"இந்த ஆடைகளைக் கொஞ்சம் அழகுபடுத்த மாட்டாயா?" கைகளை மடித்து முதுகை வளைத்து நாடகபாணியில் இறைஞ்சுவது போலக் கேட்டான் விசாகன்.

கௌரி சிரித்தாள்.

"ஆடை அழகாகி விடும். நான் அழகாக இருக்க மாட்டேன். அப்படித் தானே!" என்றாள்.

அவன் தீவிரமாக அவளை ஆராய்பவன் போலச் சிறிது நேரம் பார்த்தபடி நின்றான். பின்னர்,

"இந்த ஆடை உன்னை அழகு படுத்தப் போவதில்லைத் தான்" என்றான்.

அவள் முகத்தில் சிறு துணுக்கம். "அப்போ...?" என்றாள்.

"இது இல்லாவிட்டால் இன்னும் அழகாய் இருப்பாய் என்பதில் சந்தேகமில்லை..." என்றான் அவளை வெகு கவனமாக ஆராய்ந்து முடித்தவன் போல,

அவள் கூசிப் போய் கண்களைத் தாழ்த்தினாள்.

அவளது விம்மிப்புடைத்த தனங்கள், ஒடுங்கியதாக ஆனால், சற்றே சதைப் பிடிப்பாகத் தெரிந்த இடை, வாழைத் தண்டு போன்ற கழுத்து, "முப்பது" என்று சொல்லக்குவிந்தது போன்ற சின்னதான செம்பவள அதரங்கள், மலர்ந்த ஆனால், ஊசி போன்ற கண்கள்... இவற்றில் சிறிதும் கட்டுப்பாடோ, தட்டுத்தடங்கலோ இல்லாமல் விசாகன் தாராளமாக லயித்தான். இயந்திரம் போல இயக்கப்பட்டவனாக அவளை நோக்கி நடந்தான்.

அவள் அவனது நகரும் பாதங்களைப் பார்த்தபடி நின்றிருந்தாள்.

நெருங்கி அவளைத் தொட்டானா? தோளைப்பற்றி இழுத்தானா என்று அவளுக்கு நினைவில்லை. சாய்ந்து மண்ணில் விழ இருந்தவளைத் தாங்கிக்கொண்டது போல அவன் அணைத்துக்கொண்டான்.

அவள் கால்கள் பூமியிலே இருந்தாலும், உடலை அவை தாங்கி நிற்கவில்லை. அவனிடம் சரிந்திருந்தாள்.

தன் மேல் அழுந்திய பூச்சுமையை மெல்லக் கைகளில் ஏந்திக் கொண்டான்.

மென்மையாகக் கன்னத்தில் முத்தமிட்டான்.

கள்வெறி கொண்டான்.

அவள் கைகளால் அவன் கழுத்தைக் கட்டி இழுத்து உதடுகளில் முத்தமிட்டாள்.

மெல்லமெல்ல மாடு கத்தும் ஓசையும், குருவிகளின் கிசுகிசுப்பும், நாய்களின் குரைப்பும், தென்னோலைகள் விழும் சத்தமும், மனிதர்கள் பேச்சும் அவர்களது கனவில் நுழைந்தன.

"கௌரி, என்னடி?" என்று உலுப்பினாள் சீதா.

"ஆடையைப் பரிசாகத் தந்துவிட்டு என்னையே கொள்ளையடித்தாரடி" என்றாள் கௌரி.

"சரி, சரி, கண்டதையும் புலம்பாதே, வா" என்றபடி எழுந்தாள் சீதா.

"என்னவெல்லாம் பேசினார். என் பெண் நலத்தையயெல்லாம் கவர்ந்து கொண்டார். என் அன்னை எனக்குத் தந்த, கவனமாகப் பாதுகாக்கச் சொல்லித் தந்த பெண் நலத்தை அவர் கொள்ளை கொண்டாரடி. என் நலன்கள் அனைத்தையும் எடுத்துச் சென்றவர், இத்தனை நாட்கள் என்னைத் தவிக்க விடுவது முறையா? சொல் தோழி? இந்தத் துன்பத்துக்குக் காரணம் நீதானே!"

**பேர் ஊர் கொண்ட ஆர்கலி விழாவில்**
**செல்வாம் செல்வாம் என்றி! அன்று இவண்**
**நல்லோர் நல்ல பல; ஆல் தில்ல,**
**தழலும், தட்டையும் முறியும் தந்து, இவை**
**ஒத்தன நினக்கு எனப் பொய்த்தன கூறி,**
**அன்னை ஓம்பிய ஆய்நலம்**
**என்னை கொண்டான்; யாம் இன்னம்**
**- ஆல்இனியே!**

(குறுந்தொகை: 223)

## சிந்தியா பதில்கள்

★ **நான் என் வகுப்பில் படிக்கும் பையனை காதலிக்கிறேன். அவர் என்னை காதலிக்கிறாரா என்று எப்படி அறிவது?**

துர்க்காயினி, திருமலை.

*எந்த வகுப்பில் படிக்கிறீர்கள்? ஏனென்றால் 18 வயதுக்குள் காதலைச் சரிவரப் புரிந்துகொள்வது கடினம். பள்ளிப் படிப்பை முடித்த பிறகு அந்தப் பையன் என்ன நினைக்கிறார் என்று அறிந்து கொள்வது கூடுதல் விளக்கமாக இருக்கும்.*

*ஆண் காதலிக்கிறானா இல்லையா என்றறிந்து கொள்வதில் பெரிய சிரமமொன்றுமில்லை. முகம் முழுவதும் அசட்டுத் தனம் பொங்கி வழியும். கொஞ்சம் நாசூக்கானவனாக இருந்தால் அசட்டுத்தனத்தை மறைத்துக் கொள்ள அவன் எடுக்கும் முயற்சிகள் மேலும் பரிதாபகரமானவனாக அவனைக் காட்டிக் கொடுக்கும். அதெல்லாம் வயது வர நீங்களாவே தெரிந்து கொண்டு விடுவீர்கள். இப்போது படிப்பதில் ஒழுங்காக கவனத்தைச் செலுத்துங்கள்.*

✦★

★ **ஒஸாமா பின்லேடன் அமெரிக்காவின் ஜனாதிபதியானால் எப்படி இருக்கும்?**

சி.பேரின்பராசா, கந்தளாய்-02.

*பெரிய வித்தியாசம் ஒன்றுமிருக்காது.*

✦★

★ **தத்துவங்கள் எப்படிப் பிறக்கின்றன?**

க.தர்சன், கொழும்பு.

*மரணம் என்ற முடிவின் முன் மானுட உறவு கொள்ளும் அர்த்தத்தை தேட ஆரம்பிப்பதால்.*

✦★

★ **பெண்கள் வளையல் போடுவது ஆண்களை வளைக்க என்று ஒரு பாடலில் வருகிறது. இதற்கான உங்கள் கருத்து என்ன சிந்தியா?**

எ.ஃப். சல்மா, கண்டி.

*நெடுங்காலமாக ஆணின் மொழியிலேயே பெண்களை அறிந்து வந்த எங்களுக்கு, இப்போது தான் சில கவிஞர்கள் கொஞ்சம் கொஞ்சமாகப் பெண் மொழியை அறிமுகப்படுத்தி வருகிறார்கள். அந்தக் கவிஞர்களின் பெயரை வைத்துக்கொண்டு இதற்கெல்லாமா நீங்கள் அபிப்பிராயம் கேட்டுக்கொண்டிருப்பீர்கள்!*

✦★

★ **ரூபவாஹினியின் இரண்டாவது சனலிலே தமிழ் நிகழ்ச்சிகளும், ஆங்கில நிகழ்ச்சிகளும் தான் ஒளிபரப்பாகும் என்று கூறிவிட்டு, அதிகமாக சிங்கள நிகழ்ச்சிகளையே ஒளிபரப்புகிறார்களே?**

த. கமல், கல்முனை-02.

*மிகவிரைவில் தனியார் தொலைக்காட்சி ஒன்று நாடுமுழுவதும் உள்ளவர்கள் பார்க்கக் கூடியதாகப் பல்வேறு தமிழ் நிகழ்ச்சிகளைத் தரப்போகிறதாம். அதன் பிறகு ரூபவாஹிக்கும் வழக்கம் போல மாற்றங்களின் அவசியம் புரிந்துவிடும். கவலையை விடுங்கள்.*

✦★

★ **கவிஞர் வாலியைப் பற்றி... அவர் வரிகளில் உங்களைக் கவர்ந்தவை ஏதாவது?**

தாராபுரம் நிலாம்.

நம் பழந்தமிழின் சாரத்தை பாமரர்களும் அறியத் திரைப்பாடல்களில் மிக எளிமையாக மாற்றித்தரும் கவிவித்தையில் பேரரசர் கண்ணதாசன் என்றால், அவரையடுத்துச் சிற்றரரசராகவேனும் சிலதை செய்தவர் வாலி மட்டும் தானென்பேன். கி.பி. 13 அல்லது 14ம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கக்கூடிய கபிலரகவலில் ஒரு பாடல்,

**"மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ?**
**காற்றும் சிலரை நீக்கி வீசுமோ?**
**மாநிலம் சுமக்க மாட்டேன் என்னுமோ?**
**கதிரோன் சிலரைக் காயேன் என்னுமோ?**
**வாழ்நான்கு சாதிக்கு உணவு நாட்டிலும்**
**கீழ் நான்கு சாதிக்கு உணவு**
**காட்டிலுமோ?**
**திருவும், வறுமையும் செய்தவப் பேறும்**
**சாவதும் வேறிலைடி தரணி**
**யோர்க்கே..."** இதையே வாலி படகோட்டி படப்பாடலில்,

**"மண்குடிசை வாசலென்றால்**
**தென்றல் வர மறுத்திடுமா?**
**மாலை நிலா ஏழையென்றால்**
**வெளிச்சம் தர மறுத்திடுமா?**
**உனக்காக ஒன்று, எனக்காக ஒன்று**
**ஒருபோதும் தெய்வம் கொடுத்ததில்லை..."** என்பார். அப்படி எழுதிய கவிஞன் இன்று **"எப்படி எப்படி சமைஞ்சது எப்படி?"** என்று கேட்பதைத் தான் தாங்க முடியவில்லை.

✦★

★ **அன்பின் சிந்தியா. காதலைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

ஆனந்தமூர்த்தி கௌரீசன், மண்டூர்.


*காதலில் எப்போதும் ஒரு பைத்தியக்காரத்தனம் இருக்கிறது. ஆனால், பைத்தியக்காரத்தனங்களில் எல்லாம் ஒரு அர்த்தமிருக்கிறது.*

✦★

★ **விடுதலைப் புலி உறுப்பினர்கள் அலுவலகம் திறக்க வருவதற்கே இவ்வளவு பெருந்திரளான மக்கள் திரண்டு மேளதாளத்துடன் வரவேற்கிறார்களே?**

சி.சிவரூபன், வவுனியா.

*நல்லது தானே! சண்டையை நிறுத்திச் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் மூலம் ஒரு தீர்வைக் கேட்டுப் பெற்றுக்கொண்டு, நம் சமூகத்திற்குள் ஜனநாயக பூர்வமான நடைமுறைகளைக் கட்டியெழுப்ப ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. விடுதலைப் புலிகளும் ஜனநாயக ரீதியிலான அரசியற்செயற்பாடுகளுக்கு வருவதில் எங்கள் எல்லோருக்கும் எவ்வளவு சந்தோஷம் என்பதை எல்லா மக்களும் திரண்டு வெளிப்படுத்துவது நல்லது தானே!*



✦★

★ **பாதை திறந்த பின்...?**

ஆர்.சஜீவன், அனுராதபுரம்.

*பயந்தென்ன லாபம்? அதில் பயணம் நடத்திவிடு மறைந்திடும் பாபம்!*

★ **நடிகை மகேஸ்வரி நடிகை நக்மாவின் தங்கையா?**

பே. சுகந்தினி, இராஜகதமுவ.

*என்ன இப்படிக் குழப்புகிறீர்கள். மகேஸ்வரி ஸ்ரீதேவியின் தங்கை. நக்மாவின் தங்கை ஜோதிகா. இதெல்லாம் கூடத் தெரியாமல் பொது மக்கள் சிலர் இருக்கிறார்களென்பது என்னை மிகமிக ஆச்சரியப்படுத்துகிறது.*

✦★

# மன்னாதி மன்னன் 100

## கல்லுருவாகும் இளவரசர்கள்

வாரணாபுரி இளவரசி சற்குணவதியின் கதையை மாமன்னர் விக்கிரமாதித்தனின் ஒப்பற்ற அரியணையின் பதினோராவது படியில் நின்றிருந்த வித்துவ பூசணிப் பதுமை போஜமன்னரிடம் கூறி முடித்தது.

இந்தக் கதை கூறிமுடிப்பதற்குள் மாலை கடந்துவிட்டது. எனவே நன்றாகக் களைத்துப்போன மன்னர் போஜன் பின்வாங்கினார். தனது அரண்மனை சென்று உறங்கி ஒய்வெடுத்த பின்னர் அடுத்த நாட்காலையில் பொழுது புலர்வதற்கு முன்னரே எழுந்திருந்து காலைக்கடன்களை முடித்துவிட்டு, விக்கிரமாதித்த மன்னரின் அரியணை வைக்கப்பட்டிருந்த மாளிகைக்கு தனது பரிவாரங்களுடன் சென்றார்.

அந்த அரியணைக்குரிய பூசைகளை முறைப்படி முடித்துவிட்டு ஒவ்வொரு படியாக ஏறி பதினோராவது படியையும் கடந்து பன்னிரெண்டாவது படியில் காலடி வைத்தார். பன்னிரெண்டாவது படியில் நின்றிருந்த சாந்தகுண வல்லிப் பதுமை தனது வலது கரத்தை நீட்டி போஜ மன்னரைத் தடை செய்யது.

"போஜ மாமன்னரே இதுவரை எனது சகோதரிகளான பதினொரு படிகளிலும் நின்றிருந்த பதுமைகள் கூறிய கதைகளைக் கேட்டு எமது மாமன்னரான விக்கிரமாதித்த பூபதி யின் சிறப்பம்சங்களைக் கேட்டிருப்பீர்கள். அன்னாருடைய அதிபராக்கிரமச் செயல்களுக்கு உதாரணமாக விளங்கும் மற்றுமொரு கதையையும் கேட்டு முடித்த பின்னர் மேற்கொண்டு இந்தத் தெய்வீகமான சிம்மாசனத்தில் அமர்ந்து அரச பரிபாலனம் செய்ய உங்களுக்கு அருகதையிருக்கிறதா என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்" என்று முன்னறிவிப்புச் செய்துவிட்டு சாந்த குணவல்லிப் பதுமை தனது கதையைத் தொடர்ந்தது.



உஜ்ஜயினி மாகாளிப் பட்ட ணத்தில் நாடாறு மாத ஆட்சியை முடித்துக்கொண்டு தனது காடாறு மாத வாழ்க்கையை மேற்கொள்வதற்காக மாமன்னர் விக்கிரமாதித்தன் தனது அமைச்சரான பட்டியுடன் ஆலோசனைகளை நடாத்தினார்.

விக்கிரமாதித்த மாமன்னரின் தூதுவர்கள் நாலாதிக்கும் சென்று சேகரித்து வந்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அடுத்துத் தனது காடாறு மாத வாழ்க்கை எவ்வாறு அமைய வேண்டும் என்று மன்னர் விக்கிரமாதித்தன் அமைச்சர் பட்டி யுடன் திட்டமிட்டார். அவர்களிருவரும் திருமால் புரியை நோக்கியே மன்னர் விக்கிரமாதித்தனின் அடுத்த பயணம் அமைய வேண்டுமென்று முடிவுக்கு வந்தனர்.

வேதாளத்தின் துணையுடன் உஜ்ஜயினி மாகாளி பட்டணத்திலிருந்து மேற்கேயுள்ள திருமால்புரியை மன்னர் சென்றடைந்தார்.

திருமால்புரி நகரை தர்மராயன் எனும் அரசன் ஆட்சி புரிந்து வந்தார். அவருக்கு வீமாசூரன், லட்சுமிசூரன், மகாசூரன் என்று மூன்று புதல்வர்களும் அமிர்தகிரணக்கலை என்ற ஒரு புதல்வியும் இருந்தனர். இந்த நால்வருக்கும் உரிய கல்வியறிவையும், வீர விளையாட்டுக்கள் மற்றும் கலைகளையும் உரியமுறையில் புகட்டுவித்த மன்னர் தன்னுடைய கடமை முடிந்துவிட்டது என்று கருதி, தனக்குப் பின் திருமால்புரியை யார் ஆட்சி செய்வது என்று எவரையும் நியமிக்காமல் காலமாகிவிட்டார். இதனால், அரச அதிகாரிகள் மற்றும் மந்திரிகள் அனைவரும் நாட்டை ஆளப்போகும் மன்னரைத் தெரிவு செய்வதற்கு முன்னர் இளவரசர்கள் மூவரும் தேச சஞ்சாரம் செய்து நாடுநகரங்களைப் பற்றிய அறிவினைப் பெற்றுத் திரும்பிய பின்னர் அவர்களில் ஒருவரை அரசராகத் தேர்ந்தெடுப்பதென முடிவு செய்தனர். அது காலவரை அந்நாட்டு அமைச்சர்களையும், அதிகாரிகளையும் கொண்ட ஒரு சபை நிறுவப்பட்டு ஆட்சி நிர்வாகம் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

இளவரசர்கள் மூவரும் தேசசஞ்சாரம் செல்வதற்கு வேண்டிய ஆயத்தங்களை மேற்கொண்டு மூவரும் ஒன்றாகவே குதிரைகளில் சவாரி செய்துகொண்டு பல தேசங்களையும் கடந்து வந்தனர்.

## இராஜகுமாரன்

ஒருநாள் மாலையானதும் களைப் படைந்து விட்டனர். வழியில் கண்ட ஒரு பசுஞ்சோலையில் அன்றிரவுப் பொழுதில் தங்கி ஓய்வெடுக்கலாம் என மூவரும் தீர்மானித்தனர்.

சோலையில் நடுவிலிருந்த ஒரு பொய்கையில் நீராடிவிட்டு கனிவர்க்கங்களை ருசித்தபின்னர் குளக்கரையிலிருந்த ஓர் அரச மரத்தின் அடியில் படுத்துறங்கினர்.

இளவரசர்கள் படுத்திருந்த இடத்திற்கு மேற்கே மூன்று பாதைகள் தென்பட்டன. அப்பாதைகள் முடியுமிடத்தில் ஒவ்வொரு அழகிய மாளிகைகளும் காணப்பட்டன. இம் மாளிகைகளை இளவரசர்கள் எவரும் காணவில்லை. இவர்கள் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தபோது தேவ கன்னியர்கள் மூவர் வந்து தடாகத்தில் நீராடி விளையாடி விட்டு கரையில் வந்து சேர்ந்தபோது மூன்று அழகிய அரசகுமாரர்கள் படுத்துறங்குவதை கண்டு திகைத்தனர். அவர்களுடைய அழகில் மனதைப் பறிகொடுத்துவிட்டார்கள்.

அந்தச் சோலையின் மத்தியில் காணப்பட்ட மூன்று அழகிய மாளிகைகளும் தேவ கன்னியர் மூவருக்குமே சொந்தமானவை. ஒவ்வொரு நாள் இரவு வேளைகளிலும் அந்தச் சோலைக்கு வரும் தேவகன்னியர்கள் பொய்கையில் நீராடிவிட்டு அவரவர்களுக்குரிய மாளிகைகளில் படுத்துறங்கிவிட்டுப் பொழுது புலர்வதற்கு முன்னர் எழுந்து தேவலோகம் சென்று விடுவது வழக்கம்.

அன்று மாலையில் பொய்கையில் நீராடிவிட்டு கரைசேர்ந்ததும், அரசமரத்தினடியில் படுத்துறங்கிக்கொண்டிருந்த மூன்று இளவரசர்களையும் கண்டு அவர்களுடைய அழகில் மயங்கியவர்களாக, அம் மூவரின் உறக்கம் கலையாமல் ஒவ்வொரு இளவரசரையும் ஒவ்வொரு கன்னியும் எடுத்துக்கொண்டு மாளிகைக்குச் சென்றனர். இரவு முழுவதும் அந்த இளவரசர்களுடன் சல்லாபமாக மகிழ்ந்திருந்துவிட்டுப் பொழுது புலரும்போது இளவரசர்களைக் கல்லாக ஆக்கி விட்டுத் தேவலோகம் சென்று விட்டார்கள்.

மாலையானதும் தேவகன்னியர் கள் மூவரும் அந்தச் சோலைக்கு வந்து பொய்கையில் நீராடிவிட்டு மாளிகைக்குச் சென்று, இளவரசர்களை மீண்டும் உயிர் பெறச் செய்து அவர்களுடன் உல்லாசமாகப் பொழுதைப் போக்கிவிட்டு அதிகாலையில் மீண்டும் அவ்விளவரசர்களைக் கல்லா கச் சபித்துவிட்டுத் தேவலோகம் சென்றனர். இவ்வாறு பல நாட்கள் தொடர்ந்தன.

ஒரு நாள் இளவரசர்களில் இளையவனான மகாசூரன், அவனுடனிருந்த தேவ கன்னிகையான ரூபகன்னிகை தூங்கியதும் எழுந்து மாளிகைக்கு வெளியே சிறிது தூரம் உலவலானான். அப்போது அருகேயிருந்த புதரொன்றில் ஒளிவெள்ளம் பரவியது. காரணத்தை அறிய அந்தப் புதரின் அருகே சென்றான். அங்கிருந்த தேவதை ஒன்று "கொடுமை... கொடுமை... கொடுமை..." என்று மூன்று முறை கூறியது. அந்தத் தேவதைக்கு அருகில் சென்றதும், "அரசகுமாரா! உன்னையும் உன் சகோதரர்களையும் கொடுமையிலிருந்து காப்பாற்ற எண்ணியே நான் இங்கு வந்துள்ளேன். நாட்டை ஆளவேண்டிய இளவரசர்களான நீங்கள் உங்கள் வாழ்நாள் முழுவதும் இவ்வாறு பகல் பொழுதில் கல்லாகக் கிடக்க வேண்டுமா? இக்கொடுமையி லிருந்து மீள வேண்டாமா?" என்று அந்தத் தேவதை கேட்டது.

மகாசூரன், "தாயே! நானும் இந்தத் துர்ப்பாக்கியமான நிலையை எண்ணி வருந்திக்கொண்டு தான் இருக்கிறேன். இதிலிருந்து மீள இதுவரை வழி எதுவும் தெரியவில்லை. ஏதாவது மார்க்கம் இருந்தால் தயவு செய்து கூறினால் நாங்கள் என்றென்றும் உனக்குக் கடமைப்பட்டவர்களாக இருப்போம்" என்றான்.

தேவகன்னியர்களிடமிருந்து தப்பும் வழிமுறைகளை அத் தேவதை மகாசூரனிடம் கூறத்தொடங்கியது.

(மன்னன் வருவான்...)

---

# காதில பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை *-காதில பூ கந்தசாமி-*

எமலோகத்தில எங்கட தலைவர்மார் கதைச்ச கதைகளைக் கேட்டிட்டு நானும் என்ர பங்குக்கு அமிரண்ணையிட்டைக் கேட்டன். அண்ணை வரலாற்றில எங்கோ பிழை நடந்திருக்குதெண்டியளே, முதல் பிழை எப்ப நடந்தது?

***அமிர்:*** என்னக் கேட்டால் ஆயுதப் போராட்ட காலகட்டத்திலதான் மிஸ்ட்டேக்ஸ் நடந்திருக்கு.

***உமா மகேஸ்வரன்:*** அண்ணை, நீங்கள் அபாண்டமா எங்களில பழி போடுறீங்கள். ஆயுதப் போராட்டத்துக்குத் தூண்டுதலாயிருந்ததும் நீங்கள். அதுக்குப் பிறகு, உங்கட குறுகின அரசியல் நோக்கங்களுக்கு அதைப் பயன்படுத்திக் கொள்ளப் பாத்ததும் நீங்கள். அது உங்கட கையை மீறிப் போகுமளவு, அதுக்கு வழிகாட்டத் தவறி, அரசியல் தலைமை குடுக்கத் தவறி. இதோடயே அடையாளம் காணப்பட்டிருக்கக்கூடாதெண்டு ஒதுங்கிக் கொண்டதும் நீங்கள். பிறகு வளர்த்த கடா மார்பில பாயேக்க ஒப்பாரி வைச்சு என்ன புண்ணியம்?

***சிறீசபாரத்தினம்:*** உமா சொன்னது மெத்தச் சரி. நீங்கள் நினைச்சது இந்த ஆயுதப் போராட்டம் நீங்கள் உசுக்காட்டின உடன ஒடிப்போய்ப் பாயிற அலுசேஷன் நாயா வளருமெண்டு. ஆனால் அது நன்றியுள்ள நாயாயில்ல, புலியாத்தான் வளருதெண்டு.தெரியாமல் பலியாகிப் போட்டியள். துரோகி துரோகியெண்டு நீங்கள் கைநீட்டிறவையளெல்லாரையும் காவு கொண்டு வந்த ஆயுதம் கடைசியா உங்கட உசிரையே துரோகியெண்டு சொல்லிப் பசியாறிப்போட்டுது.

***பத்மநாபா:*** அமிர் அண்ணை, நான் சொல்லுறனெண்டு கோவியாதையுங்கோ. ஆயுதப் போராட்டத்துக்கு முன்னுக்கும் மிஸ்ட்டேக்ஸ் நடந்திருக்கு. உங்கட அஹிம்சைப் போராட்டத்தால முடியாததால தான் ஆயுதப் போராட்டமே ஆரம்பிச்சது. அஹிம்சைப் போராட்டத்திலயும் நீங்கள் சிங்கள இனவாதத்துக்கு எதிரா தமிழ் இனவாதத்தத்தான் ஊதிப் பெருக்க வைச்சு அதைப் பாராளுமன்ற அரசியலுக்கான வாக்கு வங்கியாக்க முனைஞ்சியளே தவிர, பக்குவப்பட்ட ஒரு மக்கள் போராட்டத்துக்குத் தயாராக்கேல்ல. சிங்களவனின்ர தோலில செருப்புத்தைப்பனெண்ட குரூரத்தனமான இனவெறிப் பேச்சுக்களால உசுப்பிவிட்டிட்டு வெறும் வாக்குகளச் சுருட்டிக்கொண்டு ஒதுங்கியிட்டியள்.

***உமா:*** ஒத்துக்கொள்ளுறன் தம்பிமாரே. நாங்கள் அரசியல் வாதிகள் கூடக் குறையப் பேசுவம். ஒவ்வொருத்தருக்கும் தனித்தனி நலன்களெண்டும் இருக்கத்தான் செய்யும். ஆனால் நீங்கள் இலட்சியவாதிகளெண்டு உங்களையே அர்ப்பணிக்க வெளிக்கிட்ட போராளிகள். ஏன் நீங்கள் பிரிஞ்சு நிண்டனிங்கள்? அரசுக்கு எதிரா நிக்கிறதுக்குப் பதிலா உங்களுக்குள்ளேயே ஒருத்தருக்கு ஒருத்தர் எதிராப் போனியள். ஐக்கிய முன்னணியெண்டு கட்டப்போய் அடுத்தநாளே அடிபட்டியள், சுடுபட்டியள், தடை செய்தியள். சனத்தக் காக்கவெண்டு வெளிக்கிட்ட நீங்கள் சனத்தை மிரட்டி, கப்பம் வரி வாங்கி, துப்பாக்கிக்குக் கீழ அடக்கியாண்டியள். கடைசியில அரசாங்கத்தை எதிர்க்கவைக்கிறதுக்குப் பதிலா உங்கட ஆயுதத்துக்கே அஞ்சியொடுங்கிப்போன, சுயமாச் சிந்திக்கவோ, பிழைசரியச் சுட்டிக்காட்டவோ ஏலாத கொத்தடிமைகளப்போல வெல்லே ஆக்கிப் போட்டியள்.

***காதில பூ:*** அமிரண்ணை வரலாற்றில எங்கயோ தவறு நடந்திருக்குதெண்டார். இப்ப பாக்க வரலாறு முழுக்கத் தவறாக் கிடக்குது.

***உமா:*** ஏனண்ணை நாங்களும் மக்கள் போராட்டந்தானே நடத்தின நாங்கள்.

***நாபா:*** இல்லை உமா, மக்களுக்காகப் போராட வெளிக்கிட்டமேயில்லாமல் மக்கள் போராட்டம் நடத்தேல்லை. மக்கள் இங்க வெறும் பார்வையாளர்களாத்தான் இருந்தார்கள்.

***சிறீ:*** ஒமோம். ஒரு புட்போல் மெச்சைப் பாக்கிறமாதிரி நடக்கிற சண்டையில கைதட்டிக்கொண்டிருந்தாங்கள். அதாலதான் இயக்க மோதல்களிலையும் சக போராளிகளைச் சுட்டு டயர்போட்டெரிக்கேக்க சோடா உடைச்சுக் குடுத்தாங்கள்.

***நாபா:*** அப்பிடி ஒரேயடியாக் கொச்சைப் படுத்தாதயும்.

***சிறீ:*** எத்தனையோ சனம் தப்பியோடின பெடியளத் தங்கட வீடுகளில மறைச்சுவைச்சுக் காப்பாத்தியனுப்பியுமிருக்கு.

***அமிர்:*** எது எப்படியோ, எல்லாரும் தான் தவறு செய்துபோட்டம்.

***சிறீ:*** சனமும் சேந்துதான்.

***உமா:*** சனமென்னசெய்யும் பாவம்.

***சிறீ:*** இந்தச் சனம் இப்பிடியே இருக்கும் வரைக்கும் ஏமாறத்தான் வேணும்.

***நாபா:*** மக்கள் சிந்திக்க வேணுமெண்டால் மக்களைச் சிந்திக்க வைக்க நாங்களென்ன செய்தம்? மக்களை அரசியல்மயப் படுத்தினமா? ஒண்டில் வெறும் உணர்ச்சியூட்டி உந்தித் தள்ளினம் அல்லது அடக்கி ஒடுக்கி மௌனிக்கச் செய்தம். தலைமை கள்தான் தவறுவிட்டிட்டம். மக்களல்ல.

***கா.பூ:*** எல்லாம் சரிதான். இப்பிடியான டிஷ்கஷென்கள் பூமியில நடந்தாலாவது சனம் அரசியல்மயப்படும். ஒப்பினாக் கதைக்க இப்ப யாருக்குத் துணிவிருக்கு.

***சிறீ:*** ஏன், நீர் கதைக்கலாமே?

***கா.பூ:*** பிறகு நானும் இங்க வந்து சேந்திடவேண்டியதுதான்.

*(எல்லோரும் சிரிக்கிறார்கள்)*

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

---

# இந்தவாரம் உங்கள் பலன்

**14.04.2002 தொடங்கி 20.04.2002வரை**

## சோதிட மாமணி தில்லை

### கிரக நிலை

| | | | |
|---|---|---|---|
| மேடம் | - சூரியன், வெள்ளி, புதன் | மிதுனம் | - வியாழன் |
| இடபம் | - செவ்வாய், சனி, இராகு, | விருட்சிகம் | - கேது |

*சந்திரன், மேடம், இடபம், மிதுனம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.*

**மேடம்:**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில் விடயங்களில் அவதானமும், பெரியோர்களின் உதவிகளில் முன்னெச்சரிக்கையும் தேவை. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உத்தியோகஸ்தர்கள் விழிப்புடன் செயல்படுவது நல்லது. மாணவர்கள் கல்வியில் கூடிய சிரத்தை எடுக்க வேண்டும். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: புதன்,
அதிஸ்ட இல.: 5.

**இடபம்:**
(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) மனக்குறை நீங்கும். தேகாரோக்கியம் திருப்தி தரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உத்தியோகஸ்தர்கள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நன்மை தரும்.விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்,
அதிஸ்ட இல.: 4.

**மிதுனம்:**
(மிருகசீரிடத்து பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) தொழில் கஷ்டங்கள் தீரும். பணவருவாய் திருப்தி தரும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளுடன் விழிப்பாக நடந்து கொள்ளவும். மாண வர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியா பாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வியாழன்,
அதிஸ்ட இல.: 7.

**கர்க்கடகம்:**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) முயற்சிகளில் வெற்றியும், பொருளாதாரச் சிறப்பும் உண்டாகும். குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். உத்தியோகஸ்தர்கள் பதவிகளில் உயர்ச்சி பெறுவர். மாணவர்களுக்கு கல்வி மேன்மை உண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்,
அதிஸ்ட இல.: 3.

**சிங்கம்:**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) செய்தொழில் நன்மை. காரியானுகூலம். பெரியோர் உதவி, முயற்சிகளில் வெற்றியுண்டாகும். உத்தியோகத்தில் இருந்து வந்த தொல்லைகள் மறையும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்வுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி,
அதிஸ்ட இல.: 6.

**கன்னி:**
(உத்தரத்து பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) மனதில் கஷ்ட நிலைதோன்றும். பணவரவு திருப்தி தராது. பெரியோர்கள் பகைத்துக்கொள்வர். உத்தியோகத்தில் இருந்து வந்த தொல்லைகள் மறையும். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்,
அதிஸ்ட இல.: 7.

**துலாம்:**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) தொழில் ரீதியாக முன்னேற்றம் ஏற்படும். பணவரவு, காரியானுகூலம் சிறந்து விளங்கும். உத்தியோகத்தில் சிலர் பிரச்சனைகளுக்கு ஆளாகுவர். மாணவர்களுக்கு கல்வியில் மந்தநிலை தோன்றும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்,
அதிஸ்ட இல.: 4.

**விருட்சிகம்:**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) முயற்சிகளில் கூடிய கவனம் தேவை. பெரியோர் உதவியுண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உத்தியோகத்தர்கள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நன்மை தரும். மாணவர்கள் கல்வியில் உயர்வடைவர். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி,
அதிஸ்ட இல.: 3.

**தனு:**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழிலில் மந்தநிலையும், பணவரவு குறைவும் ஏற்படும். குடும்பத்தில் திடீர் செலவுக்கு இடம் தரும். உத்தியோகத்தில் உள்ளோர் எதிலும் விழிப்புடன் செயற்படுவது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் மந்தநிலை காட்டும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: புதன்,
அதிஸ்ட இல.: 2.

**மகரம்:**
(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) எதிர்பார்த்த கருமங்கள் நிறைவேறும். பணவரவு திருப்தி தரும். உத்தியோகத்தில் உள்ளோர் கவன முடன் நடந்துகொள்ளவும். மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்,
அதிஸ்ட இல.: 5.

**கும்பம்:**
(அவிட்டத்து பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) தொழிலில் சிறப்பு, பணவரவு, காரியானுகூலம், சிறந்து விளங்கும். உத்தியோக ரீதியாக இருந்து வந்த தடைகள் விலகும். மாணவர்களுக்குக் கல்விச் சிறப்புண்டு. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வியாழன்,
அதிஸ்ட இல.: 7.

**மீனம்:**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) முயற்சியில் வெற்றியுண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சியும், சந்தோஷமும் நிலவும். உத்தியோக ரீதியாக இருந்து. வந்த கஷ்டங்கள் மறையும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சியுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்,
அதிஸ்ட இல.: 5.




# மகிழ்ச்சி



# பல்லுறுதி

← இரும்புக் கம்பிகள் சிலவற்றை பற்கள் மூலம் நறுக்கி, வளைத்து உலகிலேயே மிகவும் பலமான பற்களுக்குச் சொந்தக்காரர் என்ற கின்னஸ் சாதனையை நிலைநாட்டும் முயற்சியில் இலங்கையரான காமினி சரத்குமார என்பவர் ஈடுபட்டார். கொழும்புக் கோட்டை ரயில் நிலையம் முன்பாக பெருந்தொகை மக்கள் பார்த்திருக்க 12 மி.மீ இரும்புக்கம்பிகள் 50ஐ அவர் தன் வாயில் வைத்து வளைத்தும் காட்டினார். கம்பிகளைத் தன் மோவாய் பற்களினால் அழுத்தமாகக் கடித்து இருமுனைகளையும் கைகளால் அழுத்தி இவ்வாறு கம்பிகளை வளைத்தார் இந்தச் சாதனையாளர்.







← ஆப்கானிஸ்தான் போர் இன்னும் முடிவுக்கு வராவிட்டாலும் அங்கு இயல்பு வாழ்க்கை ஓரளவு சீர்பெற்று வருகின்றது. பள்ளிக்கூடங்கள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன. தலிபான் ஆட்சியின் பின்னர் 'ஆஷுரா' கொண்டாட்டங்களில் காபூல் மக்கள் சமீபத்தில் ஈடுபட்டனர். தலிபான்களால் தடைவிதிக்கப்பட்டிருந்த கேளிக்கை நிகழ்ச்சிகள் பல இரவிரவாக நடைபெற்றது. வெளிநாட்டுப் பொருட்களும், ஆடம்பர உபகரணங்களும் ஆப்கானிஸ்தானுக்குள் தலைகாட்டத் தொடங்கியுள்ளன. காபூலில் நடைபெறும் கொண்டாட்டம் ஒன்றில் விற்பனை செய்வதற்காக சைக்கில்களில் வர்ண பலூன்களை எடுத்துச் செல்லும் வியாபாரிகளைத் தான் இங்கு காண்கிறீர்கள்.

↓ இந்தோனேசிய இராணுவத்தில் உள்ள விசேட அதிரடிப்படையினருக்கு வழங்கப்படும் பயிற்சியின் ஒரு கட்டம் தான் இது. உயிருடன் இருக்கும் பாம்பொன்றைப் பிடித்து வந்து அதன் தலையை நசுக்கி வாயிலிருந்து வரும் பாம்பு இரத்தத்தைப் பருகுகிறார் ஒரு வீரர். படை நடவடிக்கைகளின் போது காடுகளில் அதிக நாட்களைக் கடத்த நேரிட்டால் அவசர நிலைமைகளின் போது காட்டு வாழ்க்கைக்கு ஈடுகொடுப்பது எப்படியென்று வீரர்களைப் பழக்கப்படுத்துவதே இந்தப் பயிற்சியின் நோக்கம். பாம்புகளின் விஷம், இரத்தம் போன்றவற்றை படையினரின் உடலில் செலுத்தி கொஞ்சம் கொஞ்சமாக இசைவாக்கம் அடையச்செய்யும் முயற்சிதான் இங்கே நடைபெறுகிறது.

# பதக்கம்



# பயிற்சி



பாம்பென்றால் படையும் நடுங்கும் என்பார்கள் பாம்பின் இரத்தத்தைக் குடித்து வளரும் இந்த படைவீரர்களிடம் இதெல்லாம் சரிப்பட்டுவராது போலிருக்கிறது.

↑ அமெரிக்காவின் சோல்ட் லேக் நகரில் அண்மையில் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளின் போது ஸ்கேட்டின் விளையாட்டில் ஆண்-பெண் இணைந்தாடும் இரட்டையர் போட்டியில் ரஷ்ய வீரர்களுக்குத் தங்கப்பதக்கம் கிடைத்தது. ஆனால், இரண்டாமிடத்தை வென்ற கனடா நடுவர்களின் தீர்ப்பை ஆட்சேபித்தது. போட்டியின் போது ஒளிப்பதிவு செய்யப்பட்ட விடியோப் படங்களைப் போட்டுப்பார்த்த ஒலிம்பிக் சங்கத்துக்கு யாரை முதலிடத்துக்கு தெரிவு செய்வது என்ற குழப்பம் தொற்றிக்கொண்டது. நீண்ட விவாதம் நடத்திய நிர்வாகிகள் மூன்று நாட்களின் பின்னர் வித்தியாசமான ஒரு முடிவுக்கு வந்தனர். அதாவது ஒரே போட்டியில் இரண்டு தங்கப் பதக்கங்களை வழங்குவதென்று தீர்ப்பளிக்கப்பட்டது. இவ்வாறான ஒரு சம்பவம் நடைபெற்றது ஒலிம்பிக் வரலாற்றில் இதுவே முதல் தடவை. தங்கப்பதக்கம் வென்றவர்களைத் தான் இங்கு காண்கிறீர்கள்.

எவ்வாறெனினும் நடுவர்களால் அறிவிக்கப்பட்ட தீர்ப்பொன்றை போட்டியாளர்களின் ஆட்சேபனையின் பேரில் மாற்றியமைத்தது தவறான முன்னுதாரணமாக அமைந்துவிடலாம் என்ற கருத்துக்களும் பரவலாக முன்வைக்கப்பட்டன.



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 9A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் ஏப்ரல் 14ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.